# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2088/49 - 2018 සැප්තැම්බර් මස 12 වැනි බදාදා - 2018.09.12

*2088/49 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாண மாகாண சபை**

*மத்திய மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க கூட்டுறவுச்சங்க நியதிச் சட்டம்*

*கூட்டுறவுச் சங்கத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஒழுங்கு விதிகளை தயாரிக்கும் முகமாகவும், கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதற்காகவும், பதிவு செய்வதற்காகவும் நிர்வகிப்பதற்குமான சம்பந்தப்பட்ட சட்டங்களை ஒன்றிணைப்பதற்காகவும் மற்றும் திருத்துவதற்காகவும் அதோடு தொடர்புடைய மிகச் சிறந்த விடயங்களுக்கான ஒழுங்கு விதிகளைத் தயாரிப்பதற்காகவும் மற்றும் மத்திய மாகாண சபையின் 1993 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க (திருத்தப்பட்ட) நியதிச் சட்டத்தின் 1990 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க நியதிச் சட்டத்தை இரத்து செய்வதற்கான நியதிச் சட்டமாகும். இந்நியதிச் சட்டம் 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கச் சட்டத்திற்கேற்புடையதாகும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாண சபையினால் இவ்வாறு விதந்துரைக்கப்படுகிறது.*

*01.* இந்நியதிச்சட்டமானது மத்திய மாகாண மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க நியதிச் சட்டமென அறிவிக்கப்படுகிறது. *சுருக்கப் பெயர்.*

**1 ஆவது அத்தியாயம்**

**பதிவாளர், பிரதி, சிரேஷ்ட உதவி மற்றும் உதவிப் பதிவாளர்களை நியமித்தலும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்களும் அந்த ஆணையாளர்களுக்கு உதவுவதற்காக நியமிக்கப்படுபவர்களின் அதிகாரம்**

*பதிவாளர், பிரதி, சிரேஷ்ட உதவி மற்றும் உதவிப் பதிவாளர்களை நியமித்தலும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்களும் அந்த ஆணையாளர்களுக்கு உதவுவதற்காக நியமிக்கப்படுபவர்களின் அதிகாரம்.*

*02. (1)* இலங்கையில் மத்திய மாகாணத்திற்கான கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் மற்றும் தேவைப்படும் விதத்தில் யாராவது ஒரு பிரதி, சிரேஷ்ட, உதவி அல்லது உதவிப் பதிவாளர்கள் பலரை நியமிக்க முடியும்.

*(2)* இந்நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் தயாரிக்கப்பட்ட சில நியதிகளின் பதிவாளருக்கு உரித்தான சகல அதிகாரங்களும் அல்லது அவற்றில் சிலவற்றை யாராவது பிரதி, சிரேஷ்ட உதவி அல்லது உதவிப் பதிவாளர் ஒருவருக்கு மத்திய மாகாணத்தின் மாகாண சபையினால் கூட்டுறவு விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களால் பொதுவாக அல்லது விசேட கட்டளையின் மூலம் வழங்க முடியும்.

*(3)* மத்திய மாகாண ஆளுநர் அவர்களால் நியமிக்கப்படும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக அல்லது கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக அந்த நேரத்தில் செயல்படுத்துவதற்காக நியமிக்கப்படும் ஒருவருக்கு இந்நியதிச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ள அல்லது செய்யப்பட்டுள்ளதாக கருதப்படும் ஏதாவது

விதிகளிலிருந்து கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் இருக்க வேண்டுமென்பதுடன் அவரால் அந்த அதிகாரங்களை செயல்படுத்த முடியும்.

(4) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு உதவும் முகமாக நியமிக்கப்படும் ஒவ்வொருவருக்கும் இந்நியதிச்சட்டத்தின் கீழ் மற்றும் அதன் கீழ் செய்யப்பட்டுள்ள அல்லது செய்யப்பட்டுள்ளதாக கருதப்படும் ஏதாவது விதிகளிலிருந்து பதிவாளருக்குரிய அதிகாரங்களுக்கிடையில் மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் கூட்டுறவு விடயப்பொறுப்பு அமைச்சர் அவர்களால் இச்சரத்தின் கீழ் செய்யப்படும் சாதாரண அல்லது விஷேட கட்டளையில் உறுதியாக குறித்துரைக்கப்படக் கூடிய அதிகாரங்கள் இருக்க வேண்டுமென்பதுடன் அந்த ஒவ்வொருவராலும் அந்த அதிகாரத்தை நடைமுறைப்படுத்த முடியும்.

## II வது அத்தியாயம்

### பதிவு செய்தல்

*பதிவு செய்யப்படக் கூடிய சங்கங்கள்03*

3. (1) இதன் பின் உள்ளடக்கப்படும் ஒழுங்கு விதிகளின் கீழ் :-

(அ) சொந்த உறுப்பினர்களின் பொருளாதாரம், கல்வி, சமூக, கலாச்சார நலனுக்கு காரணமாகும் நிரந்தர சேவைகளை கூட்டுறவு கொள்கைகளுக்கேற்ப தயாரித்தல் சொந்த நோக்கத்திற்காக உள்ள சங்கமொன்று.

(ஆ) (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கங்களின் செயற்பாடுகளை இலகுவாக்குவதை நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்ட, சங்கங்களை தமது அங்கத்தவர்களாகப் பதிவு செய்து கொண்டுள்ள சங்கங்களை உள்ளடக்கிய சங்கமொன்று மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்புகளைக் கொண்டதான அல்லது அவ்வாறற்றதான சங்கமாக நியதிச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படலாம்.

எனினும் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று அங்கத்துவம் வகிப்பதான சங்கமொன்றினைப் பொருத்தமட்டில் அதன் பொறுப்புகள் மட்டுப்படுத்தப்பட்டதாய் அமைதல் வேண்டும்.

*பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்.*

4. (1) (அ) உறுப்பினர்களை மட்டும் கொண்டுள்ள சந்தர்ப்பங்களில் உறுப்பினர்கள் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும், சங்கம் இயங்கவிருக்கம் பிரதேசத்தில் வசிப்பவர்களாகவும் சேவையில் ஈடுபட்டிருப்பவர்களாகவும், அசையாத சொத்துக்களுக்கு உரித்துடையவர்களாகவும், சங்கத்தினால் செய்யப்படுகின்ற சேவைகளை உபயோகப்படுத்திக்கொள்ளக் கூடிய தன்மையுடையவர்களாகவும், இருப்பவர்கள் குறைந்தபட்சம் இருபத்தைந்து பேர்களாவது இல்லாதிருப்பின் அல்லது,

(ஆ) பதிவு செய்யப்பட்ட சங்கங்களை மட்டும் உள்ளடக்கியதாக அமையுமாயின் குறைந்தபட்சம் ஐந்து அங்கத்தவராவது இல்லாதிருப்பின்,

*சட்டரீதியான அமைப்பு.*

(இ) (i) சங்கத்தினால் செய்யப்பட வேண்டுமென உத்தேசிக்கப்படுகின்ற நடவடிக்கைகள் பொருளாதார ரீதியில் பொருத்தமானவைதான் என்பதற்கும்,

*நிர்வாகக் குழுவின் கட்டமைப்பு*

(ii) சங்கத்தினால் பிரேரிக்கப்பட்டுள்ள உத்தேச யாப்பு உப விதிகள் அந்த நியதிச்சட்டத்தின் படியோ அதன் கீழ் ஆக்கப்பட்டுள்ள ஏதேனும் கட்டளை விதிகளுக்கு அனுகூலமாகாது என்பதற்கும்.

(ஈ) விதிகளினால் தீர்மானிக்கப்பட்டுள்ள விதத்தில் அறிக்கையையும் சிபாரிசினையும் சங்கத்தால் பெற்றுக்கொள்ளாதிருப்பின்.

(உ) உத்தேச யாப்பு உப விதிகள் மேற்படி விடயத்துக்காகவே அழைக்கப்பட்ட பொதுக் கூட்டமொன்றில் பதிவாளர் அல்லது அவரது பிரதிநிதி இல்லாத போது நிறைவேற்றப்பட்டில்லாதிருப்பின்.

சங்க செயற்குழு உறுப்பினர்களில் குறைந்தபட்சம் இருவராவது பதினெட்டு வயதிற்கும் முப்பத்தைந்து வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருக்க வேண்டும் எனும் விதி, சங்கத்தின் உத்தேச யாப்பு உபவிதிகளில் சேர்க்கப்படாதிருப்பின், மற்றும் அதன்படி சங்கத்தின் செயற்குழுவில் நியமிக்கப்பட்டதன் பின்பு உப விதிகளில்

குறிப்பிடப்பட்ட பதவிக் காலத்திற்குள் முப்பத்தைந்து வயதைக் கடந்தபின் செயற்குழுவின் அங்கத்துவத்திற்கு பொருத்தமற்றது என உத்தேச யாப்பு உப விதிகளில் உள்ளடக்கப்படாதிருப்பின்.

(ஊ) பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப்படிவத்தில் கைச்சாத்திடும் சகல உறுப்பினர்களும், தமது அங்கத்துவம் தொடர்பான கொடுப்பனவுகளை பூரணப்படுத்தாதிருப்பின்.

(எ) பதிவு செய்வதற்குரிய நடவடிக்கைகளுக்காக பதிவாளரினால் கோரப்படுகின்ற சகல தகவல்களையும் வழங்குவதற்கு அச்சங்கத்தினால் புறக்கணித்திருப்பின்,

(ஏ) விதிகளின்படி தீர்மானிக்கக் கூடிய பதிவு செய்வதற்கான கட்டணத்தை செலுத்தாதிருப்பின்.

(ஐ) சங்கத்தின் உப விதிகளில் குறிப்பிடப்பட்ட விதத்தில் அங்கத்துவம் முடிவடைந்ததும் சங்கத்தின் தேர்தல்களில் பங்குபற்றவோ பதவிகளுக்கு நியமிப்பதற்கு அங்கத்தவர்களால் வேறு அடையக்கூடிய தகுதிகள் உப விதிகளின் மூலம் உத்தரவிடப்பட்டிருக்காவிட்டால்.

(ஒ) தேசிய கூட்டுறவு கொள்கை உரை மற்றும் நல்லாட்சிக்கான பயன்பாட்டு குறியீடுகளுக்கேற்ப செயற்குழு செயற்படுவதாக உப விதிகளில் சேர்க்கப்படாதிருப்பின்,

எந்தவொரு சங்கமும் இந்த நியதிச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்படக் கூடாது.

(2) (அ) இதற்கு முன் சட்டமூலம் அல்லது நியதிச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட இடைக்கால அரசியலமைப்பின் மேலே 1வது உப விதியில் உ, ஊ, எ உப விதிகளின் கீழ் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளும் விதிமுறைகளும் உள்ளடக்கப்பட்டிருக்காவிட்டால் அவை சங்கத்தின் இடைக்கால அரசியலமைப்பில் சேர்த்துக்கொள்ள பதிவாளரால் சங்கங்களின் செயற்குழுக்கள் மற்றும் செயலாளர்களுக்கு கட்ட வேண்டுமென்பதுடன் அக்கட்டளைகளின்படி அவர்கள் செயல்பட வேண்டும்.

(ஆ) இந்த விதிகளின் செயல்களுக்காக மேலேயுள்ள விதி முறைகளில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் திருப்தியடையக் கூடியதாக இருந்தமைக்கு ஏதாவது அப்பிரச்சினைகள் மேலெழும் சந்தர்ப்பத்தில் பதிவாளரால் அப்பிரச்சினை சம்பந்தமாக தீர்மானமெடுக்க வேண்டுமென்பதுடன் அவரது தீர்மானம் இறுதியானதாக இருக்க வேண்டும்.

(இ) இந்நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்புகளையுடைய சகல சங்கங்களினதும் பெயரில்" வரையறுக்கப்பட்ட" எனும் சொல் முதற் சொல்லாக இருக்க வேண்டும். அதன் தமிழ் மற்றும் ஆங்கிலத்தின் சமனான சொல் அந்தப் பெயரின் பகுதியாக இருக்க வேண்டும்.

5. (1) பதிவு செய்வதற்காக தீர்மானிக்கப்படும் ஏதாவதொரு விதத்தின் படியிலான விண்ணப்பப்படிவமொன்றை பதிவாளருக்கு அனுப்ப வேண்டும். பதிவு செய்வதற்காக விண்ணப்பித்தல்.

(2) அவ் விண்ணப்பப்படிவம் :-

(அ) ஏதாவது ஒரு சங்கத்தின் அங்கத்தவர்கள் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றில் இல்லாத விடத்து. 4(1) அ சரத்தின் விதிகளின் படி தகுதிபெற்ற ஒருவர் ஏனைய இருபத்தைந்து பேர்களினாலும் கையொப்பமிட வேண்டும். மேலும்

(ஆ) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் அங்கத்தவரான ஒருவர் சங்கம் சம்பந்தமாகும் போது பதிவு செய்யப்பட்ட அவ்வாறான சகல சங்கங்களுக்காகவும் சட்டத்தின் மூலம் குறித்துரைக்கப்படும் விதத்தில் அதிகாரம் கிடைத்துள்ள ஒருவரால் கையொப்பமிடப்பட வேண்டும்.

(3) விண்ணப்பத்துடன் :-

(அ) உத்தேச யாப்பு விதிகளின் இரு பிரதிகள்.

(ஆ) 4.1 இதன்படி சங்கம் செயற்படுத்தவுள்ள உத்தேச நடவடிக்கைகள் பொருளாதார பணிகளுக்குரிய தகைமைச் சான்றிதழ் ஒன்று,

(இ) சங்கத்தைப் பதிவு செய்வதற்கான பிரேரணை நிறைவேற்றப்பட்ட பொதுச் சபைக் கூட்டத்தின் அறிக்கையும் வரவுப்பதிவும் சம்பந்தப்பட்ட விபரங்களும் யாப்பு உப விதி நிறைவேற்றப்பட்ட அறிக்கையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சான்றிதழ் பிரதிகள்.

(ஈ) விண்ணப்பப்படிவத்தில் கையொப்பமிடும் உறுப்பினர்களால் சந்தா செலுத்தியமையை உறுதிப்படுத்துகின்ற சந்தாப்பணம் செயற்குழுவின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்ற செயற்குழுவின் சான்றிதழ் என்பன சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பதிவு செய்தல்.

6. (அ) சங்கத்தினால் இந்நியதிச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கேற்ப செயல்பட்டிருப்பதாக, அச்சங்கத்தினால் நிறைவேற்றவுள்ளதான நடவடிக்கைகள் பொருளாதார ரீதியில் உண்மையானது எனவும் சங்கத்தின் உத்தேச உப விதிகள் இந்நியதிச் சட்டத்திற்கும் விதிகளுக்கும் முரணற்றது எனப் பதிவாளர் திருப்தியடைவாரெனின் தாம் பொருத்தமானது எனக்கருதுமிடத்து அவரால் அச்சங்கத்தையும் அதன் உத்தேசத் திட்டங்களையும் பதிவு செய்ய முடியும். ஏதாவது சங்கமொன்றைப் பதிவு செய்வதை பதிவாளரால் நிராகரிப்பதற்கு எதிரான முறைப்பாடொன்றை அது சம்பந்தமாக குறித்துரைக்கப்பட்டுள்ள விதிகளின்படி அமைச்சர் அவர்களுக்கு சமர்ப்பிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

(ஆ) கூட்டுறவு வங்கி மற்றும் நிதிச் சேவைகள் அல்லது தங்க நகைகளை அடகுவைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பதிவு செய்யப்பட்ட இடைக்கால அரசியலமைப்புப்புகளின் மூலம் ஒழுங்குகள் மேற்கொண்டிருக்கப்பட்டிருந்தால் கூட்டுறவுச் சங்கத்தினால் கூட்டுறவு விதிகளின் மூலம் அல்லது பதிவாளரால் நிச்சயிக்கப்படும் விதத்தில் தற்போது ஏற்ற நிதிச் சேவையினை அல்லது தங்க நகைகளை அடகுவைக்க நடவடிக்கை எடுக்க முடியும்.

பதிவு செய்வதற்கான சாட்சி.

7. (1) பதிவாளரால் கையொப்பமிடப்பட்ட பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் அச்சான்றிதழில் குறிப்பிடப்பட்ட சங்கத்தின் பதிவு ரத்துசெய்யப்பட்டுள்ளதென உறுதிப்படுத்தப்பட்டால் அன்றி, அச்சங்கம் சரியான முறையில் பதிவு செய்யப்பட்டுள்ளதென்பது சாட்சியாக வேண்டும்.

(2) 6வது விதியின் கீழ் சங்கமொன்று பதிவு செய்யப்படும் போது பதிவாளரால் அச்சங்கத்திற்கு பதிவுச் சான்றிதழ் ஒன்றை விநியோகிக்க முடியும்.

பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் இடைக்கால அரசியலமைப்பை திருத்துதல்.

8. (1) ஏதாவதொரு பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் மூலம் இந்த நியதிச்சட்டத்திற்கும் அதன் கீழ் தயாரிக்கப்பட்ட விதி முறைகளுக்கும் ஏற்ப சங்கத்தின் பெயரை வெளிப்படுத்தும் இடைக்கால அரசியலமைப்பையும் திருத்த முடியும்.

(2) (அ) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் எந்தவொரு இடைக்கால அரசியலமைப்புத் திருத்தமும் அத்திருத்தம் இந்நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வரை செல்லுபடியற்றதாக இருக்க வேண்டும். அதற்காக அந்தத் திருத்தத்தின் பிரதிகள் இரண்டினை பதிவாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(ஆ) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் இடைக்கால அரசியலமைப்பு திருத்தம் ஒன்று சம்பந்தமான எந்தவொரு திருத்தமும் 4 (1) (இ) (11) ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்ட அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்டாலன்றி அத்திருத்தம் பதிவு செய்யப்படக் கூடாது.

(3) இடைக்கால அரசியல் சாசனங்களில் ஏதாவது திருத்தங்கள் இந்த நியதிச்சட்டத்தில் அல்லது விதிமுறைகளில் முரண்பாடு இல்லை எனப் பதிவாளர் திருப்தியடைவாராயின், தாம் சரியெனக் கருதினால் அவரால் அந்தத் திருத்தத்தைத் திருத்த முடியும். ஏதாவது இடைக்கால யாப்புத் திருத்தமொன்றைப் பதிவு செய்தலை பதிவாளரால் நிராகரிப்பதற்கு எதிராக அதற்கான மேன் முறையீடொன்றை அது சம்பந்தமாக உறுதிப்படுத்தக் கூடிய ஏதாவது விதிகளுக்கேற்ப அமைச்சர் அவர்களுக்கு சமர்ப்பிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

(4) சங்கமொன்றின் பெயர் ஒன்று மாற்றப்பட வேண்டிய போது சங்கத்தின் அல்லது அதன் யாராவது உரிமை அல்லது உரிமையின் பேரில் அதிகாரம் அற்றதாவதுடன் அப்போது நிலையிலிருக்கும் சட்டமொன்று அதன் புதிய பேரின் பேரில் அச்சங்கத்தினால் அல்லது சங்கத்திற்கு விரோதமாக தொடர்ந்து நடத்தி செல்லக் கூடியதாக இருக்கும்.

(5) பதிவு செய்யப்பட்ட சங்மொன்றின் இடைக்கால அரசியலமைப்புத் திருத்தமொன்று பதிவாளரால் பதிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் தம்மால் உறுதிப்படுத்தப்பட்ட அந்த திருத்தத்தின் பிரதியொன்றை அவரால் சங்கத்திற்கு விநியோகிக்க வேண்டும். அத்திருத்தம் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளதென அத்திருத்தத்தினை உறுதிப்படுத்தப்பட்ட பிரதி தீர்க்கமான உறுதியாக வேண்டும். மேலும் சங்கத்தின் பெயர் திருத்தப்படும் சந்தர்ப்பத்தில் திருத்தப்பட்ட பெயர் உள்ளடக்கப்பட்ட பதிவுச் சான்றிதழை அச்சங்கத்திற்கு வழங்க வேண்டும்.

(6) இச் சரத்தில் "திருத்தம்" என்பதற்கு புதிய இடைக்கால அரசியல் திருத்தத்தினை மற்றும் அரசியல் திருத்தத்தினை மாற்றும் அல்லது மாற்றும் முறை உள்ளடக்கப்பட வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் சொத்துக்கள் மற்றும் வைப்பீடுகளை ஒன்றினைத்தல் பிரித்தல் மற்றும் வழங்குதல்.

9. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றினால் ஏற்கெனவே பெற்றுக்கொள்ளப்பட்ட பதிவாளரின் அனுமதியுடன் மற்றும் அச்சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்க உரிமையுடைய தகுதி பெற்றுள்ள உறுப்பினர்களின் அல்லது அங்கத்தவர்களில் மூன்றில் இரண்டுக்கு அதிக எண்ணிக்கையானோரின் வாக்குகளில் அனுமதிக்கப்பட்ட பிரேரணையொன்றில் -

(அ) சங்கத்தின் சொத்துக்கள் மற்றும் வைப்பீடுகள் முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதி ஏதாவது பதிவு செய்யப்பட்ட வேறொரு சங்கத்தித்திற்கு வழங்குதல் ; அல்லது

(ஆ) சங்கம் ஒன்று சங்கம் இரண்டு அல்லதுஅதற்கு மேலதிகமான வகையில் பகிர்ந்து ஒதுக்கிக் கொள்ளல் முடியும்.

(2) ஏதாவது பதிவு செய்யப்பட்ட இரண்டு சங்கங்கள் அல்லது அதற்கு மேலதிகமான எண்ணிக்கையினால், ஏற்கனவே பெறப்பட்ட பதிவாளரின் அனுமதியுடன் மற்றும் அந்த ஒவ்வொரு சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களின் அல்லது உறுப்பினர்களில் மூன்றில் இரண்டுக்கு அதிகமான எண்ணிக்கையானோரின் வாக்குகளில் அனுமதிக்கப்பட்ட பிரேரணையின் மூலம் ஒன்றிணைந்து புதியதொரு சங்கமொன்றை ஸ்தாபித்துக்கொள்ள முடியும்.

(3) பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் (1)வது உப பிரிவின் அல்லது (2)வது உப சரத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட பிரேரணையை தேவைக்கேற்ற வகையில் வழங்குதல், பகிர்ந்தளித்தல், பிரித்து ஒதுக்குதல் அல்லது ஒன்றிணைத்தல் பற்றிய சகல விபரங்களும் உள்ளடக்கப்பட வேண்டும்.

(அ) உத்தேச ஒப்படைப்பின் போது பிரித்தல் அல்லது ஒன்றிணைத்தலானது பொருளாதார யோக்கியதான சங்கம் சம்பந்தமாக குறித்துரைக்கப்படும் ஆளொருவரினால் அல்லது தாபகமொன்றினால் விதந்துரை அறிக்கை பெறப்படாதிருப்பின்.

(ஆ) பதிவுச் சான்றிதழ் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பிரிக்கப்பட்டிருப்பது எந்தெந்தச் சங்கத்திற்கோ அல்லது ஒருங்கிணைக்கப்பட்டிருப்பது எந்தெந்த சங்கத்துடனோ, அந்தச் சங்கங்களின் யாப்பு உப விதிகள் சட்டத்தினால் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்டுள்ள ஏதேனும் கட்டளை விதிகளுக்கு ஒவ்வாதனவாக சுட்டிக்காட்டும் அறிக்கையொன்று 4 ஆம் உட்பிரிவின் காரியத்திற்காக அமைந்துள்ள தாபனத்திடமிருந்தோ பெயரிடப்பட்ட ஆளொருவரிடமிருந்தோ பெறாதிருத்தல்.

தமது சொத்துக்கள், பொறுப்புக்களை வேறொரு பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றுக்கு ஒப்படைக்கவோ, அந்த சங்கத்தை இரண்டாகவோ அதற்கு மேலாகவோ பிரித்தமைப்பதற்கோ பதிவாளரினால் அனுமதி வழங்கப்படாதிருத்தல் வேண்டும்.

(4) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றினால் அவ்வாறானதொரு பிரேரணை ஒன்று அனுமதித்துக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் அச்சங்கத்தினால் சங்கத்தின் சகல அங்கத்தவர்களும் கடன் பெற்றவர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டுமென்பதுடன், முரண்பாடான இடைக்கால அரசியலமைப்பு அல்லது ஒப்பந்தங்கள் இருப்பின் அவற்றை கருத்திற்கெடுக்காது யாராவது ஒரு அங்கத்தவர், கடன் பெற்றவர் ஒருவருக்கு அந்த அறிக்கை ஒப்படைக்கப்பட்ட பின் ஒரு மாத காலத்திற்குள் சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் தமது பங்கினை முதலீட்டினை அல்லது கடன் பணம் என்பவற்றை கேட்டு விலக்கிக்கொள்ளும் அதிகாரம் அந்த அங்கத்தவருக்கு அல்லது கடன் பெறுநருக்கு இருக்க வேண்டும்.

(5) 4வது உப சரத்தில் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் தமது தெரிவு செய்யும் அதிகார செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படாத யாராவது ஒரு அங்கத்தவர் அல்லது கடன் பெறுநரால் பிரேரணையில் உள்ளடக்கப்படாத விடயங்களுக்கு விருப்பந்தெரிவித்ததாகக் கொள்ள வேண்டும்.

(6) பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் இந்த சரத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பிரேரணைக்கு ஏதாவது சொத்துக்கள் வைப்பீடுகளை ஒப்படைக்கும் சந்தர்ப்பதில் இக்காலத்தில் அதிகாரத்திலுள்ள ஏதாவது சட்டத்திற்கு முரணாக எது குறிப்பிடப்பட்டிருப்பினும் அதைப் பொருட்படுத்தாது அங்கீகரிக்கப்பட்ட பிரேரணையினை மேலும் உறுதிப்படுத்தாது வழங்குநர்களுக்கு அந்தச் சொத்துக்கள், வைப்பீடுகளை உரிமையாக்குவதை போதுமான ஒப்படைத்தலாகக் கருத முடியும்.

சில சந்தர்ப்பங்களில் பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் பதிவு செய்யப்பட்ட சான்றிதழை இரத்து செய்தல்.

10. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் சொத்துக்கள் வைப்பீடுகள் அனைத்தும் வேறொரு பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றிற்கு 9ஆவது சரத்தின் ஒழுங்கு விதிகளுக்கேற்ப வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் முதலில் குறிப்பிடப்பட்ட சங்கத்தின் பதிவு செய்தல் இரத்து செய்யப்படுவதுடன் அச்சங்கம் கலைக்கப்பட வேண்டுமென கருதப்பட வேண்டுமென்பதுடன் கூட்டுத்தாபனமாக செயல்பட்டமையும் முடிவடைய வேண்டும்.

(2) பதிவு செய்யப்பட்ட இரண்டு சங்கங்கள் அல்லது அதற்கு மேலதிக எண்ணிக்கை 9வது சரத்தின் ஒழுங்கு விதிகளுக்கேற்ப புதிய சங்கமொன்றாக ஒன்றிணைக்கப்படும் சந்தர்ப்பத்தில் ஒன்றிணைக்கப்பட்ட ஒவ்வொரு சங்கமும் பதிவு செய்யப்பட்ட தினத்தில் இரத்து செய்யப்பட வேண்டுமென்பதுடன் அந்த ஒவ்வொரு சங்கமும் கலைக்கப்பட்டிருப்பதாக கருதப்பட வேண்டுமென்பதுடன் கூட்டுத்தாபனமாக இயங்குவதும் முடிவடைய வேண்டும்.

(3) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று 9ஆவது சரத்தின் ஒழுங்கு விதிகளுக்கேற்ப சங்கங்கள் இரண்டிற்கு அல்லது அதிக எண்ணிக்கைக்கு பிரிந்து போகும் சந்தர்ப்பத்தில் அச்சங்கத்தின் பதிவு செய்தல் புதிய சங்கம் பதிவு செய்யப்பட்ட பின்பு இரத்தாக வேண்டுமென்பதுடன் இரத்து செய்யப்பட வேண்டுமென்பதுடன் அந்த ஒவ்வொரு சங்கமும் கலைக்கப்பட்டிருப்பதாக கருதப்பட வேண்டுமென்பதுடன் கூட்டுத்தாபனமாக இயங்குவதும் முடிவடைய வேண்டும்.

## III வது அத்தியாயம்

பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் அங்கத்தவர்களும் அவர்களின் உரிமைகளும் பொறுப்புகளும்

அறவிடப்பட கட்டணத்தை செலுத்தும் வரை அங்கத்தவர்களால் உரிமைகளைப் பாவிக்கக்கூடாது.

11. (1) அங்கத்துவம் சம்பந்தமான விதி ஒழுங்குகளில் அல்லது இடைக்கால அரசியலமைப்புகளில் குறிப்பிடப்படக் கூடிய கொடுப்பனவு தம்மால் செலுத்தப்படிருந்தாலன்றி செலுத்தும் வரை இல்லையேல் சங்கத்தினால் அவ்வாறு நிச்சயிக்கப்படக்கூடிய ஏதாவது தொடர்புகளை வைத்திருந்தாலன்றி அல்லது தொடர்பு வைக்கும் வரை பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் எந்தவொரு அங்கத்தவராலும் அங்கத்தவரது உரிமைகளைப் பாவிக்க முடியாது.

(2) சங்கமொன்றின் அங்கத்தவர்களின் பொறுப்புகள் வரையறுக்கப்படும் சந்தர்ப்பத்தில் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றில் இல்லாத எந்தவொரு அங்கத்தவராலும் சங்கத்தின் மூதலீட்டின் மூலம் கிடைக்கும் பங்கு விதிகளின் மூலம் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு ஐந்தில் ஒன்றிற்குட்பட்டிருக்க வேண்டும்.

பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு செலுத்தும் முறை.

(3) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் பங்கொன்று ஆகக் குறைந்த பெறுமதி ரூபா 100 ற்கு குறையக்கூடாது. ஏதாவது பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் பங்கொன்றின் பெறுமதியை பொது சபையின் விருப்பத்தின்படி அதிகரிக்க முடியும். அங்கத்துவத்திற்காக ஏதாவது பங்கொன்றை கொள்வனவு செய்வதற்கு பங்கின் பெறுமதியின் பத்தின் ஒன்றுக்கு குறையாத பணத்தை செலுத்துகை தினத்திலிருந்து ஒரு வருடத்திற்குள் பங்கின் பெறுமதி முழுவதையும் செலுத்தியிருக்க வேண்டும். பங்கின் மொத்தப் பெறுமதியையும் ஒரே தவணையில் செலுத்த முடியும்.

(4) (அ) அங்கத்துவத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருடம் முடிவடைந்திருப்பினும் பங்கின் மொத்தப் பெறுமதியும் செலுத்தப்பட்டிருப்பினும் அங்கத்தவர் முழுமையான அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். குறிப்பிட்ட முழு அங்கத்துவம் கிடைக்கும் வரை வாக்களிக்கும் உரிமையோ பதவி வகிக்கும் உரிமையோ அங்கத்தவரால் எதையும் அனுபவிக்க முடியாது.

(ஆ) எவ்வாறாயிருப்பினும் இச் நியதிச் சட்டத்தின் 4 (1) அ, 4 (1) ஆ, 5 (1) 2 ஆம் உட்பிரிவுகளில் ஒழுங்கு விதிகளின் கீழ் சங்கமொன்றைப் புதிதாகப் பதிவு செய்வதற்கு பதிவாளரிடம் விண்ணப்பிப்பவர்களுக்கு இவை வலுவற்றதாக ஆதல் வேண்டும்.

(5) முழுமையான அங்கத்துவம் பெற்றுக்கொண்டதன் பின்னர் மட்டுமே பதிவு பெற்ற சங்கத்தின் எந்தவொரு கூட்டத்திலும் வாக்களிப்பதற்கும் பதவியொன்றுக்கு தெரிவு செய்யப்படுவதற்கும் உறுப்பினருக்கு உரிமையுண்டு. வாக்களிப்பதற்கான தகைமையுடையோர்.

(6) பாராளுமன்றத்தில், மாகாண சபையொன்றில், மாநகர சபையொன்றில், நகர சபையொன்றில், பிரதேச சபையொன்றில் மக்கள் பிரதிநிதியாக இருக்கும் எவரேனும் பதிவு செய்யப்பெற்ற கூட்டுறவுச் சங்கமொன்றின் செயற்குழு உறுப்பினராக தெரிவு செய்யப்படுவதற்கோ தொடர்ந்தும் அவ்வாறு பதவி வகிப்பதற்கோ தகைமையற்றவராவார். தகைமையின்மை.

(7) எவரேனும் ஒருவர், தெரிவு செய்யப்படும் தினத்தன்று அங்கத்துவம், பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் கொண்ட ஏதேனும் வேறொரு பதிவு பெற்றுள்ள சங்கமொன்றின் தலைவராக இருப்பாரேயானால் அந்நபர் அங்கத்துவம் பதிவு பெற்றுள்ள சங்கங்கள் கொண்ட முன்னர் குறிப்பிட்ட சங்கத்தின் நோக்கங்களுக்கு சமமற்ற நோக்கங்களைக் கொண்ட பதிவு பெற்ற சங்கமொன்றின் தலைவராகத் தெரிவு செய்துகொள்ள தகைமையற்றவராவார். தலைவராக தெரிவு செய்வதற்கு தகைமையற்றோர்

12. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றினால் இடைக்கால அரசியலமைப்பின் படி வியாபார நடவடிக்கைகளை கொண்டு செல்வதற்காக உடன்படிக்கைக்கு வரும் யாராவது ஒருவரை அங்கத்தவராக இணைத்துக்கொள்ள முடியும். இணை உறுப்பினர்கள்.

(2) இணை உறுப்பினர் ஒருவருக்கு சங்கத்தின் சொத்துக்களில் அல்லது இலாபத்தில் சொத்துக்களில் அல்லது இலாபத்தில் எந்தவொரு விதத்தில் அல்லது பகுதிக்கு அல்லது சங்கத்தின் செயற்பாடுகளின் போது வாக்களிக்கும் அதிகாரம் கிடைக்கக் கூடாது.

13. ஏதாவதொரு பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றில் முறையாக உள்வாங்கப்பட்டுள்ள யாராவது இளம் வயது அல்லது அவர் பொருத்தமான வயதிற்கு வருதல் இந்நியதிச்சட்டத்தின் கீழ் அல்லது இந்நியதிச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதிமுறைகளின் கீழ் அவரால் எழுதிக் கையொப்பமிடப்பட வேண்டியது என்பது தேவையான சட்ட ரீதியான பட்டியலொன்று எழுதிக் கையொப்பமிடுவதற்கு அல்லது வழங்கப்படுவதற்குத் தேவையான விடுவிப்பினை செய்வதற்கு அவருக்கு தடையாக இருக்கக் கூடாது. மேலும் அவ்வாறான ஒருவரால் சங்கத்துடன் ஏற்படுத்திக்கொண்டுள்ள ஏதாவதொரு ஒப்பந்தத்தை இரத்து செய்வதற்காக அல்லது தவிர்த்துக் கொள்ளும் முகமாக அந்த விடயங்கள் காரணமாகி விடக் கூடாது. இளம் வயதினையுடைய அங்கத்தவர்களால் சங்கத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்படும் ஒப்பந்தங்கள்

அதேபோன்று அவ்வாறான ஒருவரால் முக்கிய பொறுப்பாளராக அல்லது பிணையாளியாக சங்கத்துடன் ஏற்படுத்திக்கொண்ட அவ்வாறான ஏதாவது ஒப்பந்தம் அவரது இளம் வயதிற்கு அல்லது முறையான வயதிற்கு வராமை என்பதை பொருட்படுத்தாது அவரால் அல்லது அவருக்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க முடியும்.

14. பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றில் யாராவது ஒரு உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்கும் போது ஏதாவது குறைபாடு அல்லது அவரை நியமிப்பதற்கான ஏதாவது தகுதியின்மை போன்றவற்றை நன்றாக ஆராய்ந்து பார்த்தல் அச்சங்கத்திற்காக அந்த உத்தியோகத்தரால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை இரத்து செய்தல் அல்லது தவிர்த்துக்கொள்ளல் என்பவற்றிற்கு காரணமாகக் கூடாது. சங்கங்களில் பதவிவகிப்பவர்களால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள்.

15. ஏதாவது பிரதான சங்கத்தின் அங்கத்தவருக்கு சங்கத்தின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் போது ஒரு வாக்குக்கு மேலதிகமாக இருக்கக் கூடாது எனினும் வாக்குகள் சமமாக அளிக்கப்படும் போது தலைவர் அவர்களுக்கு தீர்மானிக்கும் வாக்கொன்று இருக்க வேண்டும். அங்கத்தவர்களின் வாக்கு.

16. (1) ஏதாவது பிரதான சங்கமொன்றின் அங்கத்தவரால் அச்சங்கத்தின் ஏதாவது ஒரு கூட்டத்தில் தனிப்பட்ட விதத்திலன்றி தமது வாக்கினைப் பயன்படுத்தக் கூடாது. எனினும் பிரதிநிதி ஒருவரூடாக வாக்களிப்பதற்கு சங்கத்தின் இடைக்கால அரசியலமைப்பின் கீழ் ஒழுங்கு விதிகள் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் சங்கத்தின் கூட்டமொன்றில் வாக்களிப்பதற்கு இடமளிக்க முடியும். வாக்கினைப் பாவிக்கும் முறை.

(2) வேறு பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் அங்கத்தவராக பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் அந்த வேறு பதிவு செய்யப்பட்ட சங்கத்துடன் செயல்படும் போது வாக்களிப்பதற்காக குறிப்பிட்ட அங்கத்தவரில் ஒருவர் அல்லது பலரை நியமிக்க முடியும்.

(3) பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களில் பதவிகளுக்கான நடவடிக்கைகள் இந்நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

பங்குகளை அல்லது தொடர்புகளை வழங்குவது பற்றிய எல்லை.

17. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் அங்கத்தவர்களின் அல்லது முன்னால் அங்கத்தவர்களின் அல்லது இறந்துபோன அங்கத்தவர்களின் முதலீட்டில் ஒரு பகுதி அல்லது வேறு தொடர்புகளை வழங்குதல் என்பவற்றில் அதிகமாக இருக்கக்கூடியவை சம்பந்தமாக இந்நியதிச் சட்டத்தில் அல்லது விதிமுறைகளில் குறிப்பிட்டிருக்கக்கூடிய நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும்.

(2) கட்டுப்பாடற்ற பொறுப்புகளைக் கொண்ட பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று சம்பந்தமாகும் போது எவரொரு அங்கத்தவராலும் -

(அ) தம்மால் ஏதாவது பங்கினை அல்லது தொடர்புகளை ஒரு வருடத்திற்கு குறையாத காலத்திற்கு கொண்டிருப்பின், மற்றும்

(ஆ) சங்கத்திற்கு அல்லது சங்கத்தின் அங்கத்தவருக்கு அங்கத்துவத்திற்கான விண்ணப்பப்படிவத்தை நிர்வாகக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் ஒருவருக்கு வழங்கப்படுமாயின்,அன்றி தம்மால் சங்கத்தின் முதலீடுகளில் ஏதாவது ஒரு தொடர்புகளுக்காக பங்கு அல்லது தொடர்புகள் அல்லது அதன் ஒரு பிரிவை வழங்கக் கூடாது.

## IV வது அத்தியாயம்

### பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் உரிமை, பிணைப்பு, சிறப்புரிமைகள்

சங்கத்தின் விலாசம்.

18. அறிவித்தல்களும், கடிதங்களும் கிடைக்கக் கூடிய விதிமுறைகளுக்கிணங்க பதிவு செய்யப்பட்டுள்ள விலாசமொன்று சகல பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கும் இருக்க வேண்டும் என்பதுடன் அந்த விலாசம் சம்பந்தமாக ஏதாவது மாற்றம் ஏற்பட்டபின் 07 நாட்களுக்குள் அந்த மாற்றம் பற்றிப் பதிவாளருக்கு அறிவிக்க வேண்டும்.

நியதிச்சட்டம் விதிகள், இடைக்கால அரசியலமைப்பு போன்றவற்றின் பிரதிகளை பரீட்சிப்பதற்கு இடவசதி உண்டு என்பது பற்றி.

19. (1) பதிவு செய்யப்பட்ட சகல சங்கங்களினாலும் இந்நியதிச்சட்டத்தின், விதிகளில் மற்றும் சங்கத்தின் இடைக்கால அரசியலமைப்பின் பிரதிகள் 05 இனை சங்கத்தின் மற்றும் அங்கத்தவர்களினது பெயர்ப்பட்டியலையும் எது வித கட்டணமுமின்றி சகல பொருத்தமான நேரங்களிலும் பரிசீலனை செய்வதற்காக சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட விலாசத்தைக் கொண்ட இடத்தில் வைக்க வேண்டும்.

(2) பெயர்ப்பட்டியலில் கீழேயுள்ள தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டும் :-

(அ) சகல அங்கத்தவர்களினதும் பெயர், அங்கத்துவ இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம், விலாசம், தொழில் ;

(ஆ) அங்கத்தவராக பட்டியலிடப்பட்ட திகதி ;

(இ) அங்கத்துவம் நீங்கிய திகதி ;

(ஈ) அங்கத்துவம் இல்லாமல் போனதற்கான காரணம்.

## V வது அத்தியாயம்

பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்குரிய சிறப்புரிமைகள்

*சங்கங்கள் கூட்டுத்தாபனம் ஆக வேண்டும் என்பது.*

20. சங்கமொன்று பதிவு செய்வதை காரணமாகக் கொண்டு அது பதிவு செய்யப்பட்ட பெயரின் கீழ் தொடர்ச்சியான பரம்பரை மற்றும் பொது முத்திரை உள்ள மற்றும் சொத்துக்களை கொண்டதும், ஒப்பந்தங்களுக்குட்பட்டதும் வழக்கு மற்றும் வேறு சட்டப் புத்தகங்களை வழங்குதல் மற்றும் அவை சம்பந்தமாக நியாயப்படுத்துதலுக்கு கருத்துக் கூறுதலின் போது சங்கத்தை அமைப்பதற்கான செயலுக்காக தேவையான சகலவற்றையும் செய்யும் போது அதிகாரமுடைய கூட்டுத்தாபனமாக வேண்டும்.

*சங்கத்திற்கு அல்லது சங்கத்தினூடாக பொருட்களை விற்றல்.*

21. (1) விவசாய அல்லது கால் நடை உணவுகளை அல்லது ஏதாவது தொழிலின் மூலம் உற்பத்தி செய்யப்படும் ஏதாவது ஒரு பொருளை விற்பது ஒரே நோக்கத்திற்காக உள்ள பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் மூலம் :-

(அ) அவ்வாறானதொன்றை உற்பத்தி செய்யும் சங்கத்தின் சகல உறுப்பினர்களாலும் அப்பொருட்களை முழுமையாகவோ அதன் ஒரு பகுதியை அல்லது சமனானதை, வகையினை சங்கத்திற்கோ, அல்லது சங்கத்தினூடாகவே விற்க முடியுமென்பது மற்றும்

(ஆ) இடைக்கால அரசியலமைப்பு அல்லது ஒப்பந்தங்களை மீறும் குற்றத்திற்கு குற்றவாளியாக ஒழுங்கு விதிகளில் உறுதிப்படுத்தக் கூடிய விதத்தில் உறுதிப்படுத்தப்பட்ட அல்லது தீர்ப்பளிக்கப்பட்ட அங்கத்தவரால் ஒழுங்கு விதிகளில் அல்லது சங்கத்தின் இடைக்கால அரசியலமைப்பினால் உறுதிப்படுத்தக் கூடிய ஒரு விதத்தில் தீர்மானிக்கப்படுகின்ற அல்லது மதிப்பீடு செய்யப்படும் தொகை அளவிடப்பட்ட நட்டமாக சங்கத்திற்கு செலுத்த வேண்டுமென்பது,

சங்கத்தின் இடைக்கால அரசியலமைப்புகளின் ஒழுங்கு விதிகளை திட்டமிடுதல் அல்லது அதன் அங்கத்தவர்களுடன் ஒப்பந்தத்திற்கு உள்வாங்கிக்கொள்ள வேண்டும்.

(2) பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் (1) வது உப பிரிவின் கீழ் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் அந்த ஒப்பந்தத்திற்குரிய உற்பதி செய்யப்பட்ட, உற்பத்தி செய்யப்படவுள்ள போன்ற சகல பொருட்களின் போது சங்கத்தின் நன்மைக்கு முதலாவது இடமளிக்க வேண்டும்

(3) (1) வது உப பிரிவின் கீழ் ஒப்பந்தத்தின் மூலம் மேலெழும் ஏதாவது சட்டப் புத்தகத்தில் அந்த ஒப்பந்தம் வியாபாரத் தடையாக இருக்க வேண்டுமென்பதுடன் ஒப்பந்தம் என்பது நியாயப்படுத்துவதற்கான விடயமாக இருக்கக்கூடாது.

(4) பதிவுசெய்யப்பட்ட சங்கமொன்றில் அங்கத்தவர் அச்சங்கத்தின் உறுப்பினராவதற்கு முன்பு தமது பொருட்களை வேறொருவருக்கு பொறுப்பளிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளமையை காரணமாகக் கொண்டு அப்பொருட்களை பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றிற்கு ஒப்படைக்கத் தீர்மானிக்கும் அச் சங்கத்தின் இடைக்கால அரசியலமைப்பு அந்த அங்கத்தவரால் மீறப்பட்டுள்ளதாகக் கருதக்கூடாது.

(5) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் உறுப்புரிமைக்காக விண்ணப்பிக்கும் சகலராலும் ஏதாவது பொருளை வேறொருவருக்கு ஒப்படைப்பதற்காக தம்மால் ஏற்பாடு செய்யப்பட்ட சகல ஒப்பந்தங்களும் பற்றிய விபரங்களை தமது விண்ணப்பப்படிவத்தில் விளக்குமாறு தீர்மானிக்கப்பட்டால் அவ்வாறு செய்ய வேண்டும்.

*சில சந்தர்ப்பங்களில் பதிவு செய்யப்பட்ட சங்கத்தினூடாக உற்பத்தி செய்பவற்றை கட்டாயமாக விற்றல்.*

22. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று சம்பந்தமாக அச்சங்கத்தின் அங்கத்தவர்கள் அல்லது அதன் ஒரு பகுதியை மத்திய மாகாணத்தின் அதன் ஏதாவதொரு மாவட்டத்தில் அல்லது பிரதேசத்தில் ஏதாவது ஒரு பொருளை உற்பத்தி செய்பவர்களென அமைச்சர் அவர்கள் திருப்திப்படும் சந்தர்ப்பத்தில் மத்திய மாகாண சபையின் கூட்டுறவு விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களால் தமது விருப்பத்தின் பேரில் மத்திய மாகாணத்தின் ஒவ்வொரு உற்பத்தியாளர்களுக்கும் அந்த உற்பத்தியாளர் அச்சங்கத்தின் அங்கத்தவரானாலும் இல்லாவிட்டாலும் அந்த உற்பத்தியாளரால் உற்பத்தி செய்யப்படும் அந்தப் பொருளின் மொத்த அளவில் அவரது பயன்பாட்டிற்கு அல்லது பாவனைக்கு தேவையற்ற பகுதியை அச்சங்கத்திற்கோ சங்கத்தினூடாக விற்பதாகக் கருத முடியும்.

(2) மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் கூட்டுறவு விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களால் (1) வது உப சரத்தின் கீழ் செய்யப்படும் சகல கட்டளைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும். அக்கட்டளையில் அப்பொருள், கட்டளை நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசம், அப்பொருளை உற்பத்தி செய்பவருக்கு செலுத்த வேண்டியது எதனடிப்படையில் என்பவற்றை தெளிவாக குறிப்பிட வேண்டும்.

(3) சகல கட்டளைகளும் அந்த வர்த்தமானியில் வெளியிடப்படும் திகதியில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் (5) வது உட்பிரிவின் ஒழுங்கு விதிகளுக்கேற்ப அதை முடிவுக்கு கொண்டு வரும் வரை தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

(4) சகல கட்டளைகளும் நடைமுறைப்படுத்தப்பட்ட பின் கூடிய விரைவில் அனுமதிக்காக மத்திய மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(5) மத்திய மாகாண மாகாண சபையால் அனுமதி நிராகரிக்கப்படும் சகல கட்டளைகளும் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதென கருதப்படும் என்பதுடன் அதன் கீழ் ஏற்கனவே செய்யப்பட்ட அல்லது செய்ய இடமளிக்கப்பட்ட எதனுடைய செல்லுபடியானவற்றிற்கும் தடை ஏற்படக் கூடாது. கட்டளை முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதென கருதப்படும் திகதி அக்கட்டளை அனுமதித்தலை மத்திய மாகாண மாகாண சபையால் நிராகரிக்கப்படும் திகதியாக இருக்க வேண்டுமென்பதுடன் அத்திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும்.

(6) (அ) மத்திய மாகாண மாகாண சபையின் கூட்டுறவு விடயப்பொறுப்பு அமைச்சர் அவர்களால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையில் (அக்கட்டளை இதன்பிறகு "திருத்தப்படும் கட்டளை" எனக் குறிப்பிடப்படும்) (1) வது உப பிரிவின் கீழ் ஏற்கனவே செய்யப்பட்ட ஒரு கட்டளையை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாற்ற முடியும். சகல திருத்தம் செய்யும் கட்டளையும் அவை வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

(ஆ) திருத்தப்பட்ட கட்டளையில் மாற்றப்படும் (1)வது உப விதியின் கீழ் செய்யப்பட்ட கட்டளை அவ்வாறு மாற்றப்பட வில்லையாயின் நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருந்த கால கட்டத்தில் அவ்வாறு திருத்தப்பட்ட விதத்தில் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அதற்கு மேலதிக காலத்திற்கு நடைமுறைப்படுத்தப்படக் கூடாது.

(இ) சகல திருத்தம் செய்யும் கட்டளைகளும் அனுமதிக்காக மத்திய மாகாணத்தின் மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனும் (1) வது உப விதியின் கீழ் மத்திய மாகாண மாகாண சபையில் அனுமதிக்கப்படும் முன்பு திருத்தம் செய்யப்படும் கட்டளையில் அல்லது கட்டளைகளை பல தடவையில் மாற்றப்படும் சந்தர்ப்பத்தில் அக்கட்டளை அந்த உப விதியின் கீழ் அனுமதிக்காக மத்திய மாகாண மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்படும் போது அந்த திருத்தம் செய்யும் கட்டளையின் அல்லது கட்டளைகளில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களும் அதில் உள்ளடக்கப்பட வேண்டுமென்பதுடன் அவ்வாறான சந்தர்ப்பத்தில் அவ்வாறு திருத்தம் செய்யப்பட்ட கட்டளைகள் தனித்தனியாக மத்திய மாகாண மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதில்லை.

(ஈ) அனுமதிக்காக மத்திய மாகாண மாகாண சபையில் சமர்ப்பிக்கப்படும் ஏதாவது திருத்தம் செய்யும் கட்டளை மத்திய மாகாண மாகாண சபையால் அனுமதித்தலை நிராகரிப்பது அத்திருத்தம் செய்யப்பட்ட கட்டளை முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது எனக் கருதப்பட வேண்டுமென்பதுடன் (1) ஆவது உப விதியின் கீழ் செய்யப்பட்ட கட்டளை அது முடிவுக்கு கொண்டு வரும் தினத்திலிருந்து அத்திருத்தம் செய்யும் கட்டளை செய்யப்படவில்லை என்று தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும்.

(உ) (1) ஆவது உப விதியின் கீழ் ஏற்கனவே செய்யப்பட்ட ஒரு கட்டளை மத்திய மாகாண மாகாண சபையின் கூட்டுறவு விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களால் சில வேளை அதை முடிவுக்கு கொண்டு வரமுடியும் அவ்வாறானதொரு கட்டளை முடிவுக்கு கொண்டு வரும் அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டுமென்பதுடன் அக்கட்டளை பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து முடிவுக்கு கொண்டுவரப்பட்டதாக கருதப்பட வேண்டும்.

(7) சகல கட்டளைகளும் மத்திய மாகாண சபையால் அனுமதிக்கப்படுமிடத்து அது மீண்டும் வெளியிடப்பட்டதாக செல்லுபடியானதாக மற்றும் அதிகாரமுள்ளதாக இருக்க வேண்டும்.

(8) இந்த விதியின் கீழ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவுள்ள சகல அறிவித்தல்களும் மத்திய மாகாண மாகாண சபையின் விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களின் கையொப்பத்துடன் பிரசுரிக்கப்பட வேண்டும்.

(9) இச்சரத்தின் கீழ் செய்யப்படும் ஏதாவதொரு கட்டளையின் ஒழுங்கு விதிகள் ஏனைய எந்தவொரு எழுத்து மூல சட்ட ஒழுங்கு விதிகளுடன் பொருத்தமில்லாமல் அல்லது முரண்பாடு இல்லை என்று கருதாமல் அக்கட்டளை நடைமுறையிலிருக்கும் கால கட்டத்தில் அந்த ஏனைய எந்தவொரு எழுத்து மூல சட்டங்களையும் மீறி அந்த ஒழுங்கு விதிகள் அதிகாரத்தில் இருக்கும்.

(10) சகல அங்கத்தவர்களும் இல்லாத பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றிற்கு சங்கமொன்றினூடாக ஏதாவது பொருள் ஒன்றைவிற்குமாறு (1) வது உப விதியின் கீழ் கட்டளையின் மூலம் நிர்வகிக்கப்படும் சகல உற்பத்தியாளர்களும் அந்த நிர்வகித்தலின்படி ஏதாவதொன்றை விற்றல் சம்பந்தமாக மற்றும் அந்த விற்பனையின் மூலம் ஏற்படும் ஏதாவது விடயம் அல்லது கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக அவர் அந்த சங்கத்தின் அங்கத்தவராக இருந்தால் அவர் கட்டுப்பட வேண்டிய நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட வேண்டும்.

(11) (1) வது உப விதியின் கீழ் கட்டளையிடப்பட்டது யாராவது ஒரு உற்பத்தியாளர் சம்பந்தமாயின் அந்த உற்பத்தியாளரும் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் அங்கத்தவராக இல்லாவிட்டாலும் யாராவது உற்பத்தியாளரால் அச் சங்கத்தின் அங்கத்தவராக சேர்த்துக் கொள்வதற்காக விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அச்சங்கத்தினால் -

(அ) அவர் அவ்வாறு விரும்பினால் அவரது கணக்கிற்கு சங்கத்திற்கு கிடைக்கும் அல்லது சங்கத்தினால் மேற்கொள்ளப்படும் ஏதாவது நிதியிலிருந்து அங்கத்துவத்திற்காக செலுத்திய பணத்தை முழுவதும் அல்லது ஒரு பகுதியை கழித்துக்கொள்ள வேண்டும் ;

(ஆ) மேலே கூறியவாறு ஏதாவது கழித்துக்கொள்ளவதன் மூலம் செலுத்திய பணம் முழுமையாக செலுத்திய பின் அவர் அங்கத்தவராகச் சேர முடியும்.

ஒப்பந்தத்தை மீறுவதற்கு மற்றவர்களைத் தூண்டுபவர்.

23. (1) வேறொருவரால் உற்பத்தி செய்யப்படும் ஏதாவதொரு பொருள் பதிவு செய்யப்பட்ட சங்கத்திற்கு அல்லது சங்கத்தினூடாக விற்பதற்கு அந்த வேறு ஒருவர் 21வது சரத்தின் கீழ் ஒப்பந்தம் செய்திருக்கும் அல்லது 22வது சரத்தின் கீழ் உள்ள கட்டளைக்கு கட்டுப்பட்டுள்ளமை பற்றி அறிந்திருந்தும் அல்லது அது பற்றி அறிவித்தல் வழங்கப்பட்டிருக்கும் போது சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் அந்த ஒப்பந்தத்தை மீறி அல்லது கட்டளைக்கு முரணாக அப்பொருளை விற்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு வேறொருவரைத் தூண்டுவது அல்லது விருப்பப்படுத்திக் கொள்ளும் ஒருவர் குற்றம் செய்தமைக்கு குற்றவாளியாக்கப்படுவதுடன் நீதவான் முன்னிலையில் நடத்தப்படும் வழக்கொன்றின் பின் குற்றவாளியாக்கப்பட்டால் இரண்டாயிரம் ரூபாவிற்கு மேற்படாத தண்டனைக்குட்பட வேண்டும்.

(2) (1) வது உப விதியின் கீழ் குற்றமொன்றிற்கு குற்றவாளியாக்கப்படும் ஒருவர் கூட்டுத்தாபனமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அத்தவறு செய்யும் போது அக்கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் அல்லது உத்தியோகத்தராக இருந்த ஒருவருக்கு அத்தவறை செய்தது தாம் அறியாமலோ அல்லது அந்த தவறை தவிர்த்துக் கொள்வதற்காக முறையான சகல முயற்சிகளையும் செய்ததாகவும் அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டால் அன்றி குற்றத்திற்கு குற்றவாளியாக கருதப்படுவார்.

யாராவது ஒரு அங்கத்தவருக்கு சொந்தமான பயிர்ச்செய்கை விவசாயப் பொருட்கள், பசுக்கள், உபகரணங்கள், மூலப்பொருட்கள், சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் உரிமைகள்.

24. (1) கடனாளி ஒருவரின் சொத்துக்கள் பற்றி அரசின் மாகாண சபையின் முன்னுரிமை உரிமைக்கு மற்றும் வாடகை அல்லது வாடகையாக அறவிடப்படக் கூடிய பணம் சம்பந்தமாக காணி உரிமையாளரின் சொந்த உரிமைக்கு அல்லது ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட ஏதாவது இணக்கப்பாட்டிற்கேற்ப எவராவது அங்கத்தவர் அல்லது ஏற்கனவே இருந்த அங்கத்தவரால் பதிவு செய்யப்பட்ட சங்கத்திற்கு செலுத்த வேண்டிய ஏதாவது கடன் அல்லது பூரணப்படுத்தாத விண்ணப்பம் ஒப்படைப்பதற்கு வேறொருவரைத் தூண்டுதல் அல்லது விருப்பப்படுத்திக்கொள்ளும் ஒருவர் குற்றம் ஒன்றுக்கு குற்றவாளியாக்கப்படுவதுடன் நீதவான் முன்னிலையில் நடத்தப்படும் வழக்கு விசாரணை பின் குற்றவாளியாக்கப்படும் போது இரண்டாயிரத்திற்கு மேலதிகமாகாத தண்டத்திற்குட்பட வேண்டும்.

(அ) ஒரு உறுப்பினர் ஏற்கனவே இருந்த உறுப்பினரால் சங்கத்தில் பெறப்பட்ட கடன் தொகையில் முழுமையாக அல்லது பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட பயிர்ச் செய்கை அல்லது அவ்வாறு பெறப்பட்ட வேறு விவசாய பொருட்களின் மீது முதலாவது உடன்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஆ) சங்கத்தினால் உறுப்பினர் ஒருவருக்கு அல்லது ஏற்கனவே இருந்த உறுப்பினருக்குவழங்கப்பட்ட பணத்தில் அல்லது பொருட்களிலான ஏதாவது கடனில் முழுமையாக அல்லது ஒரு பகுதியைஅவருக்கு வழங்கிய அல்லது அவரால் கொள்வனவு செய்யப்பட்ட கால்நடைகள், கால்நடைகளுக்கான உணவுகள், விவசாயத்திற்கு அல்லது விவசாய உபகரணங்களுக்கு அல்லது உற்பத்திக்காக எடுக்கப்பட்ட மூலப்பொருட்கள், அறிவிக்காது நேர்மையான முறையில் கொள்வனவு செய்யப்பட்ட வாங்கப்பட்டவருடைய அல்லது வழங்கப்பட்டவருடைய உரிமைகளின் மீது தாக்கமேற்படுத்தக் கூடாது.

(2) வீட்டு வாடகை பங்கு கடன் தொகை அல்லது பெறப்பட்ட பணம் பற்றி யாராவது அங்கத்தவர் அல்லது ஏற்கனவே இருந்த அங்கத்தவரால் வீடமைப்பு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய ஏதாவது பூரணப்படுத்தாத விண்ணப்பம் அல்லது செலுத்த வேண்டிய ஏதாவது பூரணப்படுத்தாத விண்ணப்பம் அல்லது செலுத்தாதிருக்கும் கட்டணம் அல்லது அந்தச் சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வேறு உரிமைகள் அல்லது பணம் சங்கத்தின் அசையாச் சொத்துக்கள் பற்றிய அவரது தொடர்புகள் மீது முதலில் இணைக்கப்பட வேண்டும்.

அங்கத்தவர்களின் பங்குகள் அல்லது தொடர்புகள் பற்றிய இணக்கம் மற்றும் கழித்துக்கொள்ளல்.

25. அங்கத்தவர்களின் ஏற்கனவே இருந்த அங்கத்தவர்களின் அல்லது இறந்த அங்கத்தவர்களின் சொத்துக்களிலிருந்து.

(அ) சங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய ஏதாவது கடன்.

(ஆ) ஏனைய எந்தவொரு பதிவு செய்யப்பட்ட சங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய கடன் அல்லது

(இ) ஏதாவது பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் முடிவுக்கு கொண்டு வந்தவருக்கு அறவிட வேண்டிய தொகையை செலுத்துவதற்காக அந்த அங்கத்தவரின் ஏற்கனவே இருந்த அங்கத்தவரின் அல்லது இறந்து போன அங்கத்தவரின் முதலீட்டின் ஒரு பகுதி அல்லது வேறு தொடர்புகள் மற்றும் வைப்பீட்டின் மூலமும் அங்கத்தவருடைய ஏற்கனவே இருந்த அங்கத்தவருடைய அல்லது இறந்து போன அங்கத்தவருடைய பணத்திற்கு செலுத்த வேண்டிய இலாபப்பங்கு நன்கொடை அல்லது இலாபத்தின் மீது பதிவு செய்யப்பட்ட சங்கத்துடன் தொடர்பு இருக்க வேண்டுமென்பதுடன் அங்கத்தவருக்கு ஏற்கனவே இருந்த அங்கத்தவருக்கு அல்லது இறந்து போன அங்கத்தவருடைய பணத்திற்கு வைப்பிலிடப்படும் அல்லது செலுத்த வேண்டிய ஏதாவதொரு தொகையை கழித்துக்கொள்ளல், அப்படிப்பட்ட கடன் அல்லது பணத்தை செலுத்தும் போது அல்லது கொடுப்பனவு சம்பந்தமாக தேவைக்கேற்ற விதத்தில் வேறு சங்கத்திற்கு அல்லது நம்பிக்கையை காப்பாற்றுபவருக்கு செலுத்துவதை அந்தப் பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் செய்யப்பட வேண்டும்.

பங்குகள், பங்களிப்பு கொடை மற்றும் வேறு தொடர்புகளை தடை செய்வதற்கு அல்லது விற்பதற்கு அடிபணியாமை பற்றி

26. 25 வது உட்பிரிவின் ஒழுங்கு விதிகளுக்கேற்ப பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் முதலீட்டில் அங்கத்தவரின் பங்கு, பணம் அல்லது வேறு தொடர்புகள் அந்த அங்கத்தவரால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஏதாவது கடன் அல்லது பொறுப்புகள் சம்பந்தமாக நீதிமன்றத்தில் ஏதாவது தீர்ப்பு வழங்கல் அல்லது கட்டளையின் கீழ் தடைக்குட்படுத்த அல்லது விற்பதற்கு உட்படக் கூடாது. அவ்வாறு தூண்டலுக்குட்படுத்தப்படும் அவரது மாற்றத்தை பெறுபவருக்கு அல்லது சிவில் வழக்கு விதிகள் கோவையின் 1ஆவது அத்தியாயத்தின் கீழ் நியமிக்கப்படும். பொறுப்பெடுப்பவருக்கு அந்தப் பகுதி, பங்களிப்புக் கொடை அல்லது வேறு தொடர்புகளுக்கு எந்தவித உரிமை அல்லது அது சம்பந்தமாக உரிமை கோரும் எந்தவொரு உரிமையும் இருக்கக் கூடாது.

அங்கத்தவர் இறந்ததன் பின் தொடர்புகளை வழங்குதல்.

27. (1) அங்கத்தவர் இறந்த பின் பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் அந்த இறந்துபோன அங்கத்தவரின் பங்கு அல்லது வேறு தொடர்புகள் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சட்டத்திற்கேற்ப பெயரிடப்பட்டவருக்கு இறந்து போன அங்கத்தவரின் சட்ட ரீதியான உரிமையாளர் அல்லது பரதிநிதியாக நிர்வாகக் குழுவிற்கு வந்து போகக் கூடிய வேறொருவருக்கு வழங்க முடியும். இல்லையேல் சட்டத்தில் அல்லது இடைக்கால அரசியலமைப்பின்படி நிச்சயிக்கப்படும் அந்த அங்கத்தவரின் பங்கின் அல்லது வேறு தொடர்புகளின் பெறுமதிக்கு சமனான தொகை பெயரிடப்பட்டவருக்கு, உரிமையாளருக்கு அல்லது சட்ட ரீதியானவருக்கு செலுத்த முடியும். எனினும்,

(அ) வரையறுக்கப்படாத பொறுப்புகளிலான சங்கமொன்று சம்பந்தமாகும் போது சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் அப்பெயரிடப்பட்டவர் உரிமையாளர் அல்லது சட்டரீதியான பிரதிநிதியால் இறந்த அங்கத்தவரின் பகுதி அல்லது வேறு தொடர்புகள் சம்பந்தமாக மேலே கூறியபடி தீர்மானிக்கப்படும் பெறுமதி சங்கத்தினால் செலுத்துமாறு கேட்க முடியும்.

(ஆ) வரையறுக்ககப்பட்ட பொறுப்புகளைக் கொண்ட சங்கமொன்று சம்பந்தமாகும் போது சங்கத்தினால் இறந்து போன அங்கத்தவரின் பங்குகள், அல்லது வேறு தொடர்புகள், சங்கத்தின் அங்கத்துவத்திற்கான விதிகள் மற்றும் இடைக்கால அரசியமைப்பின் படி தகுதிபெற்ற சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் அப் பெயரிடப்பட்டவர் உரிமையாளர் அல்லது

சட்ட ரீதியான பிரதிநிதிக்கு அல்லது இறந்துபோன அங்கத்தவரின் மரணத்தின் பின் ஆறு மாதத்திற்கும் அவரால் செய்யப்படும் விண்ணப்பத்தில் உறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள அவ்வாறு தகுதி பெற்ற வேறு யாராவது ஒருவருக்கு வழங்க முடியும்.

(2) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் அங்கத்தவரால் அந்த பதிவு செய்யப்பட்ட அங்கத்தவருக்கு செலுத்த வேண்டிய வேறு சகல தொகையையும் சந்தர்ப்பத்திற்கேற்ற விதத்தில் அப்பெயரிடப்பட்டவர், உரிமையாளர் சட்ட ரீதியான பிரதிநிதிக்கு செலுத்த முடியும்.

(3) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றினால் இந்த உட்பிரிவில் உப விதிகளின்படி செய்யப்பட்ட சகல வழங்குதல்களும் கொடுப்பனவுகளும் வேறொருவரால் சங்கத்திற்கு முன் வைக்கப்படும் ஒரு விண்ணப்பத்திற்கு எதிராக செல்லுபடியானதாகவும் அதிகாரமுடையதாகவும் இருக்கும்.

இளம் வயதினரால் அல்லது அவருக்காக செய்யப்பட்ட சேமிப்பு.

28. (1) பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் இளம் வயதினர்களின் அல்லது அவர்களது நன்மைக்காக வைப்புகளை பொறுப்பேற்க முடியுமென்பதுடன் அந்த வைப்புகள் சம்பந்தமாக செலுத்தப்பட வேண்டிய வட்டி இளம் வயதினருக்கு பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் கொடுப்பனவுகள் சட்ட ரீதியானதாக இருக்க வேண்டும். இளம் வயதினர்களால் செய்யப்பட்ட ஏதாவது வைப்பீடு செய்தல் அதற்கு சேர்க்கப்பட்ட வட்டியுடன் அந்த இளம் வயதினருக்கு செலுத்தப்பட வேண்டும். மேலும் இளம் வயதினருக்காக ஏதாவது வைப்பு செய்யப்பட்டமை அதற்கு சேர்ந்த வட்டியுடன் அந்த இளம் வயதினருடைய நன்மைக்காக அந்த இளம் வயதினருடைய பாதுகாவல் வழங்கப்பட வேண்டும்.

(2) இந்த சரத்தின்கீழ் சங்கத்தினால் யாராவது இளம் வயதினரொருவருக்கு அல்லது பாதுகாவலருக்கு செலுத்தப்பட்ட பணத்திற்காக அவரால் பெற்றுக்கொள்ளப்படும் இரசீது அப்பணம் சம்பந்தமாக அச்சங்கத்தின் பொறுப்புகள் நிறைவேற்றப்பட்டமைக்கு போதுமான அச்சங்கத்தின் உறுதிப்படுத்தலாகும்.

சங்கத்தின் கடன் சம்பந்தமாக முன்னால் உறுப்பினர் மற்றும் இறந்துபோன உறுப்பினரது பணத்தோடு சேர்ந்துள்ளமை பற்றி.

29. (1) முன்னால் உறுப்பினர் ஒருவர் அங்கத்தவராக இருந்து முடிவடைந்த திகதியில் இருந்து பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் கடன் சம்பந்தமாக அவரது பிணைப்பு அன்றிலிருந்து கணக்குப் பார்க்கும் இரண்டு வருட காலத்திற்குள் தொடர்ச்சியாக இருக்க வேண்டும்.

(2) அங்கத்தவர் இறந்த திகதியிலிருந்து கணக்குப் பார்க்கும் இரண்டு வருட காலத்திற்குள் அவரது பணம், அவர் இறந்த திகதி இல் இருந்து சங்கத்தின் கடன் சம்பந்தமாக உடன்பட்டிருக்க வேண்டும்.

அங்கத்தவர் பெயர்ப்பட்டியல்.

30. ஏதாவது பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் பராமரிக்கப்பட்டு வரும் அங்கத்தவர்களின் பெயர்ப்பட்டியல் அல்லது அட்டவணை அதில் குறிப்பிட்டுள்ள கீழேயுள்ள விபரங்களில் ஏதாவது விபரங்கள் பற்றி மேலோட்டமாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான சாட்சியாக இருக்க வேண்டும் -

(அ) அங்கத்தவராக யாராவது ஒருவருடைய பெயர் அப்பெயர்ப்பட்டியலில் பதியப்பட்ட திகதி ;

(ஆ) அங்கத்துவ இலக்கம் ;

(இ) அவ்வாறான ஒருவர் அங்கத்தவராக இருப்பதை நிறுத்திய திகதி.

சங்கத்தின் புத்தகங்களின் குறிப்புகளை உறுதிப்படுத்துதல்.

31. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றில் கொடுக்கல் வாங்கல் செய்யும் போது முறையாக பேணப்படும் புத்தகத்தின் ஏதாவது குறிப்பொன்றின் பிரதியொன்று திட்டமொன்றில் உறுதிப்படுத்தக்கூடிய ஏதாவதொரு விதத்தில் உறுப்படுத்தப்பட்டிருப்பின் அக்குறிப்பு இருந்ததாக பார்த்தவுடன் ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சியாக ஏதாவது சிவில் அல்லது சட்டக்கோவையில் ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலும் அந்த ஆரம்ப குறிப்பு ஏற்றுக்கொள்ளப்படும் சகல சந்தர்ப்பங்களிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு அப்பிரதியில் குறிப்பிட்டிருந்த விடயங்கள் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் கணக்குகள் பற்றிய சாட்சியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

(2) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று பங்குதாரர் அல்லாத ஏதாவது சட்ட விடயத்தில், (1) வது உப விதிகளின் கீழ் உறுதிப்படுத்தக்கூடிய விடயங்கள் உள்ள சங்கத்தின் புத்தகங்களில் ஏதாவதொரு புத்தகத்தை சமர்ப்பிக்குமாறு அல்லது அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது விடயங்கள், கொடுக்கல் வாங்கல் மற்றும் கணக்குகளை உறுதிப்படுத்துவதற்காக அங்கத்தவர் என்ற வகையில் வருமாறு நீதி மன்றத்தினால் முக்கிய விடயமாகக் கொண்டு அவ்வாறு செய்வதற்கு உத்தரவிட்டால் அன்றி அச்சங்கத்தின் எந்தவொரு உத்தியோகத்தரையும் வற்புறுத்தக் கூடாது.

சங்கமென்ற வகையில் உறுதி மொழியாக பத்திரங்களை வெளியிடுதல்.

32. தற்போது அதிகாரத்திலுள்ள சட்டத்தில் அல்லது வேறு சட்டங்களை மதிக்காது பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் –

(அ) பொதுவான கணக்கு இருப்புக்கு பிணையாக அச் சங்கத்தில் இருக்கும் படிவங்கள் உறுதி மொழியாக இருக்க முடியும், மேலும்.

(ஆ) சங்கமொன்றிற்கு விடுக்கப்பட்டிருக்கும் அறிவித்தல் முடிந்த திகதியில் பணம் வழங்கப்பட்டிருக்காவிட்டால் நீதி மன்றத்திற்கு செல்லாது அந்த உறுதிப்படிவங்களில் சிலவற்றை அல்லது அனைத்தையும் விற்று அதன் மூலம் கிடைக்கும் பணத்தை அக்கணக்கு இருப்புக்கு வைப்பிலிருமாறு கடன் உரிமையாளருக்கு அதிகாரமளிக்க வேண்டும்.

சொத்துக்களை கையகப்படுத்துதலும் விற்பதற்கான உரிமை.

33. பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் குறிக்கோள்கள் சம்பந்தமான ஏதாவது விடயத்திற்காக கூட்டுறவு வங்கி அல்லது நிதிச் சேவைக்குரிய பெயர் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவிற்கு அதிகமான பெறுமதியுடன் ஏனைய வியாபாரப் பிரவுகளுக்கு உரிய பெயர், ஐந்து இலட்சத்துக்கு அதிகமான பெறுமதியுள்ள வியாபாரப் பொருட்கள் அற்ற எந்தவொரு அசையும் அல்லது அசையாத சொத்துக்களை கொள்வனவு செய்தல் விற்றல், அடகு வைத்தல் குத்தகைக்கு விடல், மாற்றிக் கொள்ளல், அல்லது வேறு விதத்தில் நீக்கம் செய்யும் போது சங்கத்தின் பொதுச் சபையின் அனுமதிக்கு மேலதிகமாக பதிவாளரின் முழு அனுமதியும் எழுத்து மூலம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

காணி மற்றும் கட்டடங்களை கட்டாயமாகக் கையகப்படுத்தல்.

34. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் குறிக்கோள்கள் சம்பந்தமான செயல்களுக்காக ஏதாவதொரு காணியை அல்லது கட்டடத்தை தேவையான சந்தர்ப்பத்தில் அச்செயல்கள் பொது செயல்களாக கருதப்பட வேண்டுமென்பதுடன் அரசினால் அச்சங்கத்திற்காக காணியை கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் அக்காணியை அல்லது கட்டடத்தைக் கையகப்படுத்திக்கொள்ளலாம்.

(2) பதிவு செய்யப்பட்ட சங்கத்திற்காக அரசினால் காணியை கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் ஏதாவது காணியை அல்லது கட்டடத்தை கையகப்படுத்த வேண்டிய சந்தர்ப்பத்தில் அச்சங்கத்தினால் அந்த காணி அல்லது கட்டடம் சம்பந்தமாக அச்சட்டத்தின் 38வது சரத்தின் கீழ் கட்டளையிடுவதற்கு முன் அக்காணி அல்லது கட்டடம் பற்றிச் செலுத்த வேண்டிய நட்ட ஈடாக அச்சட்டத்திக் கீழ் நிச்சயிக்கப்படும் பணம் மற்றும் கையகப்படுத்தும் நடவடிக்கைகளின் போது அரசினால் மேற்கொள்ளப்படும் செலவுகளும் அரசுக்கு செலுத்த வேண்டும்.

(3) எனினும் அச்சட்டத்தின் கீழ் நட்டஈட்டுத் தொகையைத் தீர்மானிப்பதற்கு முன் ஏதாவது அவசர காரியத்தைக்காரணமாகக் கொண்டு ஏதாவது காணி அல்லது கட்டடத்தைக் கையகப்படுத்திக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பத்தில் அக்காணி அல்லது கட்டடம் சம்பந்தமாக செலுத்த வேண்டிய நட்ட ஈடாக நிச்சயிக்கக் கூடியதென கையகப்படுத்தும் அதிகாரி கருதுவாராயின் அத்தொகையைக் கட்டளையிடுவதற்கு முன் அச்சங்கத்தின் மூலம் அரசுக்கு செலுத்த வேண்டியதுடன் மிகுதி பணம் இருப்பின் அந்த மிகுதிப் பணத்தை அந்த சட்டத்தின் கீழ் நட்ட ஈட்டுத் தொகை தீர்மானிக்கப்பட்டதன் பின்பு செலுத்த வேண்டும்.

## VI வது அத்தியாயம்

இடைக்கால அரசியலமைப்புக்கேற்ற பொது விதிமுறைகள்

சங்கமொன்றின் இடைக்கால அரசியலமைப்புகளில் அங்கத்தவர் உட்படுதல் பற்றி.

35. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் சகல இடைக்கால அரசியலமைப்பிலும் அந்த இடைக்கால யாப்பு பதிவு செய்யப்பட்டதன் பின் அச்சங்கத்தின் ஒவ்வொரு அங்கத்தவராலும் அந்த அரசியலமைப்பின் ஒழுங்கு விதிகளைப் பின்பற்ற ஒவ்வொரு அங்கத்தவரும் வழங்கிய உறுதியும் அந்த இடைக்கால அரசியமைப்பில் உள்ளடக்கப்பட்டிருப்பின் செய்யும் அளவிற்கு சங்கமும் அதன் அங்கத்தவரும் உட்பட்டிருக்க வேண்டும்.

(2) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் இடைக்கால அரசியலமைப்பின் பொருள் விளக்கம் சம்பந்தமாக ஏற்படும் ஏதாவது முரண்பாட்டினைத் தீர்மானிப்பதற்காக பதிவாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதுடன் அது சம்பந்தமாக அவரது தீர்மானம் சட்ட ரீதியானதும் இறுதியானதும் தீர்க்கமானதுமாக இருக்க வேண்டும்.

36. இடைக்கால யாப்பினைத் தயாரிப்பதற்கு ஏதாவது செயலொழுங்கொன்றின் அதிகாரம் அளிக்கப்பட்ட ஏதாவது விடயம் பற்றி பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட எந்தவொரு யாப்பும் அந்த வியாபாரத்தைத் தடை செய்யும் ஒப்பந்தமாகும் எனும் காரணத்தின் பேரில் மட்டும் எந்தவொரு நீதிமன்றத்திலும் விவாதிக்க முடியாது. வியாபாரத்தைத் தடை செய்யும் இடைக்கால யாப்பினைத் தயாரிக்கும் அதிகாரம்.

37. பதிவு செய்யப்பட்டதொரு சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட இடைக்கால யாப்புகளில் சங்கத்தின் இடைக்கால யாப்புகளை மீறுவது சம்பந்தமாக, அதன் அங்கத்தவருக்கு தண்டத்தைத் தீர்மானிப்பதற்கான விதிகளுக்கமைய ஒழுங்கு விதிகளைத் தயாரிக்க முடியும் எனினும் - அங்கத்தவர்களுக்கு தண்டத்தைத் தீர்மானிப்பதற்கான இடைக்கால யாப்பினை தயாரிக்கும் அதிகாரம்.

(அ) சங்கத்தினால் அந்த தண்டம் தீர்மானிக்க எண்ணுவதோடு மற்றும் அதற்கான காரணம் அவருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தாலன்றி மற்றும்,

(ஆ) யாப்பு விதிகளில் நிச்சயிக்கக் கூடிய காலத்திற்குள் மற்றும் விதத்தில் அந்தத் தண்டத்தை நிச்சயிக்கப்படுவதற்கு எதிராக பொதுவான காரணத்தைக்காட்ட அவர் தவறியிருந்தாலன்றி எந்தவொரு அங்கத்தவருக்கும் அந்த தண்டத்தைத் தீர்மானிக்க முடியாது.

## VII வது அத்தியாயம்

### பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் சொத்துக்களும் நிதியும்

38. (1) பதிவு செய்யப்ட்ட சங்கத்தினால் அங்கத்தவரல்லாத எவரொருவருக்கும் எந்தவொரு கடனும் வழங்கக் கூடாது. அனுமதியுடன் அவரால் தீர்மானிக்கக்கூடிய நிபந்தனைகளின் பேரிலும் பொதுச் சபையின் அனுமதியுடன் பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் குறிப்பிட்ட சங்கத்தோடு கூடிய அங்கத்துவம் உள்ள வேறு பதிவு செய்யப்பட்ட சங்கத்திற்கு கடன் வழங்க முடியும். பதிவு செய்யப்பட்ட சங்கங்களில் வழங்கப்படும் கடன்.

(2) குறிப்பிட்ட பொதுச் சபையின் அனுமதியுடன் அன்றி பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் விவசாய உற்பத்தியற்ற ஏதாவது அசையும் சொத்துக்களின் பிணையின் பேரில் பணத்தைக் கடனுக்கு கொடுக்க முடியாததாக இருக்க வேண்டும்.

39. (1) பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் இந்நியதிச்சட்டத்தின் **XIV** ஆவது அத்தியாயத்திற்கேற்ப விதிக்கப்படும் கூட்டுறவு வங்கி மற்றும் நிதி செயல்பாட்டு விதிகள் சட்டம் மற்றும் கூட்டுறவுச் சங்க சட்ட விதிகளில் அல்லது இடைக்கால அரசியலமைப்பில் குறித்துரைக்கப்படக் கூடிய அளவுக்கு மற்றும் தீர்மானிக்கக்கூடிய நிபந்தனைகளின் கீழ் மட்டும் அங்கத்தவரல்லாத ஒருவரின் வைப்பீடு மற்றும் கடன் பணத்தைப் பொறுப்பேற்க வேண்டும். பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் பொறுப்பேற்கப்படும் வைப்புகள் மற்றும் கடன்.

(2) பதிவு செய்யப்பட்ட சங்கத்திற்கு ஏதாவது அசையும் அல்லது அசையாச் சொத்தொன்று அடகு வைத்து வங்கியொன்றினால் கடன் வழங்கிய சந்தர்ப்பத்தில் அட்டவணை பதிவு செய்யும் கட்டளைச் சட்டத்தின் கீழ் அந்த அடகு பதிவு செய்யப்பட்ட திகதிக்கு முன் அந்தக் கட்டளைச் சட்டத்தின் கீழ் முறையாகப் பதிவு செய்யப்பட்டிருப்பினும் அச் சொத்திற்கு பாதிப்பேற்படுத்துவதற்காக அடகு அல்லது அவ்வாறு பதிவு செய்யப்பட்ட அடகின் பாதுகாப்பு அவ்வாறு பாதிப்பேற்படுத்தும் கொடுப்பனவை செலுத்த கட்டுப்பட்டிருந்தாலன்றி அச்சொத்திற்குப் பாதிப்பேற்படுத்தும் அந்தப் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் எந்த விதத்திலான அல்லது ஏனைய சகல கடனுக்கும் அல்லது பாதிப்பேற்படுத்தும் சகல அடகுக்கும் கொடுப்பனவுக்கும் உட்பட்டிருப்பதற்கு மேலதிகமாக முக்கியத்துவத்துடன் அந்த இடம் பதிவு செய்யப்படும் தினத்திலிருந்து மற்றும் அதன் பிறகு அந்த அடகின் கீழ் பணத்தை செலுத்த அச்சொத்துக்கள் உட்பட்டிருக்க வேண்டும்.

அங்கத்தவரல்லாத ஒருவருடன் செய்யப்படும் வேறு கொடுக்கல் வாங்கல்களை மட்டுப்படுத்துதல்.

40. பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் அங்கத்தவரல்லாத ஒருவருடன் செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்கள் 38 மற்றும் 39 வது யாப்புகளின் ஒழுங்கு விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விதிமுறைகளில் குறிப்பிட்டிருக்கும் விதத்திலன்றி சட்டத்தில் தீர்மானிக்கக் கூடிய தடை மற்றும் மட்டுப்படுத்தல்களுக்கு சங்கத்தின் நிர்வாக குழுக்கள் கீழ்படிந்து செயல்பட வேண்டும்.

சங்கத்தின் நிதியை முதலீடு செய்தல்.

41. (1) பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் பொறுப்புகள் கட்டளைச்சட்டத்தின் 20ஆவது சரத்தில் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது சொத்துக்கள் பற்றி முதலாவது அடகற்ற ஏதாவது பாதுகாப்புப்படிவங்களில் அல்லது அரசின் வங்கியாளருடன் அல்லது பதிவாளரால் கூட்டுறவு வங்கி மற்றும் நிதி நடவடிக்கைகள் முறையின் கீழ் இந்த விடயத்திற்காக அனுமதிக்கப்பட்ட வங்கியாளர் என்ற வகையில் செயல்படும் யாராவது ஒருவருடன் அல்லது பதிவாளரால் கூட்டுறவு வங்கி மற்றும் நிதி நடவடிக்கைகள் முறையின் கீழ் இந்த விடயத்திற்காக அனுமதிக்கப்பட்ட வங்கியாளர் என்ற வகையில் செயல்படும் யாராவது ஒருவருடன் அல்லது பதிவாளரால் இந்த விடயத்திற்காக அனுமதிக்கப்படும் வேறொரு பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் பங்குகளில் அல்லது பிணையின் பேரில் விதிகளின் மூலம் அனுமதி வழங்கப்பட்டடிருக்கும் வேறு விதத்தில் சங்கத்தின் நிதியை வைப்பிலிட அல்லது முதலீடு செய்ய முடியும்.

(2) இந்நியதிச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுமாயின் செல்லுபடியாகக் கூடியதாகவிருந்த இந்த நியதிச்சட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன் செய்யப்பட்ட ஏதாவது வைப்புகள் அல்லது முதலீடுகள் இதன் மூலம் செல்லுபடியானதாக்கி உறுதிப்படுத்தப்படுகிறது.

இலாபம் பற்றி பொருத்தமாக்குதல்.

42. (1) பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் 44வது சரத்தின் கீழ் கணக்காளரால் தீர்மானிக்கப்படும் விதத்தில் ஏதாவது பணம் ஒரு வருடத்திற்குள் அதிலுள்ள மொத்த இலாபத்தில் -

(அ) அந்த மொத்த இலாபத்தில் நூற்றுக்கு இருபத்தைந்து வீதத்திற்கு குறையாத ஏதாவது தொகை சங்கத்தின் புதையல் நிதிக்கு சட்ட பூர்வமான குழுமத்திற்கு மாற்றப்பட வேண்டும் அதே போன்று.

(ஆ) விதிகளில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவு நிதிக்கு மொத்த இலாபத்தில் விதிகளின் மூலம் தீர்மானிக்கக் கூடிய ஏதாவது பங்கொன்று பங்களிப்பாக செலுத்த வேண்டும்.

(2) மொத்த இலாபத்தின் பகுதி கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் அல்லது அதன் ஏதாவதொன்றுக்காக பயன்பாட்டுக்கு எடுக்க முடியும்.

(அ) அங்கத்தவர்களால் செலுத்தி முடிக்கப்பட்டிருக்கும் பங்கு முதலீடுகள் சம்பந்தமாக விதிகளின் கீழ் தீர்மானிக்கப்படும் அளவுக்கு அதிகமாகாத அளவின்படி அங்கத்தவர்களுக்கு இலாபப் பங்குகளை செலுத்துதல்.

(ஆ) அங்கத்தவர்களால் சங்கத்துடன் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி பற்றிய இடைக்கால அரசியலமைப்பில் குறிப்பிட்ட அளவுக்கு மற்றும் விகிதத்தில் அவர்களுக்கு வெளியீடு செலுத்துதல்.

(இ) இடைக்கால அரசியலமைப்பில் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள நிதியத்திற்குப் பங்களிப்புக் கொடையை வழங்குதல்.

(ஈ) இடைக்கால அரசியலமைப்பில் நிலையாக குறிப்பிடப்படக்கூடிய வேறு எவருக்காவது செலுத்துதல்.

(உ) ஏதாவது சமூக கலாச்சார அல்லது களியாட்ட நிகழ்வுகளுக்காக அல்லது பிரதேச அல்லது மக்கள் நலனுக்கான வேறு நிதியத்தை இலகுவாக்குவதற்காக, செலவழிப்பதற்காக பொது சுகநலன் சேவை நிதியத்திற்கு சங்கத்தின் ஒவ்வொரு வியாபாரப் பிரிவுகளின் மொத்த இலாத்தில் நூற்றுக்கு இரண்டு வீதத்திலான மொத்த இலாபத்தின் ஆகக் கூடிய நூற்றுக்கு பத்துக்கு அதிகமாகாத வீதத்தில் பணத்தை ஒதுக்குதல்,

(3) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் பதிவாளரின் பொதுவானதும் விசேஷமான அனுமதியின்றி 1 உம் 2ஆவது உப சரத்தில் குறிப்பிடப்பட்டவாறு எந்தவொரு இலாபப் பகிர்வும் செய்யக்கூடாது.

## VIII வது அத்தியாயம்

### பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் கணக்குகள், வரவு செலவு, கணக்காய்வு, விசாரணை, ஆய்வு மற்றும் விமர்சனம்

*சங்கத்தின் கணக்கு.*

43. (1) சகல பதிவு செய்யப்பட்ட சங்கமும் சங்கத்தின் வருமானம், மற்றும் செலவுகள், சொத்துக்களும் வைப்புகளும் மற்றும் வேறு சகல கொடுக்கல் வாங்கல்களும் பற்றி முறையான கணக்கு பதிவாளரால் தீர்மானிக்கப்படும் அளவுக்கு ஏற்ப பராமரிக்கப்பட வேண்டுமென்பதுடன் சகல சங்கங்களும் அவ்வாறு செயல்பட வேண்டும்.

(2) பதிவாளரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டவரால் தீர்மானிக்கப்படும் விதத்தில் சங்கத்தின் நடவடிக்கைகளுக்குரிய கணக்குகள், உப பட்டியல் மற்றும் தரவுகள் பற்றி வருடாந்த அறிக்கையொன்றை சகல பதிவு செய்யப்பட்ட சங்கத்தினாலும் தயாரிக்கப்பட வேண்டும். அந்தக் கணக்கறிக்கை, அதற்குரிய பணம் வருடாந்தம் முடிந்து மூன்று மாதத்திற்குள் பதிவாளருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்படும் வேறு ஒருவருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(3) இந்த விதியின் ஒழுங்கு விதிகளில் ஒன்றில் செயல்படுவது பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் மீறப்படும் சந்தர்ப்பத்தில் அச்சங்கத்தின் நிர்வாகக் குழுவின் சகல உறுப்பினர்களும் மற்றும் அதற்குரிய பொறுப்புக்கூற வேண்டிய ஊழியர்களிருப்பின் அவர்கள் குற்றமொன்றிற்கு குற்றவாளியாவதுடன் நீதவான் முன்னிலையில் நடத்தப்படும் வழக்கு விசாரணையின் பின் குற்றவாளியாக்கப்பட்ட பின் நான்காயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட தண்டத்திற்கு அவர் உட்பட வேண்டும்.

(4) மேலே 43 (2) உட்பிரிவில் ஒழுங்கு விதிகளுக்கேற்ற விதத்தில் செயல்படாத சந்தர்ப்பத்தில் சங்கத்தின் வருடாந்த கணக்கறிக்கை தயாரிப்பதற்காக மேலதிகமாக மூன்று மாதத்திற்கு சலுகைக்காலம் வழங்குவதற்கு பதிவாளர் கவனத்திற்கெடுக்க முடியும். அதன்படியும் செயல்படாவிட்டால் பதிவாளரால் தீர்மானிக்கப்படும் ஒருவரைக் கொண்டு சங்கத்தின் கணக்குகள் தயாரிக்க முடியுமென்பதுடன் அதற்காக ஆகும் செலவினை அந்தச் செயலை செய்யாது விடுபவரிடமிருந்து விதிகளின்படி நிச்சயிக்கப்படும் விதத்தில் அறவிட்டுக்கொள்ள பதிவாளருக்கு முடியும்.

*வரவு செலவுகளைத் தயாரித்தல்.*

(5) (அ) சகல பதிவு செய்யப்பட்ட சங்கங்களினாலும் வருமான இலக்கு மீண்டெழும் மற்றும் முதலீட்டு செலவுகள், நிதி மற்றும் நிதி வழங்குகள், நிதி முதலீடு, வரவு செலவு உட்படுத்தப்பட்ட கணக்கு வருமானம் மற்றும் செலவுக் கணக்குகள் மற்றும் பற்றுப் பத்திரத்தில் காட்டப்படும் பட்டியல் என்பன சகல நிதி ஆண்டிற்காகவும் தயாரிக்கப்பட வேண்டும்.

(ஆ) வரவு செலவுப்பட்டியலுக்கேற்ற நிதி ஆண்டு ஆரம்பிப்பதற்கு முதல் இரண்டு மாதத்திற்கு முன் அது அனுமதிக்காக சங்கத்தின் பொதுச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(இ) அந்த வரவு செலவு அறிக்கைக்குரிய நிதி ஆண்டு ஆரம்பிப்பதற்கு முன் ஒரு பஞ்சாங்க மாதத்திற்காவது முன்பு, அந்த அந்த வரவு செலவு அறிக்கையின் பிரதியொன்று பதிவாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

(ஈ) அந்த வரவு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டிய மாதிரிப்படிவம் மற்றும் விதம் அதில் உள்ளடக்கப்பட வேண்டிய குறைந்த தகவல்களும் பதிவாளரால் தீர்மானிக்கப்படும் விதத்திலானதாக வேண்டும்.

*கணக்காய்வு.*

44. (1) ஒவ்வொரு வருடத்திற்கொரு முறையும் சகல பதிவு செய்யப்பட்ட சங்கமும் கணக்குப் பதிவாளரால் கணக்காய்வு செய்தல் அல்லது அதற்கான ஆவணங்களிலான பொதுவான அல்லது விஷேட பணிப்புரையின் பேரில் அவரால் அதிகாரமளிக்கப்படும் யாராவது ஒரு அரச உத்தியோகத்தர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது பட்டயக் கணக்காளர் ஒருவர் அல்லது பட்டயக் கணக்காளர் கூட்டுத்தாபனத்தைக் கொண்டு கணக்காய்வு செய்ய முடியும்.

(2) (1) ஆவது உப விதியில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வில் -

(அ) காலம் கடந்துவிட்ட கடன்கள் சம்பந்தமான விசாரணையொன்று ;

(ஆ) பதிவு செய்துள்ள சங்கங்களின் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய மதிப்பீடும் உண்மையுறுதி நிலையும்.

(இ) முறையான நிதி நிர்வாகமும், சங்க நடவடிக்கைகள் சம்பந்தமாக தொடர்ச்சியான கண்காணிப்பு செய்யக்கூடிய வகையில் தகவல்களை சமர்ப்பித்தலும், அத்தாட்சிபடுத்துவதற்கேற்ற அமைப்பு முறைகளும், செயலொழுங்கு முறைகளும், புத்தகங்கள், அறிக்கைகள் பிற ஆவணங்கள் பயன்தரக்கூடிய வகையில் செயல்படுகின்றதா என்பதைப் பற்றிய விசாரணையொன்று,

(ஈ) சங்கத்தை நடத்திச்செல்லல், இந்த நியதிச்சட்டத்தில் அல்லது இதன் கீழ் ஆக்கப்பட்ட விதிகள் கட்டளைகள் யாப்புப் பிரமாணங்கள் ஆகியவற்றுக்கு அனுகூலமாக அமைகிறதா ? சங்கத்தின் அலுவல்களை பரிபாலனம் செய்தல் அந்த நியதிச் சட்டத்தின் விதிகள், கட்டளைகள் யாப்பு விதிப் பிரமாணங்கள் ஆகியவற்றிற்கு அனுகூலமாக செய்யப்பட்டுள்ளதா என்பதைப் பற்றிய விசாரணையொன்று,

(உ) நிதியை உபயோக்கப்படுத்துவது செயல் திறனோடும், சிக்கனத்தோடும் அமுல்படுத்தப்படுகின்றதா என்பதைப்பற்றிய விசாரணையொன்று,

(ஊ) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றுக்கு சொந்தமானதும் அதன் நிர்வாகத்துக்கு உட்பட்டதுமான நிதியினதும் சொத்துக்களினதும் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்காக திருப்திகரமான செயலொழுங்கு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதா என்பதைப் பற்றிய விசாரணையொன்று,

(எ) கணக்குப் பணம் முதலீடு செய்தல், மதிப்பிடல் ஆகியன சம்பந்தமாகவுள்ள சித்தாந்தங்களின் மீது தகுந்த கவனிப்பு செலுத்தியுள்ள காலவரையறைகள் சம்பந்தமாகவும் சங்கத்தின் நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் பிழையற்ற கணக்காய்வினை சமர்ப்பிப்பதற்காகவும் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட கணக்குகள் திட்டமிடப்பட்டுள்ளதா என்பதைப் பற்றிய விசாரணையொன்றும்.

(ஏ) சங்கத்தின் கணக்குகள் முறையாக்கிக்கொள்வதற்கும் திருத்துவதற்கும் ஏற்றவகையில் கணக்காய்வு நடாத்தப்பட்டுள்ளதா என்பதும் உள்ளகக் கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முறைப்பாடுகள் வழிக்காட்டல்களை திருத்திக்கொள்ள செயல்பட்டுள்ளதா என்பதை பற்றிய விசாரணை

**XIV** ஆவது அத்தியாத்தின் கூட்டுறவு வங்கி மற்றும் நிதி நடவடிக்கைகள் நடத்தப்பட்டுள்ளதா என்பது பற்றி மற்றும் கட்டுப்பாடுகள் வேறு உரிய காரணங்களும் உள்ளாகி இருத்தல் வேண்டும்.

(3) (1) வது உப பிரிவின் கீழ் கணக்காய்வொன்றின் விடயம் சம்பந்தமாக பதிவாளரால் அல்லது அந்தக் கணக்குகளை ஆய்வு செய்வதற்காக அவரால் அதிகாமளிக்கப்படும் ஒருவர்.

(அ) பதிவாளரால் அல்லது கணக்காய்வுக்காக அவரால் அதிகாரமளிக்கப்படும் ஒருவரின் கருத்தின்படி சங்கத்தின் ஏதாவது கொடுப்பனவு அல்லது அதன் நடவடிக்கைகள் பற்றி முகாமைத்துவம் சம்பந்தமான முக்கிய தகவல்களை வழங்கக் கூடிய ஏற்கனவே இருந்த அல்லது தற்போதிருக்கும் சங்கத்தின் யாராவது பதவியாளர் பிரதிநிதி ஊழியர் அல்லது உறுப்பினர் அல்லது வேறொருவர்,

(ஆ) சங்கத்தின் நடவடிக்கைகளுக்குரிய ஏதாவது புத்தகத்தை, ஆவணத்தை அல்லது சங்கத்திற்குரிய ஏதாவது பணத்தை பாதுகாப்புப்படிவம் அல்லது வேறு சொத்துக்களைச் சமர்ப்பிக்குமாறு அவை பொறுப்பில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்கும் ஏற்கனவே இருந்த அல்லது தற்போதிருக்கும் சங்கத்தின் பதவியாளருக்கு பிரதிநிதிக்கு, ஊழியருக்கு அல்லது அங்கத்தவருக்கு அல்லது வேறொருவருக்கு விடுத்தல் மற்றும்,

(இ) அந்தக் கணக்காய்வின் போது தம்மால் மோசடியொன்று கண்டுபிடிக்கப்படும் போது சங்கத்தின் கணக்குப் புத்தகத்தை அல்லது ஆவணத்தைத் தமது பொறுப்பில் எடுக்கும் அதிகாரம் இருக்க வேண்டும்.

(4) பதிவாளரால் அல்லது பதிவாளரால் சம்பந்தப்பட்ட விடயத்திற்காக பொதுவான அல்லது விஷேட பணிப்பின் அறிவுறுத்தலின் மூலம் எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்டவருக்கு பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் நடத்தப்படும் சகல புத்தகங்களும், ஆவணங்கள், கணக்குகள் மற்றும் கடிதங்கள், பத்திரங்கள் மற்றும் கையிலிருப்பில் உள்ள பணம் எல்லா சந்தர்ப்பத்திலும் பெற்றுக்கொள்ளவும், பரிசீலனை செய்யவும் உரிமை இருக்க வேண்டும். மேலும் மேலே கூறப்பட்டவை பொறுப்பாக இருக்கும் சகலரும் அவற்றைப் பதிவாளருக்கு அல்லது அந்த அதிகாரமளிக்கப்படுபவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(5) இல்லையேல் சங்கத்தின் கொடுப்பனவுகள் மற்றும் நடவடிக்கைகள் சம்பந்தமாக பதிவாளரால் அல்லது விசாரணை அல்லது கணக்காய்வு செய்யும் அதற்காக அதிகாரமளிக்கப்பட்டுவரால் தீர்மானிக்கப்படும் தகவல்களை வழங்க வேண்டும்.

(6) பதிவாளர் அல்லது பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் கணக்காய்வினை செய்வதற்காக அவரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அனைவரும் குற்றவியல் சட்டக் கோவையின் கருத்துப்படி அரச ஊழியர்களாக கருதப்பட வேண்டும் -

(அ) (i) சங்கமொன்றின் அமைப்பு முகாமைத்துவத்திற்கு பொறுப்பாக இருக்கின்ற பொறுப்பாக இருந்த அல்லது சங்கத்தின் உத்தியோகத்தர் அல்லது ஊழியராக இருக்கும் அல்லது ஏதோவொரு சந்தர்ப்பத்தில் இருந்த யாராவது ஒருவரால் இந்நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது வேறொரு சட்டத்தின் கீழ் அல்லது விதிக்கப்பட்டுள்ள விதியின்படி அல்லது பதிவாளரால் அனுமதிக்கப்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு நிதி ஒழுங்கு விதிமுறைகளுக்கேற்ப சட்டங்களில் இல்லாவிட்டாலும் ஆணைகளில் அல்லது பதிவாளரால் அல்லது கூட்டுறவு ஊழியர் சேவை ஆணைக் குழுவால் விடுக்கப்படும் சுற்று நிருபத்தின் அல்லது பொதுப் பணிப்புரைகள் எதுவும் அல்லது சங்கத்தின் இடைக்கால அரசியல் சாசனங்களில் அல்லது சங்கத்தின் நிர்வாக விதிமுறைகளின் ஒழுங்குவிதிகளுக்கு மாறாக ஏதாவது கட்டணம் செலுத்தப்பட்டிருப்பதாக அல்லது சங்கத்தின் ஏதாவது நிதி பாவிக்கப்பட்டுள்ளதாக

(ஆ) அவருக்கு இடமளிக்க முடியாமைக்கு ஏதாவது மேலதிகக் கட்டணம் அறவிடுவதற்கு முன் பதிவாளரால் அல்லது பதிவாளரால் அதற்காக எழுத்து மூலம் சாதாரண அல்லது விசேட பணிப்புரையின் மூலம் அதிகாரமளிக்கப்படும் ஒருவரால் பொருத்தமானது என நினைக்கக் கூடிய விடயம் சம்பந்தமாக விளக்கமளிக்க அல்லது ஏதாவது சமர்ப்பிப்பதற்கு அவருக்கு அவரால் சந்தர்ப்பமளிக்க வேண்டுமென்பதுடன் அவ்வாறு இடமளிக்காமை அல்லது மேலதிகக் கட்டணம் அறவிடல் செய்தால் பதிவாளரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்படவரின் தீர்மானத்திற்கான காரணத்தைக்கேட்டு அவரிடம் கேட்கப்பட்டதன் பின் அந்த இடமளிக்காமை அல்லது மேலதிகக் கட்டணம் அறவிட்டமை கிடைத்தால் பதிவாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டவரின் தீர்மானத்திற்கான காரணத்தைக்கேட்டு அவருக்கு அறிவித்ததன் பின் அந்த இடமளிக்காமை அல்லது மேலதிக அறவீடு பற்றிய தீர்மானத்திற்கான காரணத்தை எழுத்து மூலம் அவருக்கு வழங்க வேண்டும்.

**II (i)** ஆவது உப விதியின் கீழான கணக்காய்வு நடத்தப்படும் போது அல்லது அதன் முடிவில் கண்டு பிடிக்கப்படாவிட்டால் பதிவாளரால் அவ்வாறான சகல கொடுப்பனவுகளுக்கும் மற்றும் அவ்வாறான நிதி பாவிப்பதற்கு இடமளிக்கக் கூடாது என்பதுடன் அந்த சட்ட விரோதக் கொடுப்பனவு அல்லது செய்வதற்கு இடமளித்தவருக்கு மேலதிக அறவீடு செய்யப்பட வேண்டும். மேலும் அவர் கவனயீனமாக முறைகேடான காரணத்தினால் செய்யப்பட்ட ஏதாவது குறைபாடுகள் அல்லது இழப்புகள் மற்றும் அவரால் கணக்குக் காட்டப்பட வேண்டியிருப்பினும் அவ்வாறு கணக்கு காட்டாத ஏதாவது பணம் அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டும். மேலும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவரிடமிருந்து அறிவிடப்பட வேண்டிய தொகை உறுதிப்படுத்தப்பட்டு தமது தீர்மானத்தை எழுத்து மூலம் அவருக்கு அறிவிக்க வேண்டும்.

(இ) பதிவாளரால் செய்யப்பட்ட தீர்மானத்திற்கேற்ப செயல்படும் சந்தர்ப்பத்தில் 66(2) ஆவது சரத்தின் ஒழுங்கு விதிகள் பொருத்தமுடையதாக இருக்கும்.

கணக்காய்வின் குறைபாடுகளைக் அறிவித்தல்.

45. (1) பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் செயல்பாடுகளின் குறைபாடுகள் 44வது சரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்பட்டால் பதிவாளரால் அந்த குறைபாடுகள் சங்கம் அறிந்து கொள்ள மற்றும் அது வேறு சங்கத்தின் அங்கத்தவராயின் அந்த வேறு சங்கம் அறிந்து கொள்வதற்காக திட்டமிட வேண்டும்.

(2) பதிவாளரால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சம்பந்தமாக நிவர்த்திப்பதற்காக பணிப்புரையில் உறுதியாக குறிப்பிடக் கூடிய ஏதாவது ஆணையில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் எடுக்குமாறு சங்கத்திற்கு அல்லது அதன் கட்டளையிடும் பதிவாளருக்கு ஆணையிட வேண்டும்.

விசாரணைகளும் பரிசீலனைகளும்.

46. (1) பதிவாளர் தன்னால் வழிகாட்டப்படுவது போலவே பதிவு பெற்ற சங்கத்தின் அமைவு, செயலொழுங்குத் தன்மை நிதழ நிலைமை விசாரணையோ புத்தகங்களின் பரிசீலனையோ நடத்தப்படலாம், மேலும் செயற் குழுவிலுள்ள பெரும் பான்மையோரின் கோரிக்கையின் பேரில் பதிவு பெற்றுள்ள சங்கமொன்றின் உறுப்பினர்களுள் மூன்றிலொன்றுக்கு குறையாத அங்கத்தவர்களின் வேண்டுகோளின் பேரில் பதவி பெற்றுள்ள சங்கமொன்றின் அமைவு செயலொழுங்கு முறைகள், நிதி நிலைமை பற்றிய விசாரணையோ அவற்றின் ஆவணங்கள் பற்றிய பரிசீலனையையோ பதிவாளரினால் நடத்தப்படுதல் வேண்டும். பதிவாளரினால் மேற்படி காரியத்துக்காக எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்படும் எவரேனும் நபரொருவருக்கு பதிவு பெற்ற சங்கத்தின் அமைப்பு செயலொழுங்கு நிதி நிலைமை பற்றியோ அதிலுள்ள புத்தகங்களைப் பற்றியோ விசாரணைகளை நடாத்த கட்டளையிட முடியும்.

(2) 1 ஆம் உப உட்பிரிவின்படி விசாரணையொன்றை மேற்கொள்வதற்காக பதிவாளருக்கு அல்லது விசாரணையொன்றை பரிசீலனையொன்றை நடத்துவதற்கு அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஒரு நபருக்கு -

(அ) முன்னர் இருந்த அல்லது தற்போது இருக்கின்ற சங்கத்தின் எவரேனும் ஒரு அதிகாரி பிரதிநிதி சேவையாளரோ அல்லது உறுப்பினரோ பதிவாளரின் அல்லது விசாரிக்க, பரிசீலனை செய்ய அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட நபரின் கருத்துக்கமைய, சங்கத்தின் கொடுக்கல் வாங்கல் எவையேனும் சம்பந்தமாகவோ அவ்வலுவல்களை முகாமைப்படுத்துதல் சம்பந்தமாகவோ முக்கியமான தகவல்களை தரக்கூடிய எவரேனும் வேறு நபரை அழைக்க ;

(ஆ) ஏதேனும் புத்தகத்தை, ஆவணத்தை, நிதியை பிணையை அல்லது வேறு சொத்துக்களின் உரித்துள்ள அல்லது பொறுப்பாக இருக்கின்ற சங்கத்தில் முன்னர் இருந்த இப்போது இருக்கின்ற எவரேனும் அதிகாரிக்கும் பிரதிநிதிக்கும் சேவையாளருக்கும், அங்கத்தவருக்கும், அல்லது வேறொரு நபருக்கு சங்கத்தின் அலுவல்கள் சம்பந்தப்பட்ட புத்தகத்தையோ ஆவணத்தையோ சங்கத்துக்கு சொந்தமான ஏதேனும் பணப்பிணையையோ வேறு சொத்துக்களையோ சமர்ப்பிக்கும்படி கட்டளையிடுவதற்கு ;

(இ) தன்னால் வழிப்படுத்தப்பட்ட ஏதேனும் ஒரு காரணகாரியங்களை தீர்மானிப்பதற்காக தம்மால் குறிப்பிடப்படும் ஏதேனுமொரு நேரத்தில் ஏதேனுமொரு இடத்தில் சங்க உறுப்பினர்களின் கூட்டமொன்றை நடத்த அழைப்பு விடுவதற்கு ;

(ஈ) மேற்படி விசாரணை அல்லது பரிசீலனை இடம் பெறுகையில் மோசடியோ முறைக்கேடோ இருக்கிறது என்று நம்புவதற்கு தமக்கு போதுமான அளவு சான்றுகள் உள்ள சந்தர்ப்பத்தில் கணக்குப் புத்தகங்களையோ ஆவணங்களையோ தமது பொறுப்பில் எடுப்பதற்கு அதிகாரம் உண்டு.

(3) பதிவாளரும் இந்த உட்பிரிவின் கீழ் விசாரணையையோ பரிசீலனையையோ நடத்துவதற்கு அவரால் அதிகாரமளிக்கப்பட்ட சகல நபர்களும் குற்றத்தடுப்பு சட்டக்கோவையின் அர்த்தத்தின்படி அரசாங்க ஊழியர்களாக கணிக்கப்படல் வேண்டும்.

சங்கமொன்றின் நிதிப் புத்தகங்களை விசாரித்தல் மற்றும் விமர்சித்தல்.

47. (1) பதிவாளருக்கு ஏதாவதொரு பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் நிதிப் புத்தகங்கள், சொத்துக்கள், கணக்குகள் அல்லது வேறு எந்தவொரு ஆவணத்தையும் பரீட்சிக்கவும், சங்கத்தின் நடவடிக்கைகளை விமர்சிக்கவும் முடியும் அல்லது அதற்காக எழுத்து மூலம் அல்லது ஆணையின் மூலம் அவரால் அதிகாரமளிக்கப்படும் யாராவது ஒருவருக்கு அப்படியானதொரு விசாரணையை அல்லது விமர்சனம் செய்யுமாறு ஆணையிடலாம்.

(2) 1 வது உப சரத்தின் கீழ் பதிவாளருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்படும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு இந்நியதிச் சட்டத்தின் 46 (2) (அ) (ஆ) (இ) (ஈ) மற்றும் 46 (3) ஆம் சரத்தின் கீழ் உள்ள சகல அதிகாரங்களும் இருக்க வேண்டும்.

## IX வது அத்தியாயம்

பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் பதவியாளர்களின் சேவையை இடை நிறுத்துதல், பதவியாளர்களை நீக்குதல், மற்றும் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் நிர்வாகக் குழுவை கலைத்துவிடல்

*சங்கமொன்றின் நிர்வாகக் குழுவை கலைத்தல்.*

*48.* (1) 46 (1) ஆம் உட்பிரிவின் கீழ் விசாரணையின், பரிசீலனையின் பின்னர் பதிவு செய்யப்படும் உரித்துடைய செயற்குழுவினால் தமது காரியம் முறைப்படி நிறைவேற்றப்படவில்லையென்பது பதிவாளரின் அபிப்பிராயமாக அமையுமானால் அதனை கலைத்துவிடல் சம்பந்தமாக செய்குழுவின் ஏதேனும் எதிர்ப்பு இருப்பின் அவற்றை ஆராய்ந்து பார்த்த பின் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவிதத்தில் சங்கத்தின் பொதுச் சபையைக் கூட்டி காரணத்தைக்காட்டியதன் பின் எழுத்து மூலமான ஆணையின் மூலம் -

(அ) நிர்வாகக் குழுவைக் கலைத்துவிட முடியும். அவ்வாறு கலைக்கப்பட்ட நிர்வாகக் குழுவின் அங்கத்தவர்கள் அவர்கள் அவ்வாறு கலைக்கப்பட்ட தினத்திலிருந்து ஐந்து வருடம் முடியும் வரை பதிவு செய்யப்பட்ட எந்தவொரு சங்கத்தின் பதவிக்கும் நியமிக்கப்படத் தகுதியற்றவராவார்.

(ஆ) பதிவாளரால் சங்கத்தின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துதல் மற்றும் நிர்வகிப்பதற்கு பொருத்தமான தகுதிவாய்ந்த ஐந்து பேருக்கு மேற்படாத எண்ணிக்கையினரைக் கொண்ட நிர்வாக சபையாக நியமிக்க முடியுமென்பதுடன் அப்படிப்பட்டவர்களில் இரண்டு பேராவது கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களாக வேண்டும்

(இ) மேலே 1 (ஆ) இன் கீழ் பதிவாளரால் நிர்வாக சபைக்காக மேற்கொள்ளப்படும் நியமனங்கள் இரண்டு வருடத்திற்கு மேலதிகமாகாத காலத்திற்குள் அதிகாரத்திலிருக்கும் எனினும் பதிவாளரால் தமது விருப்பத்தின் பேரில் காலத்திற்கு காலம் ஆணையின் அதிகாரம் செயலில் இருக்கும் காலத்தை நீடிக்க வேண்டிய விடயத்திற்காக அந்த ஆணையை திருத்த முடியும். என்பதுடன் அந்த ஆணை அவ்வாறு வலுவிலிருக்கும் மொத்தக் காலத்திற்கும் அந்த நிர்வாக சபைக்கான காலம் மூன்று வருடத்திற்கு மேற்படக் கூடாது மேலும்,

(ஈ) அவ்வாறான நிர்வாக சபைக் கூட்டத்தின் கூட்ட நடப்பெண் 67 (3) உப விதியின் விதிமுறைகளுக்கு ஏற்றதாக வேண்டும்.

## X வது அத்தியாயம்

பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றைக் கலைத்துவிடல்

*கலைத்தல்.*

*49.* (1) 46 வது உபசரத்தின் கீழான விசாரணையில் அல்லது புத்தகங்கள் பற்றிய பரிசீலனையின் பின் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் அங்கத்தவர்களில் நான்கில் மூன்று பிரிவினரால் அல்லது சங்கத்தின் பொதுச் சபை பிரதிநிதித்துவப்படுத்தும் பொதுச் சபையாகும் போது அப்படிப்பட்ட பொதுச் சபையை பிரதிநிதித்துவப்படுத்த அதிகாரமுடைய முழுமையான பிரதிநிதிகள் எண்ணிக்கையானோரின் மூன்றில் இரண்டுக்கு குறையாத பிரதிநிதிகளின் வேண்டுகோளின் படி அதைக் கலைத்து விடுவதற்காக செய்யப்பட்ட விண்ணப்பம் கிடைத்தபின் மற்றும் தமது எதிர்ப்பைக் காட்டுவதற்கு சங்கத்திற்கு மற்றும் சங்கத்தின் கடனாளிகளுக்கு சந்தர்ப்பம் அளித்த பின் அச்சங்கத்தை கலைத்து விடலாம் என்று பதிவாளர் கருதினால் அவரால் தமது கையொப்பத்துடனான ஆணை மூலம் சங்கத்தின் பதிவினை இரத்து செய்ய முடியும்.

(2) பதிவு செய்யப்பட்ட ஏதாவதொரு சங்கத்தின் ஒரு அங்கத்தவரால் அல்லது ஒரு கடனாளியால் (1) வது உப சரத்தின் கீழ் ஆணையின் படி அத்தினத்திலிருந்து இரண்டு மாதத்திற்குள் அந்த ஆணைக்கு எதிராக மத்திய மாகாண மாகாண சபையின் கூட்டுறவு விடயப் பொறுப்பு அமைச்சருக்கு முறையீடு செய்ய முடியும்.

(3) சங்கமொன்றின் பதிவினை இரத்து செய்து ஆணை பிறப்பிக்கப்பட்ட தினத்திலிருந்து இரண்டு மாதத்திற்குள் எந்தவொரு முறையீடு முன் வைக்கப்படாத சந்தர்ப்பத்தில் அந்த ஆணைக்காலம் முடிந்து விட்டால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இரண்டு மாதத்திற்குள் முறையீடு கிடைக்கும் போது ஆணையை உறுதிப்படுத்தும் வரை அந்த ஆணை அதிகாரமற்றதாக இருக்க வேண்டும்.

(4).சங்கத்தின் பதிவினை பதிவாளரால் 49 (1) வது உப உட்பிரிவின் கீழ் இரத்து செய்யும் சந்தர்ப்பத்தில் சங்கத்தின் பதிவினை இரத்து செய்யும் ஆணை நடைமுறைப்படுத்தப்படும் வரை அல்லது முறையீட்டில் மத்திய மாகாண மாகாண சபையின் கூட்டுறவு விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களால் அந்த ஆணை இரத்து செய்யப்படும் வரை சங்கத்தின் புத்தகங்கள் ஆவணங்கள் மற்றும் வேறு சொத்துக்க்ளுக்கு பொறுப்பாக இருப்பதற்கு மற்றும் அந்த ஒருவர் அல்லது பல எண்ணிக்கையானோரை பதிவாளரால் நியமிக்க முடியும்.

அப்படி ஒருவர் அல்லது பலர் நியமிக்கப்படும் போது சங்கத்தின் நிர்வாகக் குழுவினால் அல்லது சங்கத்த்தின் புத்தகங்கள், ஆவணங்கள் மற்றும் வேறு சொத்துக்களுக்கு பொறுப்பாக இருக்கும் வேறொருவரால் அப்புத்தகம் ஆவணங்கள் வேறு சொத்துக்கள் முதலில் குறிப்பிட்டவருக்கு அல்லது பலருக்கு ஒப்படைக்கப்பட வேண்டுமென்பதுடன் பதிவினை இரத்து செய்யும் ஆணை நடைமுறையிலிருக்கும் வரை மத்திய மாகாண மாகாண சபையின் கூட்டுறவு விடயப் அபாறுப்பு அமைச்சர் அவர்களால் முறைப்பாடு கொடுத்த அப்பணிப்புரையில் அந்த ஆணை இரத்து செய்யப்படும் வரை அந்நிருவாகக்குழு செயலிழக்க வேண்டும்.

*சங்கமொன்றின் பதிவினை இரத்து செய்தல்.*

50. ஏதாவது பதிவு செய்யப்பட பதிவு செய்தலை -

(அ) ஏதாவது சங்கத்தை பதிவு செய்யும் போது கூட்டுறவு சட்டத்திற்கு ஏற்ற நிபந்தனையாக இந்நியதிச்சட்டத்தின் (4) (1) அ உட்பிரிவின் படி ஆக குறைந்தது இருக்க வேண்டிய எண்ணிக்கைக்கு அதிகமாக பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தால் ;

(ஆ) சங்கம் பதிவு செய்யப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள் சங்கம் வேலையை ஆரம்பிக்காவிட்டால் இந்த உட்பிரிவின் கீழ் இரத்து செய்யும் ஆணை விடுக்கப்பட்ட தினத்துக்கு முன் இரண்டு வருட காலத்திற்கு முன் தொடர்ச்சியாக சங்கம் செயலிழந்து உள்ளதாக பதிவாளரால் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்படவரால் மேற்கொள்ளப்படும் பொதுவான அல்லது விசேட விசாரணையின் பின் பதிவாளரின் விருப்பப்படி சந்தர்ப்பத்தில் பதிவாளரால் எழுத்து மூல ஆணையின் மூலம் இரத்து செய்ய முடியும்.

*பதிவு செய்தலை இரத்து செய்தலுக்கான வற்புறுத்தல்.*

51. பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் பதிவினை 49 ஆவது சரத்தின் அல்லது 50வது சரத்தின் கீழ் வரும் ஆணையின் இரத்துச் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் இதில் இதன் பிறகு கலைக்கப்பட்ட தினம் என குறிப்பிடப்படும் அந்த ஆணை நடைமுறைப்படுத்தப்படும் திகதியிலிருந்து அச்சங்கம் கூட்டுத்தாபனமாக செயல்பட்டதை நிறுத்த வேண்டும்.

எனினும் இந் நியதிச்சட்டத்தின் அல்லது இந்நியதிச்சட்டத்தின் மூலம் சங்கத்திற்கு வழங்கப்பட்ட சிறப்புரிமைகள் பதிவாளரால் சங்கத்திற்காக நியமிக்கப்பட்ட ஒடுக்குநர் அல்லது ஒடுக்குநர்களால் அளிக்கப்பட்டது எனக் கருதப்பட வேண்டும்.

*சங்கத்தின் பதிவினை கலைக்கப்பட்டதன் பின் ஒடுக்குதல்.*

52. 49 ஆவது உட்பிரிவு 50ஆவது உட்பிரிவின் படி சங்கத்தின் பதிவு செய்தல் கலைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அச்சங்கத்தின் ஒடுக்குநர் அல்லது ஒடுக்குநர்களாக ஒரு அல்லது பல எண்ணிக்கையானோரால் நியமிக்கப்பட முடியும் சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் 49 ஆவது உட்பிரிவு அல்லது 50ஆவது உட்பிரிவின் கீழ் கலைக்கப்பட்ட ஆணை நடைமுறைப்படுத்தப்படும் தினத்தில் சங்கத்தின் சகல சொத்துக்களும் ஒடுக்குநர் அல்லது ஒடுக்குநர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

*ஒடுக்குனர்களின் அதிகாரம்.*

53. (1) 52 ஆவது உட்பிரிவின் கீழ் நியமிக்கப்படும் ஒடுக்குநருக்கு பதிவாளரின் வழிகாட்டல் மற்றும் நிர்வாகத்தின் மற்றும் 54 வது உட்பிரிவின் கீழ் உள்ள ஆணையின் மூலம் பதிவாளரால் நிச்சயிக்கப்படும் சில மட்டுப்படுத்தலுக்குட்பட்டு கீழே குறிப்பிடப்படும் நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரம் இருக்க வேண்டும் -

(அ) சங்கத்தின் சொத்துக்களுக்கு சங்கத்தின் உறுப்பினர்களால் செலுத்த வேண்டிய அல்லது இறந்து போன அங்கத்தவரின் சொத்துக்களிலிருந்து கிடைக்க வேண்டிய பங்களிப்புத் தொகையை காலத்திற்கு காலம் தீர்மானித்தல் ;

(ஆ) உரிமை கோரும் சங்கத்தின் புத்தகங்களில் அதுவரை குறிப்பட்டிருந்த கடனாளிகளால் அந்த உரிமை கோரலை சேர்த்துக்கொளவதற்காக அவற்றை சமர்ப்பிக்கப்பட வேண்டியது அல்லது அந்த உரிமை கோரல் அவர்களால் உறுதிப்படுத்தப்படுவதற்கு முன் செய்யும் சொத்துக்களை பகிர்ந்தளித்து அந்த கடனாளிகள் கைவிட வேண்டியதை ஏதாவது தினத்திற்கு முன் அத்தினத்தை அறிவித்தலின் அல்லது வெளிப்படுத்தலினால் தீர்மானித்தல் ;

(இ) கடனாளிகளுக்கிடையில் ஏற்படும் முன்னுரிமைகள் பற்றி ஏதாவது பிரச்சினை இந்நியதிச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கேற்ப தீர்மானித்தல் ;

(ஈ) 58வது உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது விபரங்கள் இந்த முரண்பாட்டிற்கு (சங்கம் சம்பந்தமாக அதில் குறிப்பிடுவதை ஒடுக்குநர் சம்பந்தமாகக் குறிப்பிடப்படுவதாக விளங்கிக்கொள்ளல்) அந்த உட்பிரிவின் கீழ் தீர்த்துக்கொள்வதற்காக முன்வைத்தல் மற்றும் சங்கத்திற்காக தமது பெயரில் அல்லது பதவியில் சிவில் வழக்கு மற்றும் வேறு சட்ட வழங்கள் மற்றும் சட்டப் புத்தகத்தின் எதிர்ப்பை முன்வைத்தல் ;

(உ) ஒடுக்குதலுக்கான கட்டணம் யாரால் அல்லது எந்த அளவில் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனத் தீர்மானித்தல் ;

(ஊ) சங்கம் கணக்குகளைத் தீர்த்து முடப்படும் போது தேவைப்படும் சொத்துக்களைச் சேகரித்தல் மற்றும் சங்கத்தின் கடனாளிகளால் உரிமை கோர வேண்டிய முறை மற்றும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் பொறுப்புக் கூறலின் முறையான செயல் முறைகள் சட்டங்களில் தீர்மானிக்கப்படும் விதத்தில் ஏற்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் ;

(எ) பதிவாளரின் அனுமதி ஏற்கனவே கிடைத்திருப்பின் சங்கத்தால் அல்லது சங்கத்திற்கு எதிராக முன் வைக்கப்படும் உரிமைக் கோரல் இணக்கப்பாட்டிற்கு உட்படுத்துதல் ;

(ஏ) ஒடுக்குதலை முறையாக நடத்துவதற்காக தேவைப்படும் அங்கத்தவரிகளின் பொதுச் சபையைக் கூட்டுதல் ;

(ஐ) சங்கத்தின் புத்தகங்கள், ஆவணங்கள் மற்றும் சொத்துக்களை தம் பொறுப்பில் எடுத்தல் ;

(ஒ) சங்கத்தின் சொத்துக்களை விற்றல் ;

(ஓ) ஒடுக்கியமை சம்பந்தமாக சேர்க்கப்பட்ட எல்லாப் பணமும் பதிவாளரால் தீர்மானிக்கப்படும் ஏதோவொரு விதத்தில் வைப்பிலிடுதல் ;

(ஔ) பதிவாளரால் சொத்துக்களைப் பகிர்ந்தளிக்கும் பிரேரணை முறையொன்று அனுமதிக்கப்படும் போது சங்கத்தின் சொத்துக்கள் இலகுவான முறையில் பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் ;

(க) இதுபோன்று கணக்குகளைத் தீர்த்து மூடுவதற்குத் தேவைப்படும் கூடிய விரைவில் சங்கத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், எனினும் கடன் வழங்கும் சங்கத்தின் ஒடுக்குநருக்கு ஏதாவது கடன் தொகையை விநியோகிப்பதற்காக இதில் உள்ளடக்கப்பட்டுள்ள எதிலும் உரிமை கிடைக்கக் கூடாது.

(2) 49 வது உட்பிரிவின் அல்லது 50ஆவது உட்பிரிவின் கீழ் பதிவினை இரத்து செய்யப்பட்ட சங்கத்தின் யாராவது உறுப்பினர் அல்லது முன்னால் உறுப்பினர்களால் ஏதாவது கடனைச் செலுத்த வேண்டிய மற்றும் அவர் இரத்து செய்யப்பட்ட வேறு எந்தவொரு சங்கத்தினதும் அங்கத்தவருக்கும் சந்தர்ப்பத்தில் 52 ஆவது உட்பிரிவின் கீழ் நியமிக்கப்படும் முதலில் குறிப்பிட்ட சங்கத்தின் ஒடுக்குநருக்கு பதிவாளரின் வழிகாட்டலில் மற்றும் நிர்வாகத்திற்கும் 54 வது உட்பிரிவின் கீழ் உள்ள ஆணையின் மூலம் பதிவாளரால் தீர்மானிக்கப்படும் ஏதாவது கட்டுப்படுத்தலுக்கும் உட்பட்டு அவருக்கு அந்த ஏனைய சங்கங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையில் அக்கடனுக்கு மேலதிகமாகாத தொகையை அந்த அங்கத்தவர்களிடமிருந்து அந்த மற்ற சங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய கடனாக இருந்தாலும் அறவிட்டு அந்தப் பணத்தை ஒடுக்குநருக்கு அனுப்புமாறு அந்த மற்றச் சங்கத்திற்கு வலியுறுத்தும் அதிகாரம் இருக்க வேண்டும்.

(3) இந்நியதிச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்டும் ஒடுக்குநருக்கு அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள விதிகளுக்குட்பட்டு இந்த உட்பிரிவின் செயல்களை நடத்துவதற்கான சில அதிகாரங்கள் தேவையான அளவுக்கு, மாவட்ட நீதிமன்றம் சம்பந்தமான சிவில் வழக்குச் சட்டக் கோவையின் கீழ் ஒழுங்கு விதிகள் தயாரிக்கப்பட்டுள்ள வழியிலேயே மற்றும் (தேவையானால் மட்டும்) அதே விதத்திலேயே சம்பந்தப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களை அழைக்கவும் வருகை தரவும் அவர்களுக்கு வற்புறுத்தவும் ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு அவர்களை வற்புறுத்தவும் அதிகாரம் இருக்க வேண்டும்.

ஒடுக்குதலைக் கட்டுப்படுத்துவதற்கு பதிவாளருக்குரிய அதிகாரங்கள்.

54. (1) ஒடுக்குநர் பதிவாளரின் கட்டுப்பாட்டிற்கும் மற்றும் ஆணைக்குட்பட்டு தமது அதிகாரங்களைச் செயலில் ஈடுபடுத்த வேண்டுமென்பதுடன் -

(அ) ஒடுக்குநரால் செய்யப்படும் ஏதாவது ஆணையை நீக்கிக்கொண்டு அல்து மாற்றிக்கொண்டு தேவையான ஏதோ ஒரு புதிய ஆணையை விடுக்கவும் ;

(ஆ) ஒடுக்குநரை சேவையிலிருந்து நீக்குவதற்கும் ;

(இ) சங்கத்தின் சகல புத்தகங்களையும் ஆவணங்களையும் சொத்துக்களையும் சமர்ப்பிக்குமாறு கட்டளையிடவும் ;

(ஈ) 53 ஆவது உட்பிரிவின் கீழ் ஒடுக்குநர்களின் அதிகாரத்தை எழுத்து மூலமான ஆணையினை மட்டுப்படுத்துதல் ;

(உ) கணக்குகளை காட்டுமாறு ஒடுக்குநருக்கு தமது விருப்பத்தின்படி ஆணையிடவும் ;

(ஊ) ஒடுக்குநருக்கு கணக்காய்வு செய்தல் மற்றும் சங்கத்தின் சொத்துக்களை பகிர்ந்தளிக்க அதிகாரம் வழங்குதலும் ;

(எ) ஒடுக்குநருக்கு ஊதியத்தை செலுத்துவதற்கு ஆணையிடல் ; அல்லது

(ஏ) ஒடுக்குநர் மற்றும் யாராவது புத்தகப் பங்காளியுடன் இருக்கும் 53(1) (ஈ) ஆவது உட்பிபரிவின் கீழ் தீர்த்து வைப்பதற்காக முன் வைக்கப்படும் பிணக்குகள் அற்ற ஏதாவது பிணக்குகள் சம்பந்தமாக தீர்ப்பாளர் வழங்கும் தீர்மானத்திற்கு கட்டுப்பட அந்த பங்காளிகள் எழுத்து மூலம் விருப்பத்தைத் தெரிவித்தால் தீர்த்துவைப்பதற்கு முன் வருவதும் பதிவாளரால் செய்ய முடியும்.

(2) "மேலதிக நிதி" என அழைக்கப்படும் நிதியம் ஒன்றை நிறுவ முடியுமென்பதுடன் ஒடுக்குநரால் சேர்க்கப்படும் சகல பணமும் அந்நிதியத்தில் வைப்பிலிட வேண்டும் மேலும் அப்பணத்தை சட்டத்திற்குற்பட்டு பதிவாளரால் செயல்படுத்த வேண்டும்.

கட்டளையை நடைமுறைப்படுத்துதல்.

55. (1) 54 வது உட்பிரிவின் கீழ் தம்மிடம் வரும் ஏதாவதொரு விடயம் சம்பந்தமாக தீர்ப்பாளரின் தீர்மானத்தில் பங்குதாரர்கள் கட்டுப்பட வேண்டுமென்பதுடன் அந்த உட்பிரிவின் கீழ் பதிவாளரால் விடுக்கப்படும் ஆணையை செயற்படுத்தும் முறை அந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.

(2) தீர்ப்பாளர் அல்லது பதிவாளரால் 53 வது உட்பிரிவின் அல்லது 54வது உட்பிரிவின் கீழ் செய்யப்படும் கட்டளை எந்தவொரு சிவில் நீதிமன்றத்திலும் விசாரிக்க கூடாது என்பதுடன் அச்சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட காரியாலயம் அமைந்துள்ள இடம் சம்பந்தமாக நீதிமன்ற அதிகாரமுடைய ஏதாவது சிவில் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட அக்கட்டளை நடைமுறைப்படுத்தப்படலாம். எனினும் பதிவினை இரத்து செய்யப்பட்ட சங்கத்தின் கடனாளியான ஏதாவது வங்கிக்கு ஏதாவது ஒருவருக்கு அல்லது பதிவாளரால் 53வது உட்பிரிவின் அல்லது 54வது உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட கட்டளைக்கு எதிராக அந்த ஒடுக்குநரின் அல்லது பதிவாளரின் கட்டளை தினத்திலிருந்த இரண்டு மாதத்திற்குள் மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் கூட்டுறவுப் பொறுப்பு அமைச்சர் அவர்களுக்கு முறையீடு செய்ய உரிமை இருக்க வேண்டும்.

(3) 53 வது உட்பிரிவின் அல்லது 54வது உட்பிரிவின் கீழ் ஒடுக்குநரால் அல்லது பதிவாளரால் ஆணையொன்று பிறப்பித்தப்பின் இரண்டு மாதங்களுக்கு இடையில் மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் கூட்டுறவு விடயப்பொறுப்பு அமைச்சர் அவர்களுக்கு எந்தவொரு முறைப்பாடும் கிடைக்காத சந்தர்ப்பத்தில் அந்த ஒடுக்குநரின் அல்லது பதிவாளரின் அந்த கட்டளை சபையின் கூட்டுறவு விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களுக்கும் முறைப்பாடு செய்துள்ள சந்தர்ப்பத்தில் அமைச்சர் அவர்களால் உறுதிப்படுத்தும் வரை ஒடுக்குநரின் அல்லது பதிவாளரின் ஆணை அதிகாரமற்றதாக இருக்க வேண்டும்.

சிவில் நீதிமன்றத்தில் நீதிமன்ற அதிகாரத்தை மட்டுப்படுத்தல்.

56. இதில் இதற்கு முன் தெளிவுபடுத்தப்பட்ட ஒழுங்கு விதிகளில் குறிப்பிட்ட அளவிலன்றி இந்நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று கலைக்கப்படுவதற்குரிய ஏதாவது விடயம் சம்பந்தமாக எந்தவொரு சிவில் நீதிமன்றத்திற்கும் எந்தவித நீதிமன்ற அதிகாரமும் இருக்கக் கூடாது.

*57. (1) பதிவு இரத்து செய்யப்பட்ட சங்கமொன்றை ஒடுக்கும்போது கூட்டு நிதி உட்பட நிதியம் 39(2)வது உட்பிரிவில் ஒழுங்கு விதிகளுக்கேற்ப முக்கியமாகக் கொண்டு ஒடுக்கும் கட்டணத்திற்காகவும் அடுத்ததாக அரசின் கடன், அரசு பிணையான கடன் மற்றும் மாகாண சபையின் கடனும், மாகாணச் சபையின் பிணையான கடனும் திருப்பிச் செலுத்துவதற்காக பின்னர் சங்கத்தின் வேறு பொறுப்புகளை நிறைவேற்றும் முகமாகவும் பின்னர் பங்கு முதலீட்டினை செலுத்தும் முகமாகவும் பின்னர் சங்கத்தின் இடைக்கால அரசியலமைப்பின் மூலம் அனுமதி கிடைக்குமாயின் இலாபம் பங்கிடப்படாத ஒரு காலக்கட்டத்திற்காக வருடமொன்றிற்கு நூற்றுக்கு ஆறு வீதத்திற்கு அதிகமாகாத அளவில் இலாபப் பங்கீடு வழங்கப்படுவதற்கும் இலாபம் பற்றி பொருத்தமற்றது எனக் கருதப்பட்ட காலத்திற்காக அக்காலக்கட்டத்தில் கலைக்கப்படும் தினத்திற்கு முன்பே ஒரு சந்தர்ப்பத்தில் அங்கத்தவர்களுக்கு சிறப்பு கட்டணம் செலுத்துவதற்காகவும் பயன்படுத்த முடியும்.*

*ஒடுக்குதலை முடித்தல்.*

*(2) சங்கமொன்றின் ஒடுக்குதல் முடிவடைந்ததன் அந்த சங்கத்தின் யாராவது ஒரு கடனாளி சொத்துக்களைப் பகிர்ந்தளிக்கும் உத்தேச திட்டத்தின் கீழ் தமக்கு கிடைக்க வேண்டியவை சம்பந்தமாக உரிமை கோரப்படாத அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும். மேலும் அச்சங்கத்தின் நிதி சம்பந்தமாக ஏதாவது உரிமை கோரப்படல் பற்றி எந்தவொரு வழக்கும் அந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மூன்று மாதத்திற்குள் ஆரம்பிக்கப்பட்டால் அன்றி நடத்தப்படக் கூடாது.*

*(3) 1 வது உப உட்பிரிவில் உறுதியாகக் குறிக்கப்பட்ட விடயத்திற்காக மற்றும் 2வது உப பிரிவின் கீழ் வழக்குத் தொடரப்படும் ஏதாவது உரிமை கோரல் சம்பந்தமான கொடுப்பனவிற்காக நிதி பயன்படுத்தப்பட்ட பின் எஞ்சும் மேலதிகப் பணம் அச்சங்கம் கலைக்கப்பட்ட தினத்தில் அங்கு உத்தியோகத்தர்களாக இருந்தவர்களால் பதிவாளரின் அனுமதியுடன் தெரிவு செய்யப்படக் கூடிய பிரதேசம் மக்களுக்கு உதவும் நோக்கத்திற்காக பயன்படுத்த முடியும் சங்கமொன்று ஒடுக்கப்பட்ட பின் மூன்று மாதத்திற்குள் பதிவாளரால் அனுமதிக்கப்பட மேலே குறிக்கப்பட்ட ஒரு நோக்கத்தைத் தெரிவு செய்வதை அவர் தவறுமிடத்து பதிவாளரால் மேலதிகமான தொகையை வங்கியில் அல்லது பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றில் வைப்பிடலாம். அவ்வாறு வைப்பிடப்பட்ட மேலதிகப் பணம் இந்த நியதிச் சட்டத்தின் கீழ் உள்ளவற்றிற்கு நிறுவப்படக் கூடிய மேலதிகத் தொகைக்கு ஏதாவதொரு விடயத்திற்காக அவ்வாறு ஏற்பாடு செய்யப்படக் கூடிய விதத்தில் அந்த மேலதிகப் பணத்தில் செலவழித்தல் வருடந்தோறும் விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரால் அனுமதிக்கப்படும். திட்டமிடலுக்கேற்ப பதிவாளருக்கு மேற்கொள்ள முடியும். எனினும் மேலதிகத்தில் சேர்க்கப்படும் வட்டி, கூட்டுறவு நிதியத்தில் சேர்க்க முடியும்.*

## XI வது அத்தியாயம்

*முரண்பாடு*

*58. (1) பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் செயற்பாடுகள் சம்பந்தமான பிணக்குகள் :*

*முரண்பாடுகளைத் தீர்த்தல்.*

*(அ) அங்கத்தவர் முன்னால் அங்கத்தவர் மற்றும் அங்கத்தவர் முன்னால் அங்கத்தவர் மற்றும் இறந்த அங்கத்தவர்களால் உரிமை கோரப்படுபவர்களுக்கிடையில் அல்லது சங்கத்தின் இறந்த கால அல்லது நிகழ்கால பதவியினர்கள் ஊழியர்களின் உரிமை கோரப்படுபவர்களின் அல்லது சட்ட ரீதியான பிரதிநிதிகளுக்கிடையில் அல்லது முன்னால் அங்கத்தவர் மற்றும் அங்கத்தவர் முன்னால் அங்கத்தவர் மற்றும் இறந்த அங்கத்தவர்களால் உரிமை கோரப்படுபவர்களுக்கிடையில் அல்லது*

*(ஆ) சங்கத்தின் அல்லது அதன் இறந்த கால அல்லது நிகழ்கால பதவியினர்கள் ஊழியர்களின் உரிமை கோரப்படுபவர்களின் அல்லது சட்ட ரீதியான பிரதிநிதிகளுக்கிடையில் அல்லது முன்னால் அங்கத்தவர் மற்றும் அங்கத்தவர் முன்னால் அங்கத்தவர் மற்றும் இறந்த அங்கத்தவர்களால் உரிமை கோரப்படுபவர்களுக்கிடையில் அல்லது*

*(இ) சங்கத்தின் அல்லது அதன் இறந்த கால அல்லது நிகழ்கால பதவியினர்கள் ஊழியர்களின் உரிமை கோரப்படுபவர்களின் அல்லது சட்ட ரீதியான பிரதிநிதிகளுக்கிடையில் அல்லது முன்னால் அங்கத்தவர் மற்றும் அங்கத்தவர் முன்னால் அங்கத்தவர் மற்றும் இறந்த அங்கத்தவர்களால் உரிமை கோரப்படுபவர்களுக்கிடையில் அல்லது*

(ஈ) சங்கத்தின் அல்லது நிர்வாகக் குழுவில் மற்றும் :

I. தொழிலை அல்லது அதன் பகுதியை அச்சங்கத்திலிருந்து ஒப்படைத்த வேறு சங்க உறுப்பினராக அல்லது பதவியாளர்கள், ஊழியர்களாக இருந்த யாராவது ஒருவர் ;

II. 1 வது இணைப்பந்தியில் குறிப்பிடப்பட்ட சங்கத்தில்குறிப்பிடப்பட்ட யாராவது முன்னால் அங்கத்தவர் மற்றும் அங்கத்தவர் முன்னால் அங்கத்தவர் மற்றும் இறந்த அங்கத்தவர்களால் உரிமை கோரப்படுபவர்களுக்கிடையில் ;

III. 1 வது இணைப்பில் ………… ஊழியரின் உரிமை கோருபவரின் அல்லது சட்ட ரீதியான பிரதிநிதியான ஒருவருக்கிடையில் ; அல்லது

(உ) சங்கத்தின் மற்றும் பதிவு செய்யப்பட்ட வேறு சங்கங்களுக்கிடையில் ஏற்படுமாயின் தீர்மானத்திற்காக அந்தப் பிணக்கு, பதிவாளருக்கு அனுப்பப்பட வேண்டும். முந்திய அல்லது தற்போதைய உறுப்பினர்களிடமிருந்து

(ஊ) பதிவாளரிடமிருந்து ஊழியர்களிடமிருந்து அல்லது இறந்த உறுப்பினர்களின் பதவியாளர்களின் அல்லது ஊழியர்களின் யாராவது பெயரிடப்பட்டவர்களிடமிருந்து உரிமை கோரப்படுபவர்களிடமிருந்து சட்டரீதியான பிரதிநிதிகளிடமிருந்தும் பதிவு செய்யப்பட்ட சங்கத்திற்கு செலுத்த வேண்டிய கடன் விண்ணப்பம் மற்றும் நட்டத்தினால் அச்சங்கத்தினால் கோரப்படும் உரிமை கோரல் அல்லது பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் முந்திய அல்லது தற்போதைய உறுப்பினர்களிடமிருந்து பதிவாளரிடமிருந்து ஊழியர்களிடமிருந்து அல்லது இறந்த உறுப்பினர்களின் பதவியாளர்களின் அல்லது ஊழியர்களின் யாராவது பெயரிடப்பட்டவர்களிடமிருந்து உரிமை கோரப்படுபவர்களிடமிருந்து சட்டரீதியான பிரதிநிதிகளிடமிருந்தும் பதிவு செய்யப்பட்ட சங்கத்திற்கு செலுத்த வேண்டிய கடன் விண்ணப்பம் மற்றும் நட்டத்தினால் அச்சங்கத்தினால் கோரப்படும் உரிமை கோரல் அக்கடன் அல்லது நட்டம் ஏற்றுக்கொள்ளக் கூடியதானாலும் இல்லாவிட்டாலும் இந்த உப உட்பிரிவின் கருத்தின்படி சங்கத்தின் வியாபாரம் சம்பந்தப்பட்ட பிணக்குகளாக கருத முடியும்.

(2) பதிவாளரால் (1)வது உப உட்பிரிவின் கீழ் முன் வைக்கப்பட்டபின்.

(அ) தம்மாலேயே அந்த பினக்கு சம்பந்தமாக தீர்மானமெனமெடுக்க முடியும், இல்லையேல் ;

(ஆ) அது பற்றி பொருத்தமானதை செய்வதற்காக நடுவர் அல்லது நடுவர்களுக்கு முன் வைக்க முடியும்.

(3) நடுவரின் அல்லது நடுவர் தீர்ப்பில் அதிருப்திக்கு உட்படும் யாராவது பங்குதாரர்களால் அந்த தீர்ப்பிற்கு எதிராக பதிவாளருக்கு முறைப்பாடு செய்ய முடியும். அவ்வாறான முறைப்பாடு அதற்கு காரணமாவதுடன் எழுத்து மூலம் குறிப்பிட்ட தீர்ப்பினை செயியிட்ட தினத்திலிருந்து (வார இறுதி மற்றும் பிரசித்தவிடுமுறை தினங்களும் தீர்ப்பு வெளியிடப்பட்ட தினமும் இல்லாமல் முப்பது நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் தீர்ப்பு வெளியிடப்பட்டது யாராவது ஒரு சாராருக்கு எதிராகவாயின் அந்த சம்பந்தப்பட்டவரால் முறைப்பாடு செய்யும் போது நூறு ரூபாவும் அத்தீர்ப்பு வழங்கப்பட்ட தொகையில் நூற்றுக்கு பத்து வீதம் என்ற இரண்டில் அதிக பெறுமதி குறிப்பிட்ட முறைப்பாட்டிற்காக வைப்பீட்டுத் அதிக பெறுமதி குறிப்பிட்ட முறைப்பாட்டிற்காக வைப்பீட்டுத் தொகையாக அந்த முறையீட்டுடன் சமர்ப்பிக்க வேண்டும் முறைப்பாடு ஏதாவது தொகையைக் கேட்கும் சம்பந்தப்பட்டவரால் ஆயின் ஐநூறு ரூபாவும் கேட்கும் தொகையின் நூற்றுக்கு பத்து வீதமும் என இரண்டில் அதிகத் தொகையை முறையீட்டுடன் சமர்ப்பிக்க வேண்டும். எனினும் மேலே குறிப்பிடப்படும் எவரொருவராலும் வைப்பீடு செய்யப்படும் தொகையின் பெறுமதி இருபத்தைந்தாயிரத்திற்கு அதிகமாயின் வைப்பீடு செய்யப்பட வேண்டிய முறைப்பாட்டுத் தொகையின் ஆகக்கூடிய பெறுமதி இருபத்தைந்தாயிரம் ரூபாவிற்கு மட்டுப்படுத்த வேண்டும் என்பதுடன் அப்பெறுமதி மேலே குறிப்பிடப்படும் ஒழுங்கு விதிகளுக்கேற்ப குறிப்பிட்ட முறைப்பாட்டு வைப்புத் தொகையாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

மேலே (3) வது உப உட்பிரிவின் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்புடையதற்ற முறைப்பாடு பதிவாளரால் நிராகரிக்கப்பட வேண்டும்.

*(4) (3) வது உப உட்பிரிவின் கீழ் பதிவாளருக்கு முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்ட யாராவது ஒருவருக்கு அவராலேயே அல்லது யாராவது பிரதிநிதியின் மூலம் பதிவாளரின் நேரில் வந்து அந்த முறைப்பாடு சம்பந்தமான காரணம் காட்ட உரிமை இருக்க வேண்டும்.*

*(5) (2) வது உப உட்பிரிவின் கீழ் அல்லது (3)வது உப உட்பிரிவின் கீழ் முறைப்பாட்டில் பதிவாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக இருக்க வேண்டுமென்பதுடன் அதுபற்றி எதுவித சிவில் நீதிமன்றத்திலும் விசாரிக்கக் கூடாது.*

*(6) (2) வது உப உட்பிரிவின் கீழ் நடுவர் அல்லது நடுவர்களின் தீர்ப்பு சம்பந்தமாக (3)வது உப உட்பிரிவின் கீழ் பதிவாளருக்கு ஏதாவது முறைப்பாடு செய்யப்பட வில்லையாயின் அல்லது அவ்வாறான முறைப்பாடு கைவிடப்படுமாயின் அல்லது கேட்டு விலக்கிக்கொண்டால் அத்தீர்ப்பு இறுதியானதாக இருக்க வேண்டுமென்பதுடன் அது பற்றி எதுவித சிவில் நீதிமன்றத்திலும் விசாரிக்கக் கூடாது.*

*(7) இந்த உட்பிரிவின் கீழ் பிணக்குக் காரணமான ஏதாவது உரிமை கோரல் சம்பந்தமாக கால எல்லை கட்டளைச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் ஏற்புடையதாகாது.*

*(8) இந்த உட்பிரிவின் கீழ் பதிவாளருக்கு அனுப்பப்படும் பிணக்குகள் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் தொழிலுக்குரிய பிணக்காக என்பது பற்றிய ஏதாவது பிரச்சினை ஏற்பட்டில் அது சம்பந்தமாக பதிவாளரின் தீர்மானம் இறுதியாவதுடன் அது பற்றி எதுவித சிவில் நீதிமன்றத்திலும் விசாரிக்கக் கூடாது.*

*(9) இந் உட்பிரிவில் அங்கத்தவர் என்பதற்கு ஏற்ற அங்கத்தவர் ஒருவர் என்பதும் உள்ளடக்கப்படும்.*

*தீர்மானம் அல்லது தீர்ப்பு நடைமுறைப்படுத்துதல்.*

*59. (1) 58 வது உட்பிரிவின் கீழ் பதிவாளருக்கு அனுப்பப்படும் பிணக்குகள் அல்லது முறைப்பாடு சம்பந்தமாக அவது தீர்மானத்தில் இந்த உட்பிரிவில் இதன் பிறகு அதைத் "தீர்மானம்" என அழைக்கப்படும்) அல்லது இந்த உட் பிரிவின் கீழ் நடுவருக்கு அனுப்பப்படும் பிணக்குகள் சம்பந்தமான அந்த உட்பிரிவின் கீழ் பதிவாளருக்கு முறையாக முறைப்பாடு அனுப்பப்படா விட்டால் இந்த உட்பிரிவின் இதன்பிறகு தீர்மானம் என அழைக்கப்படும் தீர்மானத்தில் எடுக்கப்படும் முடிவு அந்த பிணக்கின் ஒரு சாராரின் அந்த சாராருக்கு பணம் செலுத்தப்பட வேண்டுமெனவும் அந்தப்பணம் அதனோடு தொடர்புடைய கட்டணம் வட்டி இருப்பின் அவற்றுடன் செலுத்தாதிருக்கும்" சந்தர்ப்பத்தில் பதிவாளரால் அப்பணம் அறவிடப்பட வேண்டிய சாராரிடமிருந்து இந்த உட்பிரிவில் இதன் பின் "தவறுபவர்" என அதைக்கப்படபவர்கள் பற்றி,*

*(அ) கட்டணம் வட்டி இருப்பின் அந்த வட்டியுடன் அப்பணம் பற்றிய விபரம் மற்றும் தவறுபவறின் பெயர் உள்ளடக்கப்பட்ட சான்றிதழை அந்த தவறு இழைத்தவருக்கு வசிக்கும் அல்லது தவறு இழைத்தவருக்குரிய ஏதாவது அசையும் அசையாச் சொத்துக்கள் அமைந்துள்ள மாவட்டத்தின் நீதிமன்ற அதிகாரமுடைய மாவட்ட நீதிமன்றுக்கு அனுப்புதல் அல்லது,*

*(ஆ) கட்டணமும் வட்டியுமிருப்பின் அந்த வட்டியுடன் அறவிடப்பட வேண்டிய தொகை பற்றிய விபரம் மற்றும் மீறப்பட்டவரின் பெயர் கடைசியாக தெரிந்து கொண்ட அவரது வியாபாரம் அல்லது வசிப்பிடம் உள்ளடங்கிய சான்றிதழை அந்த இடத்தில் அமைந்துள்ள பிரிவின் நீதிமன்ற அதிகாரமுடைய நீதிவானுக்கு சமர்ப்பிக்க முடியும்.*

*(2) (1) ஆவது உப பட்டியலின் (அ) பந்தியின் கீழ் மாவட்டநீதிமன்றத்திறகு சான்றிதழ் விநியோகிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அது கிடைத்த பின் நீதிமன்றினால் அதை மீறுபவருடைய அசையும் அசையா சொத்துக்கள் அல்லது அதில் ஏதாவதை அல்லது அப்பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு பிஸ்கல் ஒருவர் தேவையானது எனக் கருதப்படும் அதன் ஒருபகுதியை தடைசெய்து விற்குமாறு பிஸ்காலுக்கு அதிகாரம் அளிக்கும் தீர்மானிக்கும் சொத்துக்கள் தடை டிஸ்கீசி பிஸ்கலுக்கு சமர்ப்பிக்குமாறு ஆணையிட முடியும் அதைத் தடை செய்து விற்பது பற்றி சிவில் வழக்கு ஒழுங்கு மசோதாவின் 226 மற்றும் 297ஆவது உட்பிரிவுகளின் ஒழுங்கு விதிகள் தேவையான மாற்றங்களுடம் பொருத்தமானதாகும்.*

*(3) (1) ஆவது உப உட்பிரிவின் (ஆ) பந்தியின் கீழ் நீதவானுக்கு சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பணத்தை அறிவிடுவதற்காக மீறப்பட்டவருக்கு எதிராக மேலும் நடவடிக்கை எடுக்கக் கூடாது ஏன் என்று காரணம் தெரிவிப்பதற்காக நீதவானால் அந்த மீறியவரை தமது முன்னிலையில் அழைக்கப்பட வேண்டுமென்பதுடன் போதுமான காரணங்களை அவர் காட்டவில்லை எனில் சிறைப்படுத்தித் தண்டிக்க*

முடியாது என்றாலும் தண்டம் விதித்தலின் மூலம் மட்டும் தண்டனை வழங்கக் கூடிய குற்றத்திற்கு அந்த மீறப்பட்டவர் சம்பந்தமாக நீதவானால் தண்டனைத் தீர்ப்பில் தீர்மானிக்கப்படும் தண்டனையாக அப்பணம் கருதப்பட வேண்டும். அப்போது 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட குற்றவியல் வழக்கு மசோதாவின் 219ஆவது உட்பிரிவின் (அதில் (1) வது உப உட்பிரிவில் (அ) மற்றும் (ஆ) பந்திகள் தவிர) ஒழுங்கு விதிகள் ஏற்புடையதாவதுடன் அத்தண்டனை தீர்மானிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அந்த உட்பிரிவின் ஒழுங்கு விதிகளின்படி நீதவானால் செய்யப்படவிருந்த ஏதாவது ஆணையை செய்ய முடியும் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட குற்றவியல் வழக்கு ஒழுங்கு மசோதாவில் 29வது உட்பிரிவின்படி தீர்மானிக்கப்படும் தண்டம் மீறப்படுபவர் 59 (1) ஆ உட்பிரிவின் குறிப்பிட்ட சான்றிதழில் குறிப்பிடும் ஏதாவது பணத்தின் அளவை செலுத்தி தீர்த்துக்கொள்ள முடியாது.

(4) பதிவாளர் இந்த உட்பிரிவின் கீழ் சான்றிதழ் சமர்ப்பிக்க சந்தர்ப்பத்தில் அது பற்றி அறிவித்தலை தனிப்பட்ட விதத்தில் ஒப்படைத்து பதிவு செய்யப்பட்ட கடிதத்தில் அல்லது தந்தி மூலம் அனுப்பி மீறப்பட்டவருக்கு அனுப்ப வேண்டும் எனினும் மீறியவர் அந்த அறிவித்தல் கிடைக்காமை காரணமாக இந்த உட்பிரிவின் கீழ் உள்ள சட்டத் தொகுதி இரத்து செய்யப்படக் கூடாது.

(5) இந்த உட்பிரிவின் கீழ் ஏதாவது சட்டத் தொகுதியில் பதிவாளரின் சான்றிதழில் இருந்த அறிவித்தலின் பிழையற்ற தன்மையை கருத்தில் எடுக்க பரிசீலனை செய்ய அல்லது அது பற்றி தீர்மானம் எடுப்பதற்கு ஏதாவது மாவட்ட நீதிமன்றிற்கு அல்லது நீதவானுக்கு இந்த உட்பிரிவின் எதிலிருந்தும் அதிகார இருக்கக் கூடாது அல்லது பொருத்தமுடையதாகாது.

(6) (அ) (2) ஆவது உப உட்பிரிவின் கீழ் விற்பனையின் மூலம் கிடைத்த பணம் மற்றும் (3) வது உட்பிரிவின் கீழ் செலுத்தப்பட்ட அல்லது அறிவிடப்பட்ட பணம் தேவைக்கேற்ப மாவட்ட நீதிமன்றத்தில் நீதவானால் பதிவாளருக்கு அனுப்ப வேண்டும் பதிவாளரால் அப்பணம் சம்பந்தமான சம்பந்தப்பட்ட தீர்மானம் அல்லது தீர்ப்பின்படி பொருத்தமானதாகும்.

(ஆ) அதன்படி பொருத்தமானதாக்கப்படும் வரை பதிவாளரால் அந்தப் பணம் அரசின் இலாபம் கிடைக்கும் விதத்தில் அரச வங்கியில் வைப்பிலிடப்பட வேண்டுமென்பதுடன் அதிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானம் வேறொரு நிதியத்தின் மூலம் முகாமைத்துவம் செய்யும் அதிகாரம் பதிவாளருக்குரியதாகும்.

(இ) வட்டி வருமானம் நிதியத்தில் வைப்பது சம்பந்தமாக ஒழுங்கு விதிகள் பிரமாணப்படி தீர்மானிக்கும் அதிகாரம் அமைச்சருக்குரியதாகும். அவ்வாறு சட்டமாக்கப்படும் வரை விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் அப்பணம் பேணப்பட வேண்டும்.

வேறு சில விடயம் சம்பந்தமாக பதிவாளரால் தீர்மானமெடுக்க முடியுமென்பது

60. (1) பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் அங்கத்துவத்திற்காக யாராவது ஒருவரால் முன் வைக்கப்படும் விண்ணப்பப்படிவம் அச்சங்கத்தினால் நிராகரிக்கப்படும் போது நிராகரிப்பதற்கு எதிராக அவரால் பதிவாளருக்கு முறைப்பாடு செய்ய முடியும் அந்த முறைப்பாடு சம்பந்தமாக பதிவாளரின் தீர்மானம் இறுதியானதாவதுடன் அதை பின்பற்றுவதற்கு சங்கம் கட்டுப்படுகிறது.

(2) பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் அங்கத்தவர் ஒருவர் சங்கத்தின் பதவிக்கு முறையாக தெரிவு செய்யப்பட்டுள்ளாரா என்பது பற்றி அல்லது அங்கத்தவர் அச்சங்கத்தின் அங்கத்தவராக, பதவி வழியினராக இருப்பது நிறுத்தப்பட்டதா என்பது பற்றி சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் முறையாக நடத்தப்பட்டதா என்பதை பற்றி ஏதாவது பிரச்சினை எழும் சந்தர்ப்பத்தில் அப்பிரச்சினை பற்றி பதிவாளரால் தீர்மானமெடுக்க முடியுமென்பதுடன் அவரது தீர்மானம் இறுதியானதாகும்.

## XI வது அத்தியாயம்

### சட்டம்

61. (1) இந்நியதிச்சட்டத்தின் கொள்கை மற்றும் ஒழுங்கு விதிகள் நடைமுறைப்படுத்தும் அல்லது ஊக்குவிக்கும் செயல்களுக்குத் தேவைப்படும் சகல சட்டங்களும் மத்திய மாகாண சபையின் கூட்டுறவு விடயப் பொறுப்பு அமைச்சரால் தயாரிக்க முடியும்.

(2) விசேசமாக (1)ஆவது உப உட்பிரிவில் வழங்கப்படும் அதிகாரங்களின் பொதுத்தன்மைக்கு தீங்கேற்படாது அச் சட்டங்களில் -

(அ) சங்கமொன்று பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்கும் போது பின்பற்றப்பட வேண்டிய நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பிப்பது பற்றிய செயலொழுங்கு ஒழுங்கு விதிகளும் பதிவு செய்வதற்காக செலுத்தப்பட வேண்டிய கட்டணத்தின் அளவு பற்றி மற்றும் பதிவு செய்தலை புதுப்பிப்பதற்கான ஒழுங்கு விதிகளையும் தீர்மானித்தல் ;

(ஆ) அங்கத்தவராக வருவதற்காக விண்ணப்பிக்கும் அல்லது அங்கத்தவர்களாக உள் வாங்கப்பட்டவர்களால் பின்பற்றப்பட வேண்டிய நிபந்தனைகளை தீர்மானிக்க முடியுமென்பதுடன் காலத்திற்கு காலம் அங்கத்தவர்களை நியமித்தல் மற்றும் உள்ளீர்த்துக்கொள்ளல் மற்றும் அங்கத்துவத்தின் உரிமைகளைப் பாவிப்பதற்கு முன் செய்ய வேண்டிய கொடுப்பனவு மற்றும் பெற்றுக்கொள்ள வேண்டிய தொடர்புகளுக்கான ஒழுங்கு விதிகளை தயாரிக்க முடியும் ;

(இ) அங்கத்தவர்கள் இராஜினாமாச் செய்தல் மற்றும் தடுத்தலுக்காகவும் இராஜினாமா செய்யும் மற்றும் தடுக்கப்பட்ட அங்கத்தவர்களுக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவிற்காகவும் முன்னால் அங்கத்தவர்களின் பொறுப்புகளுக்காகவும் ஒழுங்கு விதிகளை தயாரிக்க முடியும் ;

(ஈ) பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் அங்கத்துவ எண்ணிக்கை அந்த சங்கத்தினால் மட்டுப்படுத்தக்கூடிய அளவினை தீர்மானிக்க முடியும் ;

(உ) இறந்து போன அங்கத்தவரின் தொடர்பின் பெறுமதியை தீர்மானிக்கக் கூடிய விதத்திற்காகவும் அத்தொடர்பின் பெறுமதியை செலுத்தக் கூடிய அல்லது ஒப்படைக்கக் கூடிய ஒருவரை பெயரிடுவதற்கான ஒழுங்கு விதிகளை தயாரிக்க முடியும் ;

(ஊ) 3 வது உட்பிரிவின் ஒழுங்கு விதிகளுக்கேற்ப அங்கத்தவரொருவரிடம் இருக்க வேண்டிய பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் முதலீட்டின் கூடிய பங்குகளின் எண்ணிக்கை அல்லது பங்கினைத் தீர்மானிக்க முடியும் ;

(எ) கடன் அல்லது கடன் தவணைகளுக்காக விண்ணப்பிக்கும் அங்கத்தவர்களால் செலுத்த வேண்டிய கொடுப்பனவு, பின்பற்றப்பட வேண்டிய நிபந்தனைகள் மற்றும் எழுதி கையொப்பமிடப்பட வேண்டிய பிணைப்படிவங்களில் சட்ட ரீதியான ஆவணங்களில் அல்லது வேறு ஆவணங்களில் மாதிரிப்படி வடிவங்களை கொடுக்கக் கூடிய கடன்களில் அல்லது வழங்கக் கூடிய கடன்களின் கால எல்லை தனி அங்கத்தவருக்கு வழங்கக் கூடிய பணம் மற்றும் அவர்கள் பற்றி இடமளிக்கக் கூடிய கடன் தவணைகளை தீர்மானிக்க முடியும் ;

(ஏ) மட்டுப்படுத்தப்படாத பொறுப்புகளைக் கொண்ட சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு இலாபம் பங்கீடு செய்யக் கூடியது எந்த நிபந்தனைகளின் கீழாகும் என்பதும் அந்த நிபந்தனைகளும் சங்கத்தினால் செலுத்த வேண்டிய இலாபப்பங்குகள் பற்றி ஆகக்கூடிய அளவை தீர்மானித்தல் ;

(ஐ) பங்குகளூடாக அல்லது பிணைப் படிவத்தின் மூலம் அல்லது வேறு விதத்தில் நிதியைப் பெற்றுக்கொள்ளக் கூடிய விதம் மற்றும் வைப்புகள் பற்றி செலுத்தக் கூடிய வட்டியின் அளவை ஒழுங்குபடுத்தலாம் ;

(ஒ) அங்கத்தவர்களின் பொது சபைக் கூட்டத்திற்காகவும் அக்கூட்டங்களில் செயல் ஒழுங்கு விதிகள் பற்றியும் கூட்டங்களில பாவிக்கக்கூடிய அதிகாரங்கள் பற்றியும் ஒழுங்கு விதிகளைத் தயாரிக்க முடியும் ;

(ஓ) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் அங்கத்தவர்கள், முகாமைத்துவ நிர்வாகக்குழுவின் அல்லது பிரதேச அல்லது சபை நிர்வாகக் குழுவொன்றின் அங்கத்தவராக தெரிவு செய்து கொள்வதற்காக செயல் ஒழுங்கு விதிகள் மற்றும் தெரிவு செய்யபட்டுவது பற்றிய தகுதிகளை தீர்மானித்தல் ;

(ஔ) நிர்வாகக் குழுவின் அங்கத்தவர்கள் மற்றும் வேறு பதவியாளர்களை நியமித்தல் அவர்களது சேவையை இடை நிறுத்துதல் மற்றும் அவர்களை நீக்குவதற்காகவும் நிர்வாகக் குழுக்கூட்டங்களின் செயல் ஒழுங்கு விதிகளுக்காகவும் நிர்வாகக் குழு மற்றும் வேறு பதவியாளர்களுக்கு பாவிக்கக் கூடிய அதிகாரங்கள் மற்றும் நிறைவேற்றக் கூடிய கடமைகளுக்காகவும் ஒழுங்கு விதிகளை தயாரிக்க முடியும்

(க) சங்கத்தினால் இடைக்கால யாப்புகளை தயாரிக்கக் கூடிய அல்லது தயாரிக்க வேண்டிய விடயங்கள் மற்றும் இடைக்கால யாப்புகளைத் தயாரிக்கும் போதும், மாற்றும் போதும் மற்றும் போதும் பின் பற்றப்பட வேண்டிய ஒழுங்கு விதிகள் அந்த இடைக்கால யாப்புகளை ஏற்படுத்த மாற்ற அல்லது சட்ட நீக்கம் செய்ய முன் விதிக்கப்பட வேண்டிய நிபந்தனை தீர்மானிக்க வேண்டும்.

(கா) பதிவு செய்யப்படக்கூடிய சங்கமொன்றினால் வைக்க வேண்டிய கணக்குகள் மற்றும் புத்தகங்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் சொத்துகள், வைப்புகள் காட்டும் வைப்புப்பத்திரம் காலத்திற்கு காலம் வெளிப்படுத்துவதற்கு தீர்மானிக்க முடியும்.

(ஐ) பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் கணக்குகளை கணக்காய்வுக்குட்படுத்துவதற்காகவும் அக்கணக்காய்வுக்காக செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் இருப்பின் அக்கட்டணத்தை செலுத்துவதற்காக ஒழுங்கு விதிகளை திட்டமிடுதலும் நடப்பில் உள்ள சங்கங்களை கணக்காய்வு செய்தல் அவற்றை நிர்வகித்தல் மற்றும் அவற்றுக்கு ஒத்துழைப்பதற்காகவும் கூட்டுறவு விளம்பர நடவடிக்கைகளுக்காகவும் கூட்டுறவு கல்வி மற்றும் பயிற்சிக்காகவும் பாவிப்பதற்காக கூட்டுறவு நிதியம் குறிப்பிடப்படும் நிதியத்திற்கு சகல பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் அல்லது அவ்வாறான ஏதாவது சங்கங்களின் பங்களிப்புக் கொடை அறிவிடுவதற்கான ஒழுங்கு விதிகளை தயாரிப்பதும் அந்நிதியை நிர்வகிப்பதற்காக ஒழுங்கு விதிகளை தயாரிக்கவும் முடியும்.

(ச்ச) பதிவு செய்யப்பட்ட சங்கத்தால் பதிவாளருக்கு முன்வைக்கப்பட வேண்டிய தவணை அறிக்கைகள் மற்றும் அத்தவணை அறிக்கைகள் முன்வைக்கப்பட வேண்டியவர்கள் மற்றும் முறையினை தீர்மானிக்க முடியும்.

(ட்ட) பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள குறிப்புகளின் பிரதிகளுடன் செய்ய வேண்டியவர்கள் மற்றும் முறைக்கான ஒழுங்கு விதிகளை தயாரிக்க முடியும்.

(ட) அங்கத்தவர்களின் பெயர்ப்பட்டியல் மற்றும் அங்கத்தவர்களின் பங்குகளின் மட்டுப்படுபத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் பங்குகள் பற்றிய பெயர்ப்பட்டியலைத் தயாரித்து நடத்துவதற்கான ஒழுங்கு வதிகளை தயாரிக்க வேண்டும்.

(ண) கூட்டு நிதியமொன்றைத் ஏற்படுத்தி நடத்துவதற்காக மற்றும் அந்நிதியத்தில் சேர்க்க வேண்டிய நோக்கத்திற்காக பதிவு செய்யப்பட்ட சங்கத்திற்கான நிர்வாகத்தின் கீழ் உள்ள ஏதாவது நிதியினை முதலீடு செய்வதற்காகவும் ஒழுங்கு விதிகளைத் தயாரிக்க முடியும்.

(த்த) சங்கத்திற்கு அல்லது அதன் வழியில் பொருட்களை விற்பதற்குரிய ஏதாவது இடைக்கால விதிகள் அல்லது ஒப்பந்தத்தை மீறுவது பற்றிய ஏதாவது பிரச்சினையை உறுதிப்படுத்துவதற்கான விதம் மற்றும் அப்படிப்பட்ட ஏதாவது மீறுதலினால் அளவிடக் கூடிய நட்டத்தை உறுதிப்படுத்தக் கூடிய அல்லது மதிப்பிடக் கூடிய விதத்தை தீர்மானிக்க முடியும்.

(த) நடுவர் அல்லது நடுவர்களை நியமிக்கும் முறை மற்றும் பதிவாயர் அல்லது நடுவர் அல்லது நடுவர்கள் முன்னிலையில் நடத்தப்படும் விடயங்களில் பின்பற்றப்பட வேண்டிய செயல் ஒழுங்குகள் மற்றும் பதிவாளரின் தீர்மானம் அல்லது நடுவர்களின் தீர்ப்புகளை நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய முறைகளை தீர்மானிக்க முடியும்.

(ன) அரசின் அல்லது மாகாண சபையின் நிதி உதவிக்காக விண்ணப்பிக்கும் பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் பின் பற்றப்பட வேண்டிய நிபந்தனைகளை தீர்மானிக்க முடியும்.

(ப) பதிவாளரினால் மேற்கொள்ளப்பட்ட ஆணைகளுக்கு எதிராக அமைச்சர் அவர்களுக்கு முன்வைக்கக் கூடியதாயிருப்பினும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட ஒழுங்கு விதிகள் தயாரிக்கப்பட்டதலன்றியும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் வெளிப்படுத்திய ஒழுங்கு விதிகள் ஏற்படுத்தப்படாத விடயங்களை உறுதிப்படுத்த முடியும்.

(க்க) 52 ஆவது உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட ஒடுக்குநரால் பின்பற்றப்பட வேண்டிய செயல் ஒழுங்கு விதிகள் மற்றும் அந்த ஒடுக்குநர்களின் கட்டளைக்கு எதிராக முறைப்பாட்டினை முன்வைக்கும் சந்தர்ப்பத்தினை தீர்மானிக்க முடியும்.

(ம) 57வது உட்பிரிவின் கீழ் மேலதிக நிதியமொன்றை அமைத்து நடத்துவதற்கான ஒழுங்கு விதிகளைத் தயாரித்தல் மற்றும் அந்நிதியத்தின் பணத்தை செலவழிக்கும் முறையினையும் தீர்மானித்தல்.

(ய) 59 வது உட்பிரிவின் படி பதிவாளரிடமிருந்து மேன்முறையீட்டு நீதிமன்ற தண்டப் பணத்திற்குரிய வைப்பீட்டு கணக்கை ஏற்படுத்துதல் வட்டிப் பண கணக்கொன்றை ஆரம்பித்தல் அவற்றின் முகாமைத்துவத்திற்காக ஒழுங்குவிதிகளைத் தயாரித்தலுக்கான சட்டங்களைத் தீர்மானிக்கலாம் எனினும் விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரின் தீர்மானத்தின்படி பதிவாளர் தேவையான ஒழுங்கு விதிகளைத் தயாரிக்கலாம்.

(ர) 42 (அ) உட்பிரிவின்படி அமைக்கப்பட்ட கூட்டுறவு நிதியத்தினை முகாமைத்துவம் செய்வதற்கான சட்டத்தின் மூலம் ஒழுங்கு விதிகளைத் தயாரிக்க வேண்டும் எனினும் விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரின் தீர்மானத்தின்படி பதிவாளர் தேவையான ஒழுங்கு விதிகளைத் தயாரிக்கலாம்.

(ல) இந்நியதிச் சட்டத்தின் கீழ் அதன் கீழ் தயாரிக்கப்பட்ட சட்டத்தின் கீழ் முறைப்பாடுகளை முன்வைத்தல், கேட்டல், அது பற்றி பொருத்தமானதை செய்தல் சம்பந்தமாக பாவிக்கக் கூடிய மாதிரிப்படிவங்கள், செலுத்த வேண்டிய வேறு கட்டணம், பின்பற்றப்பட வேண்டிய செயல் ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் அதோடு தொடர்புடைய வேறு சகல விடயங்களையும் தீர்மானித்தல்.

(வ) சங்கம் கணக்குப் பார்த்து மூடப்படும் போது தேவையான சொத்துக்களை சேகரித்தல், சங்கத்தின கடனாளிகளால் உரிமை கோரல்களை முன் வைக்கும் விதம் மற்றும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் பொறுப்புகளை செலுத்துதலுக்கு முறையான செயலொழுங்குகளை தீர்மானித்தல்.

(ச) 43 (4)வது உட்பிரிவின்படி சங்கத்தின் கணக்குகளைத் தயாரித்தலுக்கு மேலதிகமாக செலவழிக்கப்பட்ட பணம் அதைச் செய்யத் தவறியவர்களிடமிருந்து அறிவிடப்படுவதற்குரிய ஒழுங்குகளை தீர்மானித்தல்.

(ஸ) 63 வது உட்பிரிவின் கீழ் கூட்டுறவு வங்கி மற்றும் நிதி நிர்வாகத்தை செயல்படுத்துவதற்காக கொள்கைகளைத் தயாரித்தல், கொள்கை திட்டமிடல் சபைகளை நியமித்தல் அதற்குரிய வழிகாட்டலை தீர்மானித்தல்.

(3) (அ) அமைச்சர் அவர்களால் தயாரிக்கப்படும் சகல சட்டங்களும் வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டுமென்பதுடன் வெளியிட்டபின் சேர்க்க வேண்டிய சேர்க்க வேண்டிய வேறு ஒன்று சேர்க்கப்பட்ட பின்னொரு தினத்திலிருந்து அது செயல்பட வேண்டும்.

(ஆ) அமைச்சர் அவர்களால் தயாரிக்கப்படும் சகல சட்டங்களும் வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டுமென்பதுடன் வெளியிட்டபின் ஒரு மாதத்திற்குள் மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(இ) மாகாண சபையினால் அனுமதிக்கப்படாத ஏதாவது சட்டமொன்று அனுமதிக்கப்பட்ட தினத்திலிருந்து குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் ஏற்கனவே செய்யப்பட்ட செயல்பாடுகளுக்கு தடையேற்படாதவாறு திருத்தப்பட்டுள்ளதாக கருத வேண்டும். ஏதாவது சட்டம் திருத்தப்பட்டதாக கருதப்படும் தினம் பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும். 3 வது உப உட்பிரிவில் குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டபின் சகல சட்டங்களும் இவ்வாறு பிரசுரிக்கப்பட்டது போல் செல்லுபடியாகும் மற்றும் அதிகாரமுடையதாகவும் இருக்க வேண்டும்.

## XIII வது அத்தியாயம்

அரசுக்கு செலுத்த வேண்டிய கடன்

*அரசுக்கும் மாகாண சபைக்கும் செலுத்த வேண்டிய பணத்தை அறிவிடல்.*

62. (1) பதிவு செய்யப்பட்ட சங்கத்திடமிருந்து அல்லது பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் யாராவது பதவியாளரிடமிருந்து, அங்கத்தவரிடமிருந்து, அதன் முன்னால் உறுப்பினர்டமிருந்து அந்த நிலையில் அரசின் கடன் மாகாண சபையின் கடன் அரசு பிணை நின்ற கடன் மாகாண சபை பிணையாக நின்ற கடனுக்காக அறவிடப்பட வேண்டிய கடன் மற்றும் 46வது உட் பிரிவின் கீழ் அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணமும் உட்பட அரசுக்கு செலுத்த வேண்டிய சகல தொகையும் குடியரசுக்கு செலுத்த வேண்டிய கடனை அறிவிட்டுக் கொள்வதற்காக அரசின் கடனாளி கட்டளைச் சட்டத்தின் ஒழுங்கு விதிகள் தயாரிக்கப்பட்டுள்ள விதத்திலேயே அறவிட்டுக்கொள்ள வேண்டுமென்பதுடன் 40 (2)வது உட்பிரிவின் ஒழுங்கு விதிகளுக்கேற்ப வேறொருவருக்கு அல்லது பலருக்கு அறவிடப்பட வேண்டிய தொகைக்கு மேலதிகமாக அவற்றிற்கு முன்னுரிமை கிடைக்க வேண்டும்.

(2) பதிவு செய்யப்பட்ட சங்கத்திலிருந்து அரசுக்கும் மாகாண சபைக்கும் செலுத்த வேண்டி (1) வது உப உட்பிரிவின் கீழ் அறிவிடக்கூடிய முதலாவது சங்கத்தின் சொத்துக்களில் அறிவிடமுடியும். இரண்டாவது சங்கத்தின் பொறுப்புகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று சம்பந்தமாகும் போது அங்கத்தவர்களின் பொறுப்பு கூறும் எல்லைக்குள் அங்கத்தவர்களிடமிருந்தும் இரண்டாவது வேறு சங்கங்கள் பற்றியதாகும் போது அங்கத்தவர்களிடமிருந்தும் அறவிட்டுக் கொள்ள வேண்டும்.

## XIV வது அத்தியாயம்

கூட்டுறவு வங்கி மற்றும் நிதி நடவடிக்கைகளை வழி நடத்துதல்

*நிதி நடவடிக்கைகளை வழி நடத்தும் சபை.*

63. (1) மத்திய மாகாணத்தின் பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் வங்கி நிதி நடவடிக்கைகளை வழி நடத்துவதற்காக இதில் இதற்கு பிறகு வழி நடத்தும் குழு என அழைக்கப்படும் சபையொன்று மத்திய மாகாண கூட்டுறவு விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களால் நியமிக்கப்பட வேண்டும். அந்த வழி நடத்தலுக்காக வெளியிடப்பட்டள்ள கட்டளை ஆலோசனை வழிகாட்டலின்படி செயல்பட வேண்டியது சங்கங்களின் பொறுப்பாகும்.

(2) (அ) (1) வது உப உட்பிவின் கீழ் நியமிக்கப்பட்ட வழிகாட்டல் சபை ஐந்து அங்கத்தவர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்பதுடன் அது கீழ் வருமாறு,

i. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் பதிவாளர் பதவி வழியில் இச்சபையின் தலைவராக வேண்டும்.

ii. பட்டயக் கணக்காளர்.

iii. வங்கி நடவடிக்கைகள் பற்றி தகுதி வாய்ந்த தொழில் நிபுணர்.

iv. கூட்டுறவு திணைக்களத்தின் உதவி அல்லது பிரதி முகாமையாளர்.

v. மத்திய மாகாத்தில் வங்கி நிதி சேவைகளை வழங்குகின்ற பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், மத்திய அளவிலான கூட்டுறவுச் சங்க மற்றும் சிறு அளவிலான கூட்டுறவுச் சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் மூவர்.

(ஆ) i. இந்த தீர்வு குழுவின் கூட்டநடப்பின் மொத்த அங்கத்தவ எண்ணிக்கையில் அரை பங்குக்கு மேலதிகமாக வேண்டும்.

ii. அங்கத்தவர் இறந்தால், இராஜினாமாச் செய்தல் போன்ற காரணங்களினால் பதவி வெற்றிடமானால் எஞ்சிய காலப்பகுதிக்கு விடயப் பொறுப்பு அமைச்சரால் புதிய ஒருவரை நியமிக்க முடியும்.

iii. விடயப் பொறுப்பு அமைச்சர் எழுத்து மூல அறிவித்தலின் பின்பு தேவையான எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நியமிக்கப்பட்ட சபையின் அங்கத்தவர்களை நீக்க முடியும்.

(3) வழிகாட்டல் சபையின் கடமைகள் கீழ் குறிப்பிடும் விதத்திலானதாக இருக்க வேண்டும் :-

(அ) மத்திய மாகாண கூட்டுறவு சங்கங்களின் வங்கி மற்றும் நிதி சேவைகள் பற்றிய நல்லாட்சி மற்றும் நிதி நிர்வாகத்தையும் ஏற்படுத்துதல்.

(ஆ) நிதி வளத்தை உறுதிப்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.

(இ) வைப்பீடுகளின் பாதகாப்புக்கு உறுதியளித்தல்.

(ஈ) கூட்டுறவு வங்கிகளின் மனித மற்றும் பௌதீக வள அபிவிருத்தி.

(உ) இலங்கை மத்திய வங்கியால் காலத்திற்கு காலம் விடுக்கும் கட்டளை மற்றும் ஆலோசனைகளை பொருத்தமான விதத்தில் மத்திய மாகாண கூட்டுறவுத்துறைக்கு ஏற்புடையதாக்குதல் மற்றும் மேலேயுள்ள விடயங்கள் சம்பந்தமான கொள்கைகளைத் திட்டமிடல் அதற்குரிய வழிகாட்டல்கள் சட்டம், கட்டளை என்பவற்றை தயாரித்தல் மேற்பார்வை, மதிப்பிடல் மற்றும் வழிகாட்டலும் அதில் குறிப்பிட்டுள்ள விடயம் சம்பந்தமாக மத்திய மாகாண கூட்டுறவு ஆணையாளர் மற்றும் பதிவாளருக்கு தகவல்களையும் ஆலோசனைகளையும் வழங்குதல்,

(4) சங்கத்திற்கு மாதாந்தம் மற்றும் வருடாந்தம் பங்களிப்பு கொடையாக அறவிட வழிகாட்டல் சபை அல்லது பதிவாளரால் தீர்மானிக்கப்படும் நிதியத்தின் மூலம் பதிவாளரால் மாகாண வங்கி வழி நடத்தல் பேணப்பட வேண்டும். விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரால் அனுமதிக்கப்படும் வருடாந்த திட்டமிடலின்படி அந்நிதியத்தின் நிதியை செலவிட பதிவாளருக்கு அதிகாரமுண்டு.

(5) இந்த யாப்பின்படி நியமிக்கப்படும் வழிகாட்டல் சபைக்காக விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரால் தீர்மானிக்கப்பட்டும் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டுமென்பதுடன் அக் கொடுப்பனவுக்காக செலவழிக்கப்படும் செலவு மாகாண வங்கி நிதியத்திற்கு செலவுத் தலைப்பில் இருக்க வேண்டும்.

## XV **ஆவது அத்தியாயம்**

### பல்வேறு விடயங்கள்

*பதிவு செய்யதல் சம்பந்தமான விதிகளின் ஏதாவது சங்கமொன்றை விடுவிக்க அமைச்சருக்கு இருக்கும் விசேட அதிகாரம்.*

64. இந்நிகழ்ச்சித் திட்டத்தில் என்ன குறிப்பிட்டிருந்தாலும் அதைப் பொருப்படுத்தாது மத்திய மாகாண சபையின் கூட்டுறவு விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் விசேட பணிப்புரையின் பேரில் அவரால் நிச்சயிக்கப்படும் நிபந்தனைகளுக்கு ஏற்ப பதிவு செய்தல் சம்பந்தமாக இந்நியதிச் சட்டத்தில் உள்ள சில விதிகளில் ஏதாவது ஒரு சபையை விடுவிக்க முடியும்.

*இந்நிகழ்ச்சித் திட்டத்தின் ஒழுங்கு விதிகளில் சங்கத்தைக் கலைக்க அமைச்சருக்குள்ள விசேட அதிகாரம்*

65. மத்திய மாகாண சபையின் கூட்டுறவு விடயப் பொறுப்பு அமைச்சரால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் விசேட ஆணையின் மூலம் அவரால் நிச்சயிக்கப்படும் நிபந்தனைகளுக்கேற்ப இந்நியதிச் சட்டத்தில் உள்ள வழிகளில் சில ஏதாவது சங்க வகை. ஏதாவது சங்கத்தைக் கலைக்க முடியும்.

*பணத்தை மீளச் செலுத்தவோ ஏனைய சொத்துக்களை மீளஒப்படைக்கவோ பதிவாளரால் தீர்மானிக்க முடியுமென்பதுடன் மேலதிக தண்டனை வழங்கவும்முடியும் என்பது.*

66. (1) பதிவு செய்யப்பட்ட சங்கம் சம்பந்தமாக **44** ஆவது சட்டப் பிரிவின் கீழ் கணக்காய்வின் போதோ **46** ஆவது உட்பிரிவின் கீழ் விசாரணையின் போதோ புத்தகங்களை பரிசீலணை செய்யும் போதோ **47** ஆவது உட்பிரிவின் கீழ் சங்கத்தின் பணம், புத்தகங்கள் பரிசீலணை செய்தல் மற்றும் அதன் வேலைகளை விமர்சித்தல் அல்லது கணக்குகளைப் பார்த்து மூடப்படும் போது சங்கத்தை அமைப்பாக்கும் போது அதன் முகாமைத்துவத்தில் கலந்து கொண்டுள்ள இந்நியதிச் சட்டத்தில் அல்லது வேறு சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கேற்ப அல்லது அதன் கீழ் தயாரிக்கப்படும் சட்டங்களுக்கோ கட்டளைகளுக்கோ அல்லது சங்கத்தின் இடைக்கால யாப்புக்கோ நிர்வாக சட்டங்களுக்கோ ஏற்ப அல்லது பதிவாளரால் அனுமதிக்கப்பட்ட நிதி செயல் ஒழுங்கு விதிகளுக்ககேற்ப பதிவாளரால் அல்லது கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட

சுற்றுநிருபம் அல்லது ஏதாவது பொது விதிகளுக்கு மாறாக சங்கத்தின் பணத்தை பயன்படுத்திய ஒருவரிடமிருந்து அல்லது பலரைக் கொண்ட குழுவிடமிருந்து சங்கத்தில் இருந்த, தற்போது இருக்கும் யாராவது ஒரு பதவி வழியாளரிடம் அல்லது ஊழியரிடமிருந்து ஏதாவது பணம் அல்லது சொத்து கிடைக்க வேண்டுமெனத் தெரிய வரும் போது தேவைக்கேற்ற வகையில் பதிவாளரால் தமது விருப்பத்தின் பேரில் அல்லது சங்கத்தின் பொது சபையின் நிருவாகக் குழுவின் இயக்குனரின் விண்ணப்பத்தின் பேரில் அவரின், அவர்களின் பலரைக் கொண்ட குழுவின் பதவி வழியாளர்களின் ஊழியர்களின் நடத்தைகள் சம்பந்தமாக விசாரணைகள் செய்து

(அ) அப்பணம் அல்லது ஒரு பகுதியை பதிவாளர் பொருத்தமானது எனக் கருதும் போது வட்டியுடன் திருப்பிச் செலுத்துமாறு,

(ஆ) அந்த வேறு சொத்துக்கள் அல்லது அவற்றின் ஒரு பகுதியை திருப்பிச் செலுத்துமாறு,

(இ) சங்கத்தின் சொத்துக்களுக்கு பதிவாளர் பொருத்தமானது என நினைக்கும் ஏதாவது பங்களிப்புக் கொடையினை நட்ட ஈடாக கொடுக்கலாம். அவருக்கு அல்லது குழுவினருக்கு தீர்மானித்து, ஆணையிட முடியும். அவ்வாறான ஒருவருக்கு பலரைக் கொண்ட குழுவினருக்கு எதிராக அவ்வாறாக ஆணையிட முன்பு பதிவாளரால் அந்த ஆணையை விடுக்காதது ஏன், என்பதை விளக்குவதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

(2) பதிவு செய்யப்பட்ட சங்கத்திற்கு மீள செலுத்துவதற்காக அதன் சொத்துக்களுக்கு ஏதாவது பணிக்கொடை நட்டயீடாக செலுத்த வேண்டுமானால் (1) உப பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஆணையின் படி செயல்படாத சந்தர்ப்பத்தில் அந்த ஆணையில் குறிப்பிட்ட தொகையை வட்டி இருப்பின் சான்றிதழோடு பெறுமதியை அறவிடுவதற்காக அந்த தொழில் நடைபெற்ற அல்லது பணிப்புரை விடுக்கப்பட்டது. யாராவது ஒருவருக்காயின் குழுக்களுக்காயின் அந்த பதவியான, ஊழியருக்கு எதிராக அவரால் பதவியான, ஊழியருக்கு வசிக்கும் பிரதேசத்தின் நீதிமன்ற அதிகாரமுடைய நீதவானுக்கு விண்ணப்பிக்க முடியும் அந்த விண்ணப்பம் கிடைத்தவுடன் நீதவானால் அந்த சான்றிதழில் குறிப்பிடப்பட்ட தொகை சிறைச்சாலைக்கு செலுத்திய பின் தண்டனை வழங்க முடியாது.

தண்டனையின் மூலம் மட்டும் தண்டனை வழங்கக்கூடிய குற்றத்திற்காக அவர் அல்லது பலர் பதவியாளர் அல்லது ஊழியர் சம்பந்தமாக நீதவானின் தண்டம் நியமிக்கப்பட்டதுடன் பணமாயின் அறவிடப்படலாம். 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் வழக்கு சட்டக் கோவையின் 291ஆவது உப்பிரிவின் படி (அந்த உப்பிரிவின் முதலாவது உப உப்பிரிவின் (அ) (ஆ) பந்தி தவிர ஒழுங்கு விதிகளுக்கு மேலானதாக இருக்க வேண்டும் நீதவானால் செய்யக்கூடியதாக இருந்த ஏதாவது ஆணை பதிவாளரால் ஆணையின் உண்மை தன்மையை இந்த சரத்தின் கீழ் எந்த ஒரு சட்ட விதியையும் கருத்தில் கொள்ளாது விசாரிக்க அல்லது தீர்மானிக்க நீதவானுக்கு இந்த உப்பிரிவின் எந்தவித அதிகாரமோ உரிதியோ இருக்க கூடாது.

(3) மேலே (2) ஆவது உப்பிரிவின் படி அறவிடப்பட்ட பணம் நீதவானால் தேவைக்கு ஏற்ப மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், பதிவாளருக்கு அனுப்ப முடியும் என்பதுடன் பணிப்பாளரால் அந்த பணத்தை பொருத்தமான விதத்தில் கூட்டுறவு சங்க நிதியத்துக்கு அனுப்ப வேண்டும்.

(4) வேறு ஒரு எழுத்து மூல சட்டத்தின் கீழ் குற்றம் சம்பந்தமாக (1) ஆவது உப பிரிவில் குறிப்பிடப்பட்ட ஒருவருக்கு பலருக்கு பதவியாளருக்கு ஊழியருக்கு எதிராக வழக்கு தொடர்தல், நடத்துதல் இந்த உப்பிரிவில் எதற்கு முன் இருந்த ஒழுங்கு விதிகளுக்கு அதன் கீழ் ஆணையிடுவதை காரணமாக கொண்டு தடுக்குமாறு அதன் மீது வேறு விதத்தில் கருதுவதற்கோ விளங்கவோ முடியாது.

அங்கத்தவர்களின் பெயரிடல்.

67. (1) பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் நடவடிக்கைகளின் செயற்திறனோடு முகாமைத்துவம் செய்தல், உறுதி செய்யும் விடயத்திற்காக அல்லது மாகாண சபை அல்லது ஏதாவது அரச வங்கி அல்லது அரச கூட்டுத்தாபனத்தால் அந்த பதிவு செய்யப்பட்ட சங்கம் சம்பந்தமாக செய்யப்படும் முதலீடு அல்லது அதற்கு பணத்தால், பொருளால் வழங்கப்படும் முற்பணம் அல்லது பாதுகாப்பதற்குத் தேவையான சந்தர்ப்பத்திற்கேற்றவாறு என பதிவாளர் நினைக்கும் சந்தர்ப்பத்தில் இந்நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது வேறு சட்டத்தில் அந்த பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் இடைக்கால சாசனத்தில் அதற்கு முரணாக எது குறிப்பிடப்பட்டாலும் அதற்குத் தேவையென சந்தர்ப்பத்திற்கேற்ப அவர் கருதுபவர்கள் அந்தப் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் நிர்வாகக் குழுவின் அங்கத்தவர்களாக அல்லது நிர்வாக சபையொன்று இல்லாத போது நிர்வாக சபையின் அங்கத்தவர்களாக அவரால் பெயரிட முடியும்.

*(2) (1) ஆவது உப பிரிவின் கீழ் நிர்வாகச் சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை அந்த சங்கத்தின் இடைக்கால சாசனத்தின்படி நிர்வாக சபையில் இருக்க வேண்டிய அங்கத்தவர்களின் மொத்த எண்ணிக்கையின் அரைவாசிக்குக் குறைவாக இருக்க வேண்டும்.*

*(3) (1) ஆவது பிரிவின் கீழ் நிர்வாக சபையின் அங்கத்தவர்கள் பெயரிடப்படும் போது நிர்வாக சபையின் அங்கத்தவர்கள் ஐந்து பேருக்கு மேற்படாதவர்களை நியமிக்க முடியுமென்பதுடன் அதில் இரண்டு பேராவது கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களாக இருக்க வேண்டும். சங்கத்தின் பதிவு செய்தல் இடைக்கால சாசனத்தில் எது குறிப்பிடப்பட்டிருப்பினும் இந்த உட்பிரிவின் கீழ் நியமிக்கப்படும் நிர்வாகச் சபையின் கூட்ட நடப்பெண் நியமிக்கப்பட்ட நிர்வாகச் சபையின் அங்கத்தவர் எண்ணிக்கையில் அரைவாசிக்குக் குறையக் கூடாது.*

*சொத்துக்களையும் பொறுப்புக்களையும் அறிவித்தல்.*

*68. (1) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் தலைவராலும் மற்றும் நிர்வாகக் குழுவின் சகல உறுப்பினர்களாலும் வருடந்தோறும் கூட்டுறவு அறிவித்தல் ஆணையாளருக்கு குறிப்பிட்ட மாதிரிப் படிவத்தில் சொத்துக்கள், பொறுப்புக்கள் அறிக்கை, அந்த அறிக்கை வெளியிடுவது எந்த வருடத்திற்காகவெனவும் அந்த வருடத்தின் மார்ச் முப்பத்தியோராம் திகதிக்கு உள்ளவாறும் (2) பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் மீள செலுத்துவற்கு அதன் சொத்துக்ககளுக்கு பங்களிப்பு தொகையொன்றை நட்டஈடாக செலுத்துவற்காக*

*(அ) அவரது சகல சொத்துக்களைப் பற்றியும் ;*

*(ஆ) அவரது அடுத்த உரித்தாளிகளின் சொத்துப் பத்துக்களைப் பற்றியும் ;*

*(இ) அவரது ஒவ்வொரு பிள்ளையினதும் சொத்துப் பத்துக்களைப் பற்றியும் அறிவிக்கப்படல் வேண்டும்.*

*(2) (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கூற்று பதிவு பெற்ற சங்கமொன்றின் தலைவராலோ, செயற்குழு அங்கத்தவர்களாலோ, கூட்டுறவு ஆணையாளருக்குச் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு செயற்குழுவின் உறுப்பினரைத் தெரிவு செய்வதற்கு நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்படுகின்றதினத்திலிருந்து மூன்று மாதத்திற்குள் அவர் தலைவர் பதவி அல்லது அங்கத்துவப் பதவி நிறுத்தப்பட்டால் அன்றி அவர் முதலில் வெளியிட்ட வருடத்தின் பின் ஒவ்வொரு வருடத்திலும் யூலை மாதம் 30 ஆம் திகதிக்கு முன் ஒக்கடைக்க வேண்டும்.*

*(3) 2வது உப பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தில் சொத்துக்கள் வைப்புகள் பற்றி அறிவிக்காத பதிவி செய்ப்பட்ட சங்கத்தின் தலைவர் நிர்வாக குழு உறுப்பினர்கள் அத்தவறினை செய்தமைக்காக மட்டும் தலைவர் அல்லது ஏனைய பதவிகள் நீக்கப்படும்.*

*வேலைத்திட்ட நிதியத்தை ஏற்படுத்துதல் நடைமுறைப் படுத்தலுக்குறிய ஒழுங்கு விதிகள்*

*69. மத்திய மாகாண பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்களின் பொருளாதார சமூக பௌதீக அபிவிருத்திக்காக -*

i பல்வேறு வேலை திட்டங்களை திட்டமிடுதல் நடைமுறைப்படுத்துதல் பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக சங்கத்தை ஈடுப்படுத்துதல் ;

ii பல்வேறு நிதியங்களை ஏற்படுத்தி நடத்துதல் ;

iii *அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தேவையான வசதிகளை ஏற்படுத்துதல், வழங்குதல் மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், பதிவாளர் அவரால் அனுமதி அளிக்கப்படும் மாவட்ட பிரதி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது சட்டமாகும்.*

*70 தமது நிலைமைக்கேற்ப ஏதாவது பணம், பொருட்கள், சொத்துக்கள் பற்றி பொறுப்பாகவிருக்கும் அல்லது பொறுப்பாக இருந்த பதிவாளர், அங்கதர், ஊழியராக தம்மிடம் வைத்திருந்த, தம்மிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தம்மால் கையொப்பம் வைக்கப்பட்ட கணக்குப் புத்தகங்களில் காட்டும் ஏதாவது பணம் அல்லது அதன் மிகுதியைச் செலுத்துமாறு அல்லது பொருட்களின் பெறுமதியினைச் செலுத்துமாறு பணிப்பாளர் அவருக்கு ஆணையிடல் சட்டரீதியானதாகும்.மேலும் அவ்வாறு குறித்துரைக்கப்பட்டதன் பின்னர்*

அவரால் அப்பணத்தினை, அதன் மிகுதியினை அல்லது பொருட்களின் பெறுமதியினை செலுத்தல் அல்லது முறையாகக் கணக்குக் காட்டுதல் என்பதிலிருந்து தவிர்த்துக் கொள்ளல் என்பது அவர் மோசமான நம்பிக்கைத் துரோகம் செய்ததற்கு குற்றவாளியாக்கப்படுவதுடன் நீதவான முன்னிலையின் நடத்தை வழக்கின் பின்னர் குற்றவாளியாக்கப்பட்டால் 10 வருடத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனை, தண்டப் பணம் என இரண்டிற்கும் ஆளாக நேரிடும்.

ஏதாவது தகவல்களை முன்வைக்குமாறு பதிவாளரால் வங்கிக்கு தீர்மானிக்க முடியும்.

71. (அ) (ஏனைய எந்தவொரு சட்டத்திலும் எப்படிக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதைக் கருத்திற் கொள்ளாது பதிவாளரால் தேவை என கருதும் போது ;

(ஆ) ஏதாவது பதிவு செய்யப்பட்ட சங்கத்தினால் வங்கியுடன் செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமான தகவல்களை வழங்குமாறு ;

(இ) வங்கியுடன் இருக்கும் சங்கத்திடம் கணக்கைக் காட்டும் பிரதியொன்று வங்கியில் வைத்திருக்கும் பேரேட்டினைச் சமர்ப்பிக்குமாறு ; அல்லது

(ஈ) வங்கியினால் வைப்பிற்குச் செலுத்தப்படும் சங்கத்தினால் வெளியிடப்பட்ட ஏதாவது காசோலையைச் சமர்ப்பிக்குமாறு சங்கத்தின் இடைக்கால சாசனத்தின் மூலம் பதிவாளர்களைத் தெரிவு செய்தல் முறையாக மேற்கொள்ளப்படவில்லை. இந்நியதிச் சட்டத்தின் 46 ஆவது உட்பிரிவில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அல்லது புத்தகங்கள் பற்றிய விசாரணையின் பின் 47 ஆவது உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட விசாரணையின் கீழ் கவலைக்குரியதாக பதிவாளர் நினைக்கும் வங்கியின் கணக்கை தற்காலிகமாக நிறுத்துமாறு ஆணையிடலாம்.

## XVI ஆவது அத்தியாயம்

நீக்குதல் இடைக்கால ஏற்பாடுகள்

நீக்கப்பட்ட நியதிச் சட்டத்தின் கீழ் நிபந்தனைகள் மற்றும் தற்போதைய சங்கங்கள்

72. (1) இந்நியதிச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகையில் இதுவரை நடாத்தப்பட்ட அரச சபையின் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க சட்டம் மற்றும் மத்திய மாகாணத்தின் 1993 ஆம் ஆண்டின் 04 இலக்க கூட்டுறவு சங்க (திருத்தப்பட்ட) நியதிச் சட்டத்தின் திருத்தப்பட்ட மத்திய மாகாண 1990 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க கூட்டுறவு நியதிச் சட்டம் அல்லது அச்சட்டங்களின் ஊடாக செல்லுபடியற்தாகக்கப்படும் ஏதாவது நியதிச் சட்டங்களின் மூலம் பதிவு செய்யப்பட்ட அனைத்து சங்கங்களும் பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் எனக் கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் அச்சங்கத்தின் இடைக்கால ஏற்பாடுகள் மாற்றப்பட்ட அல்லது மீண்டும் புதுப்பிக்கப்படும் வரை இந்நியதிச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கும் வகையில் மட்டும் நடைமுறையிலிருக்கும்.

(2) இந்நியதிச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகையில் இதுவரை நடாத்தப்பட்ட அரச சபையின் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கச் சட்டம் மற்றும் மத்திய மாகாணத்தின் 1993 ஆம் ஆண்டின் 04 இலக்க கூட்டுறவு சங்க (திருத்தப்பட்ட) நியதிச் சட்டத்தின் திருத்தப்பட்ட மத்திய மாகாண 1990 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க கூட்டுறவு நியதி. இந்நியதிச் சட்டம் ஆரம்பிக்கப்படுகையில் நடைமுறையிலிருந்த சகல நியதிச் சட்டங்களும் இதன் ஒழுங்கு விதிகளுடன் பொருந்த வேண்டும் என்பதுடன் இதற்குப் பதிலாக 61 ஆவது உட்பிரிவின் கீழ் புதிய சட்டங்கள் தயாரிக்கப்படும் வரையில் தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும்.

(3) இந்நியதிச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகையில் இதுவரை நடாத்தப்பட்ட அரச சபையின் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க சட்டம் மற்றும் மத்திய மாகாணத்தின் 1993 ஆம் ஆண்டின் 04 இலக்க கூட்டுறவுச் சங்க (திருத்தப்பட்ட) நியதிச் சட்டத்தின் திருத்தப்பட்ட மத்திய மாகாண 1990 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க கூட்டுறவு நியதிச் (சகல நியமனங்களும் செய்யப்படும் அல்லது செய்யப்பட்டதாக கருதப்படும் சகல நியமிக்கப்பட்ட விநியோகிக்கப்பட்டுள்ளதெனக் கருத்ப்படும் சகல அறிவித்தல், அறிக்கைகளும், வழங்கப்பட்டதாகக் கருத்துப்படும் சகல சிவில் வழக்குகள், வேறு சட்டக் கோவைகள் மற்றும் தோன்றியுள்ள சகல பிணக்குகளும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் முறையே வழங்கப்பட்டதாக, வழங்கப்பட்டதாக, தோன்றியதாகக் கருதப்பட வேண்டும்.

73. ஏதாவது வருடத்தில் வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஏதாவது சங்கத்தினால் அதன் வைப்பு பணச் சட்டம் கோவையின் V ஆவது அத்தியாயத்தில் II ஆவது பிரிவின் கீழ்க் காப்புறுதி செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அப்பகுதியின் கீழ் காப்புறுதி வைப்பீட்டுக்குரிய சொத்துக்கள் இச்சட்டத்தின் ஏனைய ஒழுங்கு விதிகளில் எவை குறிப்பிடப்பட்டிருப்பினும் கருத்திற் கொள்ளாது அந்த வைப்பிற்குரிய பொறுப்புக்களை தீர்க்கப்படாத வேறு விடயங்களுக்கு பயன்பாட்டிற்காகக் கொடுக்கக் கூடாது.

*நிதிச் சட்டக் கோவையின் கீழ் பாதுகாப்பு வைப்பீடுகளுக்குரிய சொத்துக்கள், பொறுப்புக்கள் தீர்த்தலுக்காகவன்றி பயன்பாட்டிற்கு எடுக்கக் கூடாது.*

74. பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் ஏதாவது விடயம் தொடர்பாக விசாரணை, பரிசீலனை 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் வழக்கு மசோதாவின் XVII ஆவது அத்தியாயத்தின் கீழ் வரும் வழக்குத் தொடரல், நடாத்துதலை பதிவாளரினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அரச உத்தியோகத்தரால் செய்வது சட்டரீதியானதாகும்.

*வழக்குத் தொடுத்தல் நடாத்துதல் யாருக்காகச் செய்ய வேண்டும்?*

75. (1) இந்நியதிச் சட்டத்தின் செயல்களுக்காக பதிவாளரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் வங்கி மற்றும் நிதி சம்பந்தமாக அல்லது தகவல்களை வழங்குதல் வேண்டுமென்றே நிராகரிக்கும் சகல பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் மற்றும் அவற்றின் உத்தியோகத்தர்கள் இந்நியதிச் சட்டத்தின் மூலம் விடுக்கப்படும் ஏதாவது கட்டளைக்கு அல்லது சட்ட ரீதியான ஏதாவது எழுத்து மூல கோரிக்கைக்கு வேண்டுமென்றே அல்லது நியாயமான காரணமின்றி கீழ்படியாத, தகவல்ளை வழங்காத சகல பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் மற்றும் அதன் உத்தியோகத்தர்கள் குற்றவாழிகளாக கருதப்படுவர்.

*நியதிச் சட்டத்தின்படி செயற்படாமைக்கான தண்டனை*

(2) (1) ஆவது உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றம் புரியும் சகலரும் நீதவான முன்னிலையில் குற்றவாளிகளாகத் தீர்மானிக்கப்பட்டால் இரண்டு வருடத்திற்கு மேற்படாத சிறை மற்றும் இருபத்தைந்தாயிரம் (ரூபா 25,000) ரூபாவிற்குட்பட்ட ஆகிய இரண்டிற்கும் அல்லது அத்தண்டம் நீதவானின் பொது நீதிமன்ற அதிகாரத்திற்கு அதிகமானாலும் அவர் கட்டுப்பட வேண்டும்.

(3) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று இந்நியதிச் சட்டத்தின் கீழ் குற்றம் செய்யும் போது அது ஏதாவது கடமையை மீறியதானாலும் அக்கடமைகளை நிறைவேற்ற இடைக்கால சாசனத்தின் மூலம் கட்டுப்பட்டுள்ள அச்சங்கத்தின் சகல பதவியாளர்களும் அப்படிப்பட்ட பதவியில் இல்லாத நிர்வாகக் குழுவின் சகல உறுப்பினர்களும் அவர் அத்தவறு பற்றி தெரியாமலிருந்ததாக அல்லது அதைத் தடுக்க முயற்சித்தமை பற்றி உறுதியளிக்கத் தவறின் அவர் அத்தண்டனைக்கு உட்பட வேண்டும்.

76. இந்நியதிச் சட்டத்தின் கீழ் தமது கடமைகளை நிறைவேற்றும் போது நேர்மையாகச் செய்யப்பட்ட ஏதாவது செயல்கள் பற்றி பதிவாளருக்கு, சிரேஷ்ட உதவி, பிரதி ஆணையாளருக்கு இந்நியதிச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப விடுக்கப்படும் சட்டத்தின் மூலம் அல்லது பதிவாளரால் முறையாக அதிகாரமளிக்கப்படும் வேறொரு நபருக்கு எதிராக எந்தவொரு குற்றவியல் அல்லது சிவில் வழக்குகளையும் தொடர முடியாது.

*பதிவாளரின் மற்றும் அவரால் அதிகார மளிக்கப்பட்டவரின் செயல்பாடு சம்பந்மான பாதுகாப்பு.*

77. (1) ஐக்கிய உதவியாளர் எனும் சொல் அல்லது கூட்டுறவு எனும் சொல் தமிழில் ஐக்கிய எனும் சொல்லையோ கூட்டுறவு எனும் சொல்லையோ ஆங்கிலத்தில் 'கோப்பரேடிவ்' (Co-operative) எனும் சொல்லின் பகுதியான ஏதாவது பெயர் அல்லது தலைப்பின் கீழ் வியாபாரம் செய்தல் அல்லது வியாபாரத்தினை, பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று இல்லாத எவராலும் மத்திய மாகாண கூட்டுறவு விடயப் பொறுப்பு அமைச்சரின் அனுமதியின்றி செய்யப்படக் கூடாது. எனினும் 1921, செத்தெம்பர் மாதம் இருபத்திரண்டாம் திகதிக்கு முன்னர் யாதாயினும் ஒருவரால் இந்தத் தலைப்பின் கீழ் வியாபாரம் செய்தல் தொடர்பாக இந்த உட்பிரிவில் எதுவும் பொருந்தாது.

*"கூட்டுறவு" எனும் சொல்லின் பாவனையைக் கட்டுப்படுத்தல்.*

(2) இந்த உட்டபிரிவின் விதிகளை மீறும் யாதாயினும் ஒருவர் மஜிஸ்ட்ரேட் நீதிமன்றில் குற்றவாளியாகத் தீர்மானிக்கப்பட்டால் இருப்பத்தையாயிரம் ரூபா (ரூபா 25,000) தண்டத்திற்கு உட்படும் அதேவேளையில் தொடர்ந்து இந்த தவறினை புரிந்தால் குற்றவாளியாகத் தீர்மானிக்கப்பட்ட பின்னர் தவறினைப் புரியும் ஒவ்வொரு தடவைக்கும் ஆயிரம் ரூபா (ரூபா 1,000) இற்கு மேலதிகமான தண்டத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும்.

78. கூட்டுத்தாபன கட்டளைச் சட்டத்தின் மற்றும் தொழிற்சங்க கட்டளைச் சட்ட ஒழுங்கு விதிகள் அந்த கட்டளைச் சட்டம் திருத்தம் ஏதாவது நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கத்திற்கு ஏற்புடையதாகாது.

*கூட்டுத்தாபன கட்டளைச்சட்டம் தொழிற் சங்க கட்டளைச் சட்டம் ஏற்புடையதாகாது என்பது.*

*1990 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க மத்திய மாகாண கூட்டுறவு சங்க நியதிச் சட்டத்தினை இரத்து செய்தல்.*

79. இந்த நியதிச் சட்டம் மத்திய மாகாண ஆளுநர் அவர்களின் அனுமதி கிடைத்து நடைமுறைக்கு வரும் தினத்திலிருந்து 1990 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க மத்திய மாகாண சபையின் கூட்டுறவு சங்க நியதிச் சட்டம் மற்றும் 1993 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க மத்திய மாகாண சபையின் கூட்டுறவு சங்க திருத்த நியதிச் சட்டம் இரத்து செய்யப்பட்டதாக கருத வேண்டும்.

80. இந் நியதிச் சட்டம் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளுக்கிடையில் ஏதாவது ஏற்புடையதற்ற நிலை ஏற்பட்டால் அப்போது சிங்கள மொழிப் பதமே அதிகாரம் பெறும்.

*பதவிளக்கம்.*

81. பதம் சம்பந்தமாக வேறு கருத்துக்கள் தேவைபட்டாலன்றி இந்த நியதிச் சட்டத்தின் 'இடைக்கால அரசியலமைப்பு' எனும் இப்போது அதிகாரத்திலிருக்கும் பதிவு செய்யப்பட்ட இடைக்கால அரசியலமைப்பு என கருதப்படுவதுடன் அந்த இடைக்கால அரசியலமைப்பில் பதிவு செய்யப்பட்ட திருத்தம் சேர்க்கப்படுகிறது.

"நிர்வாகக் குழு" என்பது பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் நடவடிக்கைகள் பற்றி முகாமைத்துவத்தை பொறுபேற்கும் அந்தச் சங்கத்தின் நிர்வாக கால என்பதுடன் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் பணிப்பாளர் சபை மற்றும் 48உம் 67வது உட் பிரிவின் கீழ் பதிவாளரால் நியமிக்கப்படுபவர்கள் அதில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

'பதிவாளர்' என்பதற்கு சங்கத்திற்கு அல்லது அதன் ஏதாவது கிளையில் தலைவர், உப தலைவர், செயலாளர், பொருளாளர் அல்லது முகாமையாளர் அல்லது சங்கத்தின் நிர்வாகக் குழுவின் அங்கத்தவர் அல்லது சங்கத்தின் நடவடிக்கைகள் சம்பந்தமான கட்டளையிட முறையாக அதிகாரமளிக்கப்படும் வேறொருவர் எனப்படும். வங்கி என்பது,

(அ) மக்களின் விண்ணப்ப முதலீட்டினை பொறுப்பெடுக்கும் அல்லது விண்ணப்பவைப்பீட்டுத் தொகையினை ஏற்படுத்தும் வியாபாரம் இலங்கைக்குள் சட்டமாக்கப்பட்ட சட்டமாக்கப்படாத ஏதாவது தனி நபர் அல்லது பல குழுக்கள்.

(ஆ) அரசுக்காக செயல்படும் மற்றும் கடன் வழங்குதல், முற்பணத்தை கொடுத்தல் அல்லது முதலீடு செய்தலுக்குட்படும் மக்களிடமிருந்து வைப்புகளைப் பொறுப்பெடுக்கும் (ஏதாவது எழுத்து மூல சட்டத்தின் மூலமாக ஏதோவொரு வகைகளில் ஸ்தாபிக்கப்பட்ட) ஏதாவது பிரதிநிதித்துவ நிறுவனம்.

(இ) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்படும் இலங்கையின் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் ; மற்றும்

(ஈ) கூட்டுறது விடயப் பொறுப்பு கெபினெட் அமைச்சரிடம் கேட்டு நிதி விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களால் வர்த்தமானிக் கருமங்களுக்காக வங்கியாக வெளியிடப்பட்ட வேறு எவரொருவரும் அல்லது பலர் எனப் பொருள்படும்

'அடிப்படைச் சங்கம்' என்பது 3 உட்பிரிவின் (அ) பந்தியில் குறிப்பிப்படும் ஏதாவது நோக்கத்துடன் ஏதாவது கருமங்களுக்காக ஸ்தாபிக்கப்படும் சங்கமில்லாத பதிவு செய்யப்பட்ட "சட்டம் சங்கம் எனப் பொருள்படும். 'சட்டம்' என்பது இந்நியதிச் சட்டத்தின் கீழ் விதந்துரைக்கப்பட்டதாக கருதப்படும் சட்டம் எனப்படும்.

"அரசின் நிதி" என்பது அரசினால் வழங்கப்படும் கடன், முற்பணம் மற்றும் பங்களிப்பு என்பதுடன் நியதிச்சட்டத்தின் 42 வது 59 வது 63 வது உட்பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட நிதியத்திலிருந்து வழங்கப்படும் கடனுதவி அல்லது முற்பணம் என்பது உள்ளடங்கும். இந்த சகல கொடுப்பனவுகளும் அரச கணக்காளர் நாயகத்தின் நிதியத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் கணக்காய்வுக்கு உட்பட வேண்டும்.

"பதிவாளர்" என்பது இந்நியதிச் சட்டத்தின் கீழ் மத்திய மாகாண சபையின் கூட்டுறவு சங்கப் பதிவாளரின் கடமைகளை நிறைவேற்ற செய்யப்படுவர் என பொருள்படும்

'ஆணையாளர்' என்பது இந்நியதிச்சட்டத்தின் கீழ் மத்திய மாகாண சபையின் கூட்டுறவு சங்க ஆணையாளரின் கடமைகளை நிறைவேற்ற நியதிக்கப்படுபவர் எனப்படும்.

'பதிவு செய்யப்பட்ட சங்கம்' என்பது இந் நியதிச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சங்கம் எனப்படும்.

அங்கத்தவர் என்பது 3(ஆ) ஆம் உப உட்பிரிவின் ஒழுங்கு விதிகளுக்குட்பட்டு சங்கத்தினை பதிவு செய்வதற்காக விண்ணப்பித்துள்ள கலந்து கொண்ட அல்லது பதிவு செய்யப்பட்ட பின்பு சட்டம் மேலதிக சாசனத்தின்படி அங்கத்துவத்திற்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட வேறு எந்தவொரு சட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்ட வேறு எந்தவொரு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு சட்ட ரீதியானவர் என்பவர் என பொருள்படும்

'பொதுச் சபை பிரதி நிதிகள்' என்பது பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் இடைக்கால சாசனத்தில் சுட்டிக்காட்டப்படும் பிரதிநிதி ஆவார்.

'அமைச்சர்' என்பது இந்த சட்டத்தின் கீழ் மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களின் கடமைகளை நிறைவேற்ற நியமிக்கப்பட்டவர் என பொருள்படும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.